# தமிழகச் செப்பேடுகள்

தொகுதி-1



7858
ND

பதிப்பாசிரியர்

**தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்

# தமிழகச் செப்பேடுகள்

## தொகுதி - 1

A. No. 7858
ND

பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர்

உதவி பதிப்பாசிரியர்

முனைவர் சு. இராஜகோபால்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

2005

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title | : | **Tamilaka Seppedukal Vol. 1** |
| Editor | . | Spl. Commissiour |
| Copy Right | : | T.N State Dept. of Archaeology |
| Subject | : | **Epigraphy** |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 157 |
| Year | : | 2005 |
| Type Point | : | 11 |
| No. of Pages | : | xxvi+238 |
| Paper Used | : | 100 Gsm Maplitho |
| Printer | : | Attractive Printers<br>Thiruvalluvar Nagar<br>Kottur, Chennai - 85 |
| Publisher | : | **State Dept. of Archaeology<br>Tamizh Valakam, Halls Road**<br>Egmore - 600 008 |
| Price | : | Rs.52/- |

# தமிழகச் செப்பேடுகள்

## தொகுதி - 1

# பதிப்புரை

தமிழகத்தில் எழுதப்படும் பொருள்களாகக் கல், ஓலை, உலோகம், மரம், சங்கு, துணி, காகிதம், சுடுமண் எனப் பல்வகைப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கல், ஓலை, செம்பு ஆகியவற்றின் பயன்பாடு மிகுதியாகும். இந்திய அளவில் 1987ல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரப் பட்டியல், தமிழகக் கல்வெட்டுகளின் எண்ணிக்கையை முதல் இடத்தில் காட்டுவது போலவே தமிழகச் செப்பேடுகளின் எண்ணிக்கையும் முதலிடத்தில் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவை எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் வெளிப்படுத்தும் வரலாறு, பண்பாடு, கலை, சமயம், சமுதாயம் மற்றும் பொருளாதாரச் செய்திகளிலும் வளமானவை. இவற்றின் எண்ணிக்கை மற்றும் சிறப்பினைக் கருத்தில் கொண்டு இவற்றைச் சேகரிப்பது, படிப்பது, வெளியிடுவது தொடர்பாக ஆகஸ்ட் 2004 திங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஒரு முனைப்புத் திட்டத்தை உருவாக்கியது. பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. அதன் விளைவாக இந்த பிப்ரவரி 2005 திங்களில் தஞ்சாவூர் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழகச் செப்பேடுகள் தொகுதி-1, தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள், கோவை மாவட்டத் தொல்லியல் கையேடு, தும்பை - ஓர் ஆய்வு என ஐந்து நூல்கள் தமிழில் வெளிவருகின்றன.

தமிழகச் செப்பேடுகள் தொகுதி-1 எனும் இந்நூலில் 40 செப்பேடுகள் இடம் பெறுகின்றன. இவற்றில் ஒன்று வெளிப்பட்டயம். இரண்டு தெலுங்கு எழுத்து மற்றும் மொழியில் உள்ளவை.

மதுரை நாயக்கர் மன்னர்கள், சேதுபதி மன்னர்கள், அரியலூர் மழவராயர்கள், நத்தம் பாளையப்பட்டு நாயக்கர், கூளப்பநாயக்கர், தென்காசி சீவலப் பாண்டியன், வீரபாண்டிய கட்டபொம்மன், விக்டோரியா மகாராணியார், ஆங்கிலேய அரசுத் தளபதி பானர்மேன் ஆகிய ஆட்சியாளர்கள் இச்செப்பேடுகளில் குறிக்கப்படுகின்றனர். ஒரு பகுதிச் செப்பேடுகளில் ஆட்சியாளர்கள் பெயர்கள் இல்லை. பிற்காலச் செப்பேடுகளான இவற்றின் காலக்கணிப்பு இவற்றில் சொல்லப்படும் தமிழ் மற்றும் சக ஆண்டுக் குறிப்புகளைச் சார்ந்துள்ளது.

இச்செப்பேடுகள் கோயில்களுக்கான நில மானியம், கோயில் வழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்ட சந்தைகளின் வரி வருமானங்கள் 24 மனைச்செட்டிகள், உலோகமாதேவிபுரம் செட்டிகள், செங்குந்தர், பன்னாட்டார் கற்பூரச் செட்டிகள், அம்பலக்காரர், குயவர் கார்காத்த வேளாளர், ஆசாரிமார், மள்ளர், குடும்பர், பள்ளு, பண்டாரம் முதலிய சமூகத்தவருக்கான மட அமைப்புகள்; சமூகத் தலைவர்களுக்கான விருதுகள்; நாட்டாண்மைச் சிறப்புகள், குறிப்பிட்ட சமூகத்தாரிடையிலான மணஉறவு நெறிமுறைகள் எனப் பலவேறு செய்திகளைக் கொண்டுள்ளன. இவ்வாசிரியர் பற்றிய குறிப்புகளும் இரண்டு செப்பேடுகளில் உள்ளன.

கி.பி.16ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19ஆம் நூற்றாண்டு வரையிலான சமுதாய ஆய்வு, மொழியியல் ஆய்வு, வரலாற்றாய்வு எனப் பன்முனைப்பட்ட ஆய்வுச் சான்றுகளுடன் விளங்கும் இச்செப்பேடுகள் ஆய்வாளர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்படக்கூடியவை. இவ்வாய்வுகளால் தமிழக வரலாறும் பண்பாடும் மேலும் பொலிவு பெறும் என்று உறுதியாக நம்பலாம்.

தமிழகச் செப்பேடுகள் தொகுதி - 1 என்னும் இந்நூலின் தலைப்பே இன்னும் செப்பேட்டுத் தொகுதிகள் வெளிவரவுள்ளதைக் காட்டி நிற்கிறது. இத்தொகுதி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் வெளிப்பாடாகும். இத்துறையின் மாவட்ட அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் செப்பேடுகளைத் தேடிச் சேகரித்துப் படித்து இயன்றவரை மெய்ப்படியும், நிழற்படமும் எடுத்து அனுப்பியுள்ளனர். துறையின் நிழற்படப் பிரிவினர் படமெடுத்தும், படங்களையும் மெய்ப்படிகளையும் கணிப்பொறியில் உள்ளிட்டும் அச்சிட உதவியுள்ளனர். இந்நூல் வெளியீட்டிற்கான ஒருங்கிணைப்பு மற்றும் பதிப்புப் பணியினை முனைவர் சு. இராசகோபால் மேற்கொண்டுள்ளார். இவர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

இத்துறையின் வெளியீடுகளுக்கு நிதியுதவி நல்கி பணிகளை ஊக்குவித்து வரும் தமிழ்நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

23-2-2005
சென்னை - 113

சிறப்பு ஆணையர்

# முன்னுரை

தமிழகத்தில் முதலில் கல்வெட்டுகளைத் தொகுக்க ஆரம்பித்த ஆங்கிலேய அதிகாரிகள் தங்கள் கள ஆய்வுகளிலும், புதையல்களாகவும் செப்பேடுகளை அறியத் தொடங்கினர். வரிவிலக்கு அளிப்பது தொடர்பாக ஆங்கிலேய அரசு பழைய ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு புதிய வடிவில் தாள ஆவணங்கள் வழங்கிய போது ஏராளமான செப்பேடுகள் அரசின் கருவூலங்களைச் சென்றடைந்தன. வரிவிலக்குத் தொடர்பாகச் செப்பேடுகள் தேவைப்பட்டதால் குடிசைத் தொழில் போல 19 ஆம் நூற்றாண்டு இறுதியில் செப்பேடுகள் தயார் செய்யப்பட்டதாகவும் கூறுவர்.

தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 400 செப்பேடுகள் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் ஆங்கிலக் குறிப்புகளுடன் பதிவாகியுள்ளன. பல செப்பேடுகள் படங்கள், வாசகம், எழுத்துப்பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு ஆய்வுக்குறிப்புகளுடன் எபிகிராபிகா இண்டிகா தொகுதிகளில் வெளிவந்துள்ளன. இந்தியன் ஆண்டிகுவரி தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் ஆகியவற்றிலும் சில வெளிவந்துள்ளன.

சிதறல்களாக அங்கங்கு வெளியிடப்பட்டுள்ள இச்செப்பேடுகளைத் தேடி ஆய்வு செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு தி.நா. சுப்பிரமணியன் பல்லவர் செப்பேடுகள் 30, பாண்டியர் செப்பேடுகள் 10 என்ற இரு தொகுதிகளை தமிழ் வரலாற்றுக் கழகம் வழியாக 30ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டார்.

இராமேசுவரம் கும்பாபிஷேக மலர் தொகுத்த சோம.லெ., இராமநாதபுரம் அரண்மனையில் இருந்த செப்பேடுகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களைக் கொண்டு படித்து அவற்றின் சுமார் 30 வாசகங்களை வெளியிட்டார். இதன் காரணமாக ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டு பலரும் செப்பேடுகளைத் தேடி இதழ்களில் வெளியிடும் போக்கு முனைப்புப் பெற்றது. 'மராட்டியர் செப்பேடுகள்', 'சேதுபதி செப்பேடுகள்', 'கொங்கு நாட்டு சமூக ஆவணங்கள்' 'திருவாடுதுறை

இடங்கையினருக்குச் சாதகமான உண்மைகளை வெளிக் கொண்டு வந்த பிராமணரைப் பாராட்டி மரியாதைகள் செய்யப்பட்டதை நெய்வேலி பண்ணாட்டார் செப்பேடு காட்டுகிறது. பஞ்சமாசப்த வாத்தியக் கருவியை இயக்குபவர்களான நாகபாசத்தார் தங்களுக்கென்று தலைவரைத் தேர்வு செய்து அவருக்கு மரியாதைச் சிறப்புகள் செய்வதை ஆழ்வார்பேட்டை செப்பேடு - 1 காட்டுகிறது.

பாளையப்பட்டுப் பாளையக்காரர்கள் பொது நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை நத்தம் பாளையக்காரர் மூவர் வழங்கிய மூன்று செப்பேடுகளான நத்தம் வேலம்பட்டி பழனிச் செப்பேடுகள் காட்டுகின்றன. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரராகிய வீரபாண்டிய கட்டபொம்மன் திருச்செந்தூர்க் கோயில் திருப்பணிக்குக் கொடுத்த தன் ஆளுகைப் பகுதி வரிவருமானத்தைத் திருவாடுதுறை செப்பேடு காட்டுகிறது.

பாளையப்பட்டுக்களை அடக்கி ஆங்கிலேயர். கம்பெனி ஆட்சியை நிறுவிய அரசியல் நிகழ்வுகளை எட்டயபுரம் விளம்பரச் செப்பேடு தெளிவாகக் காட்டுகிறது. ஆங்கிலேய ஆட்சி நிலைபெற்றதும் கடல் கடந்து வெகு தொலைவில் உள்ள அரசுத் தலைமையைப் போற்றித் தமிழகத்தில் அன்னதானம், இலவச ஆடைகள் மற்றும் தெய்வத்திருக்கு அணிகலன் வழங்கியதைச் செங்கல்பட்டு வெள்ளிச் செப்பேடு வெளிப்படுத்துகிறது.

மீனாட்சிபுரம் செப்பேடு குடும்பர் சமுதாயப் பெண்களின் மானத்தைக்காப்பாற்றிய 'தீன்குலச் சமயத்தை'ச் சேர்ந்த இஸ்லாமியரைப் போற்றுவதைப் பார்க்கிறோம். சமயங்களிடையே சமயப் பொறை மட்டுமின்றி சகோதரத்துவமும் இருந்தமைக்கு இச்செப்பேடு நல்ல எடுத்துக் காட்டாகும்.

இச்செப்பேட்டுத் தொகுதி 16 முதல் 19 முடிய உள்ள இலக்கியமல்லாத பொதுமக்களின் பேச்சு மொழி நடை மற்றும் ஆவண மொழி நடையை அறிந்து கொள்ள பெரிதும் உதவக்கூடியது.

அன்று வழக்கில் இருந்த வராகன், பணம் முதலிய செலாவணிகளும், பேட்டைகளிலும், துறைமுகங்களிலும் வந்து சென்ற சரக்குகளும் அவற்றிற்கான வரிவிதிப்புகளும், சமூகத்தினர் ஒவ்வொரு நிகழ்விற்கும் விதித்துக் கொண்ட கட்டணங்களும் பொருளாதாரச் செய்திகளை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுபவை.

வெண்ணைப்பக்கோட்டைச் செப்பேடு அரசின் ஆதரவோடு எப்படிச் சமூகத்திற்கு எதிராக எதிர்ப்பு உண்டாக்கப்பட்டது என்பதையும் எப்படி அது தவிர்க்கப்பட்டது என்பதையும் காட்டுவதாக உள்ளது.

வெள்ளிக்குறிச்சி செப்பேடு பண்டாரம் உறவின் முறையார் தங்களிடையே மண உறவுகள் பற்றிய நெறிமுறை ஏற்படுத்திக் கொண்டதையும். வேளாங்குளம் - இளமநேரி செப்பேடு ஆண் பெண் உறவு சமூகம் தாண்டி நிகழ்ந்ததைச் சரி செய்ய எடுத்த நடவடிக்கையும் காட்டுவதாக உள்ளன..

சமூகத்தினர் வாழுமிடங்களைச் சொல்லவரும் போது ஏராளமான நாட்டுப் பிரிவுகளும், ஊர்ப் பெயர்களும் அறிய வருகின்றன. இவை ஊர்ப் பெயராய்வுக்கு நல்ல தரவுகளாகும்.

பொதுவில் இச்செப்பேட்டுத் தொகுதி அரசியல். சமுதாயம். பொருளாதாரம். மொழிநடை எனப் பல்முக ஆய்வுகளுக்கு நல்ல தரவாகப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

# உள்ளடக்கம்


முன்னுரை

Summary of Copper Plates

| | | |
|---|---|---|
| 1. | வீரபாண்டிச் செப்பேடு | 1 |
| 2. | வெண்பகக்கோட்டை செப்பேடு | 7 |
| 3. | வள்ளிவலம்பட்டி செப்பேடு | 13 |
| 4. | பாலக்கோம்பை செப்பேடு | 17 |
| 5. | திருநெல்வேலி செப்பேடு - 1 | 20 |
| 6. | திருநெல்வேலி செப்பேடு - 2 | 23 |
| 7. | முசிறி செப்பேடு - 1 | 31 |
| 8. | முசிறி செப்பேடு - 2 | 37 |
| 9. | நங்கவரம் செப்பேடு | 43 |
| 10. | மதுரை ஆரப்பாளையம் செப்பேடு | 49 |
| 11. | சந்தையூர் செப்பேடு - 1 | 55 |
| 12. | சந்தையூர் செப்பேடு - 2 | 59 |
| 13. | வேளானூரணை - இளமநேரி செப்பேடு | 64 |
| 14. | வெள்ளிக்குறிச்சி செப்பேடு | 71 |
| 15. | இளையான்குடி செப்பேடு | 78 |
| 16. | இராமநாதபுரம் மூலைக்கொத்தளம் செப்பேடு - 1 | 82 |
| 17. | இராமநாதபுரம் மூலைக்கொத்தளம் செப்பேடு - 2 | 89 |
| 18. | வேலவன்பட்டி செப்பேடு | 96 |
| 19. | நத்தம் செப்பேடு | [illegible] |

| | | |
|---|---|---|
| 20. | பழனி செப்பேடு | 107 |
| 21. | நெய்வேலி செப்பேடு | 113 |
| 22. | அரியலூர் செப்பேடு | 127 |
| 23. | திருமானூர் செப்பேடு | 133 |
| 24. | தாருகாபுரம் செப்பேடு | 138 |
| 25. | திருவாடுதுறை செப்பேடு | 142 |
| 26. | எட்டயபுரம் செப்பேடு | 146 |
| 27. | செங்கல்பட்டு வெள்ளிப் பட்டயம் | 150 |
| 28. | பள்ளப்பட்டி செப்பேடு | 152 |
| 29. | மயிலாடுதுறை செப்பேடு | 156 |
| 30. | மேல்சேலூா செப்பேடு | 162 |
| 31. | நெற்குப்பை செப்பேடு | 167 |
| 32. | திருவண்ணாமலை செப்பேடு | 171 |
| 33. | சேடப்பட்டி செப்பேடு | 178 |
| 34. | ஆழ்வார்பேட்டை செப்பேடு - 1 | 182 |
| 35. | கோடியக்காடு செப்பேடு | 186 |
| 36. | நந்தனூர் செப்பேடு | 193 |
| 37. | மானூர் செப்பேடு | 198 |
| 38. | மீனாட்சிபுரம் செப்பேடு | 208 |
| 39. | மேலப்பனையூர் செப்பேடு | 215 |
| 40. | ஆழ்வார்பேட்டை செப்பேடு - 2 | 218 |
| | சொல்லடைவு | 222 |

# Summary of Copper Plates

## 1. Veerapandi Copper Plate

Vishvanatha Nayak of Madurai Nayak dynasty had donated some lands to one Bullan Chetti, S/o. Dhasan Chetti for the expenses of the festival of the Mariyamman temple at PullaiNallur. Eventhough the content of this copper plate is datable to 16th century, AD, this copper plate seems to be a re-copy done in the 20th century.

## 2. Venbakkottai Copper Plate

One Accharamakkavundar of Siruvalai, was permitted by Virappanayakkar of Madurai Nayak dynasty (1572 – 95 AD) to collect some tax (*Inavari*) from the Goundas of Kambalam sect residing in the region between Gundaru, Thamiraparani, Rameshwaram and Thenkasi. But one Bulla Goundar of Venbakkottai tried his best and succeeded in getting relief from this tax. Praising this, the Goundas residing in the above said area decided to collect 1500 *pon* to donate it to Bulla Gounder.

## 3. Vannivelampatti Copper Plate

One Alagan Muththiri gave an animal sacrifice for the well being of Thirumalai Nayak of Madurai Nayak dynasty, in front of the King himself while he was at the South Gate of the Place. Noticing this the king immediately announced that Alagan Muththiri can enjoy the Nattanmai rights of the villages of Devan Kuruchi and Vannivelampatty. This Copper plate is dated in 17th Century.

---

*Summary prepared by: Thiru P.Rajendran, Spl. Grade Epigraphist and Dr. C.Santhalingam, Archaeological officer, Madurai.*

## 4. Palakkombai Copper plate

This plate is dated to 1654 AD Some Vellala Community people served in the military service of Kamayanayakkar in Sadhuragiri region. They defeated one Thulluk kutti Nayakar who acted against Kamayanayakkan. In order to reward this bravery Kamyayanayaka donated 8 villages and some more wet and dry lands for the vellala people *Nattanmai* right also was conferred on them and some temple *manyams* were also given. Date of this copper plate is 1654 A.D.

## 5. Thirunelveli Copper Plate

Thalaivamar Community People endowed one mid day *sandhi pooja* for the merit of Thiruvenkatanathar and Ranga Krishna Muthu virappa Nayakkar. For this they have sold a land for 5 *pon*. The land boundaries are described in the plate. This plate belongs to 1682 A.D.

## 6. Thirunelveli Copper Plate

This Copper Plate dating back to 1700 AD, records the donation of Palaiyapettai to a Sankara sastri by Renga Krishna Muthu Verrappa Naick. The expenses of Midnight puja and food offerings were met out with the taxes levied on various people at Palayapettai .

## 7. Musiri Copper Plate -1

This Copper plate is dated back to 18th century AD. Records certain additional gifts made to the temple of Cholesvaramudaiyar at Musiri alias Mummudi Cholappettai.

## 8. Musiri Copper Plate -2

This Copper Plate dating back to the period of Muthu Veera Chokkanatha Nayakkar (1706 - 32 AD) of Madurai Nayak dynasty records the gift of 72 *varakan pon* annually from Koodalur Kaval Thirvai for the expenses of the festivals

of Karpura Valliyamman in Musiri Choleesvaramudaiyar, by one Kampaya Nayakkar of ValanthaNagaram. The Musiri Chandramoulessvarar temple authorities now preserve this copper plate.

**9. Nangavaram Copper Plate**

Karpoora Chettys like Ankemara Naidu Celebrated the special occasion when the king was seated in the 'Navaratri Kolu', with crackers. Pleased with their performance, the king donated certain lands to them to maintain a community mutt.They also have to supply gun powder(veti uppu) regularlyo to the palace. This Copper plate is dated in 1716 A.D.

**10. Madurai - Arappaliyam Copper Plate**

This plate belongs to potter's community of Madurai region. They levied themselves 5 *panam* per potter's wheel and donated that money for the renovation of Thirupparankundram Temple. Date of this Copper plate is 1760 A.D.

**11. Santhaiyur Copper Plate - 1**

Virannan Servai who served as a security staff under Santhaiyur chief Peththanna Chetti, beheaded his master and surrendered his master's region to Kulapp Nayakkan. Kulappan appreciated his bravery as a reward Nattanmai rights, land donations and temple respects etc. Date of this Copper plate may be 17th Century.

**12. Santhaiyur Copper Plate -2**

Mentions the confirmation of Nattammai rights towards 18 villages to Viranan Servai, a sub-ordinate of Kulappa Nayaka. Viranna Servai with this right served as a village jury and settled petty disputes For this 5 *panam* was given by the villages as a mark of respect. This Plate belongs to 1675 A.D.

### 13. Velan Tharavai - Ilamaneri Copper Plate

One Veerayi of Velantharavai became pregnant due to her illegal relationship with one Nayina Kutti Servaikaran of Ilamaneri. Her family members and relatives refused to accept this illegal relationship. So, she committed suicide. When this matter was brought to the notice of the king, the king decided that some one from the side of the Nayina Kutty should be scarified for this. Nayina Kutti's sister Udaiyakkal was the choice for this sacrifice. Finally the Valaiyars decided to accept Udaiykkal as a member of their caste, instead of sacrificing her. This Copper plate also records some agreements reached by the members of the 8 sects of Valaiyar Community. This Copper plate is dated in 1691 A.D.

### 14. Vellikkurucchi Copper Plate.

This Copper Plate which can be dated to 17th century AD seems to be the record of an agreement reached between the members of the Pandaram Community, residing in the 69 villages located in the old Ramnad District and Thirunelveli region, towards their matrimonial relationships.

### 15. Ilayankudi Copper Plate

In this eighteenth century copper plate, which is now being protected by Sri A. Rajabhattar of Ilayankudi, it is mentioned that, Vijayaraghunatha Sethupathi, had donated Thiru Udaiyapuram as *Sarvamanya* to one Subramanya Nambiyar to meet the day to day expenses for the worship of Rajendra Choleeswarar and Mannul Makilntha Isvarar temples. This Copper plate is dated in 1733 A.D.

### 16. Ramanathapuram Moolaikkoththalam Copper Plate-1

This plate mentions about the donation of Sirukompoothi village for Srikanta Deva Mudaliyar mutt for

the merit of Kumara Muthu Vijayaragunatha Sethupathi Katha Devar. One Ramalingam Pillai, the Pradani of the Sethupathi made this donation. This Copper plate is dated in 1759 A.D.

**17. Ramanathapuram Mulaikkothibalam Copper Plate-2**

SethuRamalinga swamy temple at Sethukkarai was built by Ramalingam pillai, the *pradhani* of Kumara Muthu Vijaya Regunatha Sethupathi Kaththa Thevar (1730-40 AD.) To meet out the day to day expenses of this temple, a portion of the taxes levied on the vessels at Pampan and Rameshwaram harbours were permitted to be utilized.

**18. Velanpatty Copper Plate**

This Copper plate is now in the custody of the Regisering officer, Thirucchirapalli. Muthulingayya Nayakkar of Nattam Palayam established a Mutt at Velan Patty and donated certain lands located in Boothakudi to meet the day to day expenses of that Mutt. This plate is dated 1648 A.D.

**19. Natham Copper Plate**

This copper plate dating back to 1741 AD records that certain expenses of Sri Kailasanathar temple at Natham Koyilpatty, were met out from certain taxes collected at Natham *pettai(market)*, and Chokkalinga puram *pettai* on certain commodities.

**20. Palani Copper Plate**

The Nattam *palayakara* chief, Kumaralingama Nayak, in memory of his Parents Eruthathu Lingama Nayak and Dhadhammal constructed two choultries. For the maintenance of these choultries, villages namely. Erakkapatty, Karaikundu, and Ammapatti were donated. The boundary stones are numbered and mentioned in the

plate. The text of this plate is also inscribed in a slab at Uralipatty village near Natham in Dindigal District. This Copper plate belongs to 1781 A.D.

**21. Neyveli Copper Plate**

This plate elobarates the dispute between the Valangai, Idangai Pallis (Vanniyas) regarding the right of *Panchavarnappavadai*. One Rajanarayana Iyer helped to settle the problem in favor of Idangai Pallis. As gratitude for this Idangai Pallis donated every year certain *panam* as a Guru Dhakshinai. People of 62 villages took this decision. This Copper plate belong to 1633 A.D.

**22. Ariyaloor Copper Plate**

This Copper Plate dating back to 1703 AD records the gift made for the benefit of Oppilla Mazhavarayar and his heirs. Certain amount of tax was collected for all items that were brought for sale at Ariyaloor *Pettai* (market/sandai) and certain amount of rent was collected for the shops located within this *pettai*. This amount was utilized for conducting Gurupooja and Mahesvara pooja in the Ambalaththadum Ayyar Mutt, (Most probably a VeeraSaiva Mutt located at Chidambaram)

**23. Thirumanur Copper plate**

This Copper plate is in the coustody of Thiru. D. Sambandham, the trustee of sri Kailasanatha temple at Thirumanar in Ariyalur Taluk. One Sri Kumara Oppillatha Mazhavarayar had donated some lands as *Srothriya Dhanam* to Srikailasanatha temple at Thirumanallur around 1790 AD.

**24. Dharukapuram Copper Plate**

Refers to a *sarvamanya* land donated to one hero Thiruvannath Devar, for his successful killing of a robber

cum royal enemy, Santhiran by name The donated villages and their boundaries were mentioned. Some royal rights umbrella, flag, fly whisk, torch and other temple respects were also conferred on Thiruvannath Devar. This Copper plate may belong to 18th Century.

**25. Thiruvavaduthurai Copper Plate**

This plate belongs to Virapandya Katta bommu Chief and dated to 1779 AD. It states about the taxes levied from the people of certain villages for the renovation of Subramanya temple at Thiruchendur. The taxes were collected from all community people at the rate of one measure (குறுணி) per year.

**26. Ettaiyapuram Copper Plate**

This Copper plates is a public notice issued by the British authorities. Veerapandiya kattabomman was hanged in the year, 1779 AD. Four days after this event, Bannerman has issued this notice. Panchalankurichi, Ezhayirampannai, Nagalapuram, Golarpatti, Kadalkudi, and Kulathur palayams were taken under their control by the British. The forts in these palayams were completely destroyed and the weapons in these areas were taken away by the British.The British also warned the public not to have any weapon with them.

**27. Silver plate from Chengalpattu**

This plate describes the celebration of 50th anniversary of Queen Victoria and the food and cloth distribution on that day. In commemoration of this event the temple trustee and District judge Mr. Ramanuja Naidu son of Kuppusamy Naidu had donated a golden *kasu malai* at the cost of Rs.300/- This Silver Plate is dated 16-2-1887.

## 28. Pallapatti Copper Plate

This plate mentions about the title conferred on Thottaya Goundan, *Nattanmai* of Pallapatti village by a Vaishnava mutt pontiff Sri Vedaviyasa battar Ayyankar According to this title, he was allowed to carry certain flags and other symbols and paraphernilia with him during festive occasions. This Copper plate is dated to 1507 A.D.

## 29. Mayiladuthurai Copper Plate

This Copper plate is now under the worship by Thiru V.S. Gurusamy Desikar, (the retired principal) at his Mayiladuthurai residence. In the front page, the images of Shiva, Uma, Subramanya with Valli and Deivanai, Vinayka, the nine Sakthis, the nine heroes (Navavirar) etc., are in bas-relief. In the backside the text of the copper plate is engraved in 45 lines. Even though the date given in this plate goes back to 1185 AD, from the content of this plate we can safely date this plate to 16th century. From this copper plate we come to know that one Kandapuranam was sung by Gnānapprakkasha Swāmigal of Thiruch Cheygnaloor. In this Kandapuranam, he has praised the Kaikkolars (the weavers) also to some extent. So the Kaikkolars of the 72 nadus decided to contribute certain yearly revenues to him from their looms and during their wedding and other rituals.

## 30. Melsevur Copper plate

From this copper plate, which is now under the protection of the Gurukkal of Sri Rishabeshwarar temple at Melsevur in Senji Taluk of Villupuram district, it is understood that the chettiyars of Ulagamadevipuram made some arrangements to meet the expenses of the daily worship of the God Iranki meeta Swamiyar from the amount collected annually from their members. It is said that once

the God safeguarded them from evils and in lapse of time they forgot it and their spiritual leaders reminded it. This copper plate can be dated to 16th 17th centuries.

**31. Nerkappai Copper Plate**

Oliyur (Ollaiyur of Sangam age?) was the capital of Ponnamaravathi region, which included 7 *Pattams*, 7057 *Nathams*, 1511 *Kudikadus*, 21 *Brahmadeyams* and 212 *Devadhanams*. The Puraiyamar of 4 karai enjoyed the Kaniyatchi of this region. This matter was also engraved in the inscriptions at Kudymiyanmalai, Poolankuruchi, Kannimalai and Poovalaikkudi. This Copper plate belongs to 17th Century.

**32. Thiruvannamalai Copper Plate**

This 17th Century A.D. Copper plate is under the possesion of 24 Manai Chettis Community. They have established a mutt and flower garden at Thiruvannamalai and appointed pontiff Vasantharayar Pandaram by name. For the maintains of this mutt marriage tax and personal taxes were collected from the members of this community.

**33. Sedapatty Copper Plate**

Refers to an establishment of a mutt by certain Ambalakarar Community people at Periyakulam region. They appointed one Sankaramurthy son of Paniparthipa Araiyan as the Pontiff of the mutt and for his maintenance certain amount of grains were donated every year. This Copper plate belongs to 17th Century.

**34. Alwarpet Copper Plate**

This Plate dated to 1733 A.D, belongs to the musician Community named as Nagapasaththar. They had assembled at the temple of Papanasam in Ambasamudram taluk at Tirunelveli Dt and taken a decision. Accordingly they

conferred a title *'Nagapasa Naralankaraiyan'* on one Virapathra Vinothiyar son of Madhavan Pillai who hailed from Aththazhanallur .Certain taxes were collected from the members of this Community.

### 35. Kodiyakkadu Copper Plate

Mentions the donation of Thiruvasi village to one Saiva Sikamani alias Vairavanambi pillai of Thirukkalahasthi in the name of Adhi Chandesvara. This seems to be a collective decision taken by Adhisethu mata Mudalis, Mahesvaras, Koyilar Rajaharar (royal officials) and resident of five localities (ஐஞ்சுகேசம்). Islands, saltpans and some mutts are mentioned in the plate. Date of the Copper plate may be 18th Century.

### 36. Nanthanur Copper Plate

The purpose of the plate is not clear. Seems to be a land donation by Vettuva community people. Boundaries of the lands were mentioned abruptly. This Copper Plate may be dated to 18th Century.

### 37. Manur copper Plate

One Velayuthaswamy established Subramanya swamy temple at Manur village. For the daily offerings and rituals of this temple all the Visvakarma families , Malla Kudumpa / pallu community families around this area had paid one *panam* per family. This decision is inscribed on this plate. This plate is dated to 1759 A.D.

### 38. Meenakshipuram Copper Plate

This Copper plate is now in the hands of Sri Abdul Raheem of Meenakshipuram near Bodi. When some *Valangai* sects tried to capture ladies of certain Idankai sects, one Pakkiriva Servai Ravuthar intervened and saved

those ladies from captivity. To honour this heroic deed, the title '*Manonkatha Thakuppan*' was conferred on him. Further, during the marriage celebration of these Idankai ladies, certain amount of money and some quantity of rice and grins were also given to him as a mark of respect. This plate is dated to 1873 A.D.

**39. Melappanaiyur Copper Plate**

One Venru Malaiyittan who was with a concubine by name Naga Manickathal Azhagiya Nallal, died while both of them were worshipping in a *pidari* temple. Nagamanickathal committed Sati. One forth of the lands of Malaiyittan were donated to this temple in her memory. This Plate is dated to 1759 A.D.

**40. Alwarpettai Copper Plate-2**

Mrs. Lilly Viyayaragahavan at Alwarpettai, Chennai is now preserving this Copper Plate. This copper plate dating back to 19th century AD records that the Kavarai Chettiyars belonging to all the 364 groups, and the Chettiyars of many *rasis* like *Mithunam*, *Mesam* etc. collectively selected Krishnama chetty alias Krishnama Nayakkar, as their Chief (அதிபதி) in the presence of Sri Vedantha swami.

# 1. வீரபாண்டிச் செப்பேடு

## *மாரியம்மன் கோயில் வழிபாடு முதலிய தர்மங்களுக்குக் கொடை*

தேனி மாவட்டம், போடி நாயக்கனூர், பெருமாள் கோயில் சாலை, பெத்தனன் செட்டி சந்தில் உள்ள திரு. கே. தனராஜ் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. 34.5 x 22.5 செ.மீ. அளவுடையது. இச்செப்பேடு முன்பக்கம் தலைப்பில் துளையும் அதன்கீழ் சங்கு சக்கரங்கள் அவற்றினிடையே திருமண் (நாமம்) ஆகியவை கோட்டுருவமாக உள்ளன.

சகவருடம் 1490 (கி.பி.1568) கலிவருடம் 4660 (கி.பி.1568) தமிழ் வருடம் சுக்கில (கி.பி.1566-69) ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கர் (கி.பி.1529-64) குறிக்கப் பட்டுள்ளார். காலம் பொருந்தி வரவில்லை. மெய் எழுத்துக்கள் புள்ளியிடப்பட்டுள்ளன. 'பட்டா', 'பரிசோதனை விபரம்', ஒப்புவித்தல் நாள் என்ற சொற்கள் உள்ளமையும், ரா. விசுவநாதநாயக்கர் என்ற கையொப்பம் உள்ளதும் இச்செப்பேடு 20ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதைக் காட்டுகின்றன.

மதுரையிலிருந்து கம்பம் செல்லும் சாலையில் தேனி அடுத்து சுருளி ஆற்றங்கரையில் உள்ள ஊர் வீரபாண்டி. இங்கு பாண்டியனுக்குக் கண்பார்வை கொடுத்தவராகக் கருதப்படும் கண்ணீஸ்வரம் உடையார் கோயில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் மற்றும் கலைப்பாணியில் உள்ளது. காமட்சியம்மன் பக்தர்களாகிய 'யாகசத்திரிய தெலுங்க தேசாதிபதிகள்' வம்சத்தில் வந்த புலவன் செட்டி வழியினர் வசத்தில் உள்ள

---

கல்வெட்டு இதழ் எண்.27: ரக்தாட்சி ஆண்டு புரட்டாசித் திங்கள் (10/1984). பக்.6-13 'வீரபாண்டி செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. இரா. ப. கருணானந்தன், காப்பாளர், தஞ்சாவூர்.

கண்ணனூரிலிருந்து கௌமாரியம்மனை தங்களுடன் மதுரைக்குக் கொண்டு வந்து, பின்னர் வீரபாண்டியில் புல்லை நல்லூர் என்ற ஊரினை ஏற்படுத்தி அங்கு கோயில் கட்டி மாரியம்மனை வைத்து வழிபடத் தொடங்கினர். இத் தெய்வம் நோய்கள் தீர்க்கும் சக்தியும் அறுந்த தலையைச் சேர்த்துவிடும் சக்தியும் உடையதாக இருந்தது.

போருக்குச் சென்று இவ்வூர் வழியாகத் திரும்பிய விசுவநாத நாயக்கர் இவ்வூர் சிவபெருமான் மற்றும் மாரியம்மனின் சிறப்புக்களை அறிந்து வழிபட்டு மகிழ்ந்தார். மேலும் இம்மாரியம்மனுக்குச் சீதனமாக புல்லை நல்லூர் நான்கு எல்லைகளையும் ஒட்டி $3\frac{1}{4}$ நாழிகை அளவுதூரம் விரிந்த எல்லைப் பரப்பு நிலங்கள், மற்றும் அதனைச் சேர்ந்த நீர் நிலைகளை தாசன் செட்டி மகன் புல்லன் செட்டிக்குக் கொடுத்து மாரியம்மனுக்குத் திருவிழா நடத்தி வரச் செப்புப் பட்டயம் கொடுத்துள்ளார்.

மேலும் இவர்கள் பிற தெய்வங்களுக்கு நடத்தி வருகின்ற தர்மங்களும், குளம் முதலிய தர்மங்களும் சொல்லப்பட்டு அவற்றிற்கு உள்ள மானியங்களும் நடந்து வர, பொன்த்தானம் நீக்கப்பட்டதும் சொல்லப்படுகிறது. மாரியம்மனுக்கும் 'கம்பம்' நட்டு நீர் ஊற்றி வழிபடும் திருவிழா விவரமும் பிறவும் சொல்லப்பட்டுள்ளன.

## செப்பேடு

1. சாலியவாகன சகாப்தம் 1490 கலியுகாதி 4669க்குச் சரி
2. யா னிகளும் தமிழ் கக்கில ஷேப மாசிமீ 6 உ யன்று நெடிய
   டை குள்ந்
3. த உலகத்தில் மதுரைக்கரசராகிய ராஜாதி ராஜ ராஜ மார்தண்டன்
   வில்லுக்கு விஜய
4. ன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்கி கர்னன் சந்திர கு
   சேகரன் சத்துரு சங்கார
5. வீராதி வீரன் வீரகண்டாமணி பொற் கிரீட சக்ரவர்த்தியாபெட்டை
   யெளுே
6. பத்திரனாடு அரசர்களும் பணியப் பெற்ற நீர்வழும் நிலைபழுத்தி
   சிறந்த லைகை நி
7. தி வாசமான மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் பக்தரான
   கோடியம் நாகமநாயக்

8. சரவர்க திவ்விய குமரன் ராஜாதிராஜர் மகாமண்டலேஸ்வர ராசிய விசுவநாத

9. நாயக்கரவர்கள் திவ்விய மநோகரப்படி. யெழுதிக் கொடுத்த செம்புப்பட்டயம் யெ

10. ன்னவென்றால் யென் மதுரை யெல்லைகளைச் சேர்ந்த மேல் சராங்க பூமியில் லெ

11. ங்கலப் பிரதனை வழநாட்டில் சேரநாட்டு யெல்லைலக்கும் வழ்பூன் நதியென்னும் வ

12. ருஷச நாட்டுக்கு மத்திபில் வருகிற கருளிநதி வைகையை பருத்து தெற்கிருக்கும் புல்ல

13. நல்லூரான வழநாட்டில் குடியிருக்கிர காமாக்ஷியம்மன் பக்த ராகிய யாகச் சத்திய தெ

14. லுங்க தேசாதிபதிகள் வம்மிசத்தார்கள் தலைம புல்லன் செட்டிக்கி வுங்கள் முன்னோ

15. ர்கள் காலந்தொட்டு வுயகளுக்குள் கட்டுப்பட்டு சததியாய காப் பாற்றும் வண்ணா

16. ன் அம்பட்டன் சாம்பான் வகை கீழ் குலத்தார்கள் வேலைகளுக் குள்ளாக்க கட்டு

17. ப்பட்ட ஜாதியர்களுக்கும் ஜாதி யாசார தேச விசாரணைகள் செய்து ரணட்க கம்

18. பழி பிடிசெம்பு கம்பழிக்கயர் சோலும் பெற்று நடத்தி வருகின்ற முதன்மை தே

19. சத்தாரான தாகசெட்டி மக்கள் புல்லன்செட்டி அரிபனை செட்டி தாகசெட்டி எபெருமா

20. ள் செட்டி பெதுன் செடடி யென்ற பேர்கள் வைத்து வரா நின்ற வழி வம்ச விருத்தி

21. யான புல்லன்செட்டி வகையறா முன்னாதிபில் வடக்கே கவைன ஜமறிலிருந்து தெ

22 ன மாரியம்மனை குலதெய்வமாக வைத்துக்கொண்டு வந்து மதுரையில் தங்கி

23. ப் பின மேல்சராங்க நாட்டில் தாகசெட்டி மகன் புல்லன் செட்டி யே சூடைருசநா

24. க புல்லை நல்லூரினையும் கட்டி சொலமாக வூர்க்கு மத்தியில் தன் குலதேவதை மா
25. ரியம்மன் லிங்கமாக அமைந்து கொள்ள அந்தப்பின் உள சிரத்தையால் அம்
26. மனுக்குக கோவில் கட்டி அம்மனை தானும் தன் பங்காளிகளும் சம்மந்தகாரர்க
27. ளும் பல குடிகளும் வெளளி செவ்வாய் தினங்களில் ஆண்டாண்டு சித்திரை மாச
28. த்தில் செவ்வாய் முதல் 22 நாள் வரைக்கும் குழுவிடாய் கும் பிட்டு அத்திமரத்து மு
29. க்கவர் கமபம் நட்டு தண்ணீர் சுமந்து வூற்றி சுண்ணடைக்கம் தாவி சேவைகள் எல
30. த்து கும்பிட்டு வருங்காலத்தில் இதற்கு முந்திய ராஜாங்கத்தாறுக் கும் வேண்டி
31. ய பரிசோதனை வரங்கள் கொடுத்த பாண்டியனுக்குக கண்ணும் புத்திர பாக்கிய
32. மும் கொடுத்து அவறால் சிவாலயமும் அதற்கு வேண்டிய மானுவ பூமிகளும் பெ
33. ற்று யெனக்கும் வேண்டிய வரங்களும் அறுத்தலைகளைப் பொருதச் செய்து உ
34. ள் தேகநோய் சகலபிணி பாவங்களை நீக்ககண்ட விகவநாத நாயக்கரவர்
35. கள் ஆயிரங்கண்ணுடைய கௌமாரியம்மாளுக்கு நான் கொடுக் கும் சீதனமாக மா
36. னியபூமிகள் புல்லை நல்லூறுக்கு தெக்கு மேக்கு வடக்கு கிழக்கு நாலு திக்கிலும் தி
37. க்குக்கு மூனெழுக்கால் நாழிகை தூர சதுர பெல்லைக்குள் ளடங்கிய பூமிக்குள் கருளி நதி
38. வைகை யிருபக்கங்களில் முந்தின ராஜாங்கத்தாறால் உள முன்னோர்களுக்கும் உள்
39. க்கும கிடைத்தும் கிடைக்கிற முன் பின்னோர்பபடும அணைகள் வூரணி கால்வாய் மடா

40. டைய. தர்மசாலை ஆலயங்கள் பற்றிய விருச்சங்கள் யாவையும்
நீயும் உன் வ

41. ர்கள் வகையறா புத்திர பரபௌத்தர பாரம்பரையர்களுக்கு
உன் சகோதரன்

42. தாக செட்டிக்கி இந்த ஊர்க்கு பேர்கே சேரநெல்லை ராசியவைக்
கி வடக்கு உன்னால்

43. கட்டிய புல்லூரனை பாதத்ய பூமியெல்லை கிழக்கு மரக்கா
மலைக்கி மேர்கடியில்

44. தாக செட்ட வழிநடை தர்மஊரணிக்கி ஒரு னாளிகை வளி
தூரச் சதுர பூமியும்

45. விருச்சங்களும் பெக்கால தருமம் நடத்தவும் கொடுத்தேன் உன்
சகோதர

46. ன் அரியணன் செட்டிக்கி அவரே மூலபுருசநாக தென்கிழக்கில்
சேர நெல்லைக்கிப்

47. பால் வருகை நாட்டு தண்டியலூர் கிராமங்களில் உங்களால்
உற்பத்தி குல

48. தேவதைகள் சவுரிமலையாண்டி பச்சைமலையாண்டி
பெருமாள்சாமி பால்ல

49. ன்னை சாமிகளுக்கு வேண்டிய மானுவ பூமிகள் உங்கள் வம்ச
கோவில்கள் செட்டி வெ

50. டடிய கோவிலன் குளம் பஞ்சந்தாங்கி குளம் இது மத்தியில்
உள்ள நாலு நாளிகை

51. சதுரவள பூமிகளும் காரகம் பசப்பெருக்க நீண்ட பூமி புஞ்செடி
கறி விருச்சங்க

52. ளும் உங்களுக்கு சமுத்திர உப்பாழத்து தலைவு வில்லைச்
சேவுகாளும் வழித்துள்ள தெ

53. ய்வங்கள் இவைட்டப்படி நீங்கள் நடந்து பூசை தர்மங்கள் நடத்தி
வரவென்று பேர்

54. ப்பட்டிருக்கும் முதேதின நாலாங்க நிருபாதாரங்களை நீங்கள்
மூன்று பேர்களும் ஒரு

55. தினத்தில் யென்னிடம் ஒப்பிக்க நான்பார்த்து தேவாலைய
தர்மங்களையும் ஆலயங்கள்

56. ருகள் நதிகள் 3ம் யன்று நாலும் தே தீர்மானப்படி கொடுத்த
செம்புப பட்ட

57. யம் புல்லைநல்லூர் பக்கம் பாண்டியறால் சிவனாலயத்தில்
கல்லில் சில ஏிபுரமி

58. ருக்கு இதுமாதிரிக் கல்லில் பெருதி மாரியம்மன் முன்பக்கத்தில்
வைத்துக் கண்பார்த்து

59. நான் வந்துதிரும்பி பாண்டி நாடாகிய மதுரைகூப் போகிர
படியால் இநிமேல்

60. கல்லுங் காவேரி புல்லும் பூமி சந்திர சூரியான் உள்ள வரை
இதிலுள்ள பிர

61. காரம் பொன் தீர்வை நீக்கி உன் வார்ககளும் அனுபவித்துக்
கொள்ளவும் பென

62. க்குப் பின் ராஜாங்கத்தார்கள் யிதைப் பாத்தாலும் இதுக்கு
யாது தடையன்றி

63. யில் உங்க வார்ககளுக்கு விடாதபடி தடுத்து மோசம் செய்
வாறாகில் அவர்கள்

64. வழிவம்ச ராஜாங்கங்களை இழுந்து தாய் தந்தை குருக்களைக்
கொன்ற பாவ

65. மும் காறாம் பசு தோசத்துக்காழகி தீரா நரகத்தி லழுந்துவார்கள்
பென்று இந்

66. த ஒரு பட்டாவில் மூன்று பேர்களும் மதுரை மீனாக்ஷி சொக்க
நாதர் கருளி மூப்

67. பத்தி முக்கோடி தேவர்கள் நவக்கிரகங்களாணைப்படி ஆகாய
வாணி சரஸ்வதி யரிய

68. பஞ்ச பூத சாக்ஷியாய் நான் கொடுத்த பட்டயம் இதை நிலை
நிருத்துபவர்கள் ராஜாங்கம்

69. நீடுளி வாழ்கவென்று பாண்டியனுக்குப் பிந்தி இரண்டாவது நா.
விசுநாதபெ நா

70. யக்கரவர்கள் கையொப்பம் உத்திரவுபெருதியது முத்து
வேலாசாரி.

# 2. வெண்பக்கோட்டை செப்பேடு

*இளவரி நீக்கம் பெற வாதாடியவருக்கு வெகுமதி*

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டம் திருத்தங்கலில் உள்ள திரு.எஸ். பாலசந்திரன் கூட்டுறவு வங்கி மேலாளரிடம் இச்செப்பேடு உள்ளது. இதன் மைப்படியை அண்மையில் அனுப்பி வைத்தார்.

35x15 செ.மீ அளவுள்ள இச்செப்பேட்டில் முன்பக்கம் 16 வரிகளும் பின்பக்கம் 17 வரிகளுமாக 33 வரிகளில் வாசகம் உள்ளது.

செப்பேட்டில் 'பிரசோற்பத்தி' தமிழ் ஆண்டும் மதுரை நாயக்க மன்னர் வீரப்ப நாயக்கரும் (கி.பி.1572-95) குறிப்பிடப்படுவதால் கி.பி.1574ல் வந்த பிரசோற்பத்தி ஆண்டாகக் கொண்டு இச்செப்பேடு கி.பி.1574ல் வெளியிடப்பட்டது எனலாம்.

மதுரை அருகிலுள்ள சிறுவாலை அச்சராமக் கவுண்டர் என்பவர் வீரப்ப நாயக்கரிடம் ஆணை பெற்று குண்டாறு தாமிரபரணி, இராமேசுவரம், தென்காசி ஆகியவற்றிற்கிடையே உள்ள கம்பளத்துக் கவுண்டர்களிடம் இளவரி வசூலிக்கும் உரிமைக்கு ஆணை பெற்றார். அதனை நிறைவேற்ற தென்காசி அதிவீரராம பாண்டியர் அரசிடம் சென்று நடவடிக்கை மேற்கொண்டார். வெண்பக்கோட்டை டலவா கவண்டர் அதிவீரராம பாண்டியன் பண்டாரத்தில் வாதாடி இளவரி இல்லாது தடுத்தார். இவரது சேவையைப் பாராட்டி மேற்சொன்ன நான்கு எல்லைகளுக்குட்பட்ட கம்பளக கவுண்டர்கள் ஒன்றுகூடி இவருக்கு வெகுமதியாக 1500 பொன்கொடுக்கத் தாங்கள் ஒவ்வொருவரும் வில்லுக்கு ஒருபணம் வீதம் வரி வசூலித்துக் கொடுப்பதாக முடிவுசெய்தனர். மேலும் தங்கள் மீது இளவரி வசூலிக்க முயன்ற அச்சராம கவுண்டனை எதிரியாக அறிவித்து அவருடன்

---

கல்வெட்டு இதழ் எண்.29 பிரமோதூத ஆண்டு மாசித் திங்கள் 1991. பிப்ரவரித் திங்கள் பக்.6-11. வெண்பக்கோட்டை செப்பேடு என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் டாக்டர் எஸ்.எம் கமால். இராமநாதபுரம்

யாரும் சேர்க்கூடாது என்றும் முடிவு செய்தனர் இச்செய்திகளை இச் செப்பேடு குறிப்பிடுகிறது.

செப்பேடு

முன்பக்கம்

1. பிரசோற்பதி ஆனி மாதம் ரு உ வெண்டக்கோட்டை புல்லகக்கவண்டருக்கு சாதியார் அனைவரு

2. ங்கூடி ஒப்பு முறிப்பட்டைய மெழுதிக் குடுத்தோம் குண்டாத்துக்கு தெக்கு இராமேசுரத்

3. துக்கு மேற்குத் தாம்பிறவெனிக்கு வடகுத் தென்காசிக்குக் கிளக்கு யிருந்த நாங்கெ

4. ல்லைக்குள்ப்பட்ட கம்பளத்துக் கவண்டர்களாவது கூத்திபாறை சந்தைப் பெ

5. காண்டப்பக் கவண்டர் செக்கன் கொண்டப்பக் கவண்டர் வடபட்டி மல்லப்பக் கவ

6. ண்டர் மாறனேரி திருமலைக் கவண்டரு மகனாரு முலகோதண்டராமக் கவண்டர் குண்டா

7. த்துங்கரையிலுள்ளபட்டக் கவண்டர்களும் தென்சீமைக்குறியக் கவண்டரும் கல்லா

8. த்துங்கரையிலுள்ப்பட்டக் கவண்டர்களும் இந்த நாலுகெல்லைக்குள்ளப்பட்ட பேரவைய

9. ருங்கூடி ஒட்பிட்டு பட்டைய மெழுதிக் குடுத்தபடிக்கு திருமாலை அச்சராமக் கவண்டர் வீர

10. ப்பனாயக்கரையனைக் கண்டு குண்டாத்துக்குத் தெக்குச் சாதியுள்பட்ட கம்பள

11. த்தாரை யினவரி வாங்க வேணுமென்று னாயக்கரைய விருபமும் வாங்கி யூனிய

12. க்காறரையுங் கூட்டிக்கொண்டு அதிவீரராம ராசா வையன் பண்டாரத் திருமுன் வந்த

13. து கரையேறினபடியினாலே யிது காரியத்துக்கு
வெண்பகோட்டை புல்லகவுண்டா ர

14. ராசாவையன் பண்டாரத் திருமுன்னே கரையேறி
இவரிக்கு வந்த அச்சராமக் கவுண்ட

15. ருடனே பேசி பரிவரி தட்டிவிச்சதே புண்டானால்
புல்லக்கவுண்டர் புண்டார வா

16. தத்துக்குப் பரிதான

பின்பக்கம்

17. மாக ஆயிரம் பொன் அஞ்சுறு பொன் கைக்கூலி குடுத்துச்
சிலவிட்ட சம்மந்தமெல்லா மிந்த நாங்கெ

18. கல்லைக்குள்பட்ட சாதியாரெல்லாருங் கூடி வில்லுக் கொரு
பணம் வரிப்போட்டு புல்லக்கவு

19. ண்டருக்கு யிருத்துக் குடுபோமாகவும் இந்தபடிக்கு
ஒப்பிட்டுக் கூடின சம்பராத்திலே பாதா

20. பொருதன அச்சராமக்கவுண்டருடனே கூடினதே
உண்டானாலவனை மேலக்கோட்டை வா

21. சலிலே குத்தி கீளக்கோட்டை வாசலிலே யிருத்துப்
போடுவோமாகவும் அவன் வீட்டையுந் தொ

22. ண்ணையிட்டுப் போடுவோமாகவும் அவனைச் சாதிக்கு
பிறம்பு பன்னி தீய்த்துறைத் தன்னீர்த் து

23. ரையம் மாத்தி யவன் வீட்டிலே மாடெலும்புங்
கட்டிவிப்போமாகவும் இந்த நாங்கெல்லைக்குள்ப்ப

24. ட்ட சாதியாரெல்லாரும் கொண்டாடப்பட்ட குல
தம்பிரானாலையே ராசாவையன் பண்டாரப பா

25. தத்தானையே நாயக்கரையன் பாதத்தானையே சாதியார்
தப்பாது யிதுக்கு

26. யாதொருவாகிலும் கிறுத்தவம்' பண்ணினால் கெங்க கரையில்க
காராம்பசுவைக் கெ

27. காளற தோசத்திலே போவாராகவும் இந்த படிக்கு
வெண்பக்கோட்டை புல்லாக்கவண்டரு

28. க்கு ஒப்பிட்டு பட்டையமெழுதிக் குடுத்தோம
குணடாத்தங்கரைக்குக் கொண்டப்பக் கவண

29. டர் வடபட்டி மல்லப்பக் கவண்டர் திருமலைக்கவண்டர்
கோ

30. தண்டராமக் கவண்[ட]ர் மற்றுண்டான கம்பளத்துக்
கவண்டர்களுந் தென்சீமைக்குறி

31. யக் கவண்டரும் கல்லாத்தங்கரையில்ச்
சேந்த கம்பளத்தாரு யிருப்படி இவர்கள் செ

32. ால்ல சாதியாருடைய ஒப்புபட்டைய மெழுதினோன்
கன்னாடக தேசம் திரும

33. லையன் எழுத்து



வெண்டுகோட்டை செப்பேடு - முன்பக்கம்



வெண்பக்கோட்டைச் செப்பேடு - பின்பக்கம்

# 3. வன்னிவலம்பட்டி செப்பேடு

*திருமலைநாயக்கர் நலனுக்காகக் கிடாய்ப் பலி கொடுத்தவர்க்கு காவல்கார மானியம்*

இச்செப்பேடு மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் வன்னிவலம்பட்டி புலவர் க. சங்கரன் என்பவரிடம் உள்ளது.[1] வன்னிவலம்பட்டி மதுரை - செங்கோட்டைச் சாலையில் உள்ள தே.கல்லுப்பட்டியிலிருந்து பேரையூர் செல்லும் வழியில் உள்ளது.

இச்செப்பேடு 22X15 செ.மீ. அளவுடையது. முன்பக்கம் 29 வரிகளும் பின்பக்கம் 27 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. தலைப் பகுதியின் நடுப்பகுதியில் அரைவட்ட அமைப்பு துளையுடன் உள்ளது. நஞ்சை. புஞ்சை என்ற சொற்கள் குறியீடுகளாக உள்ளன.

செப்பேட்டில் தமிழ் ஆண்டு 'குரோதன' குறிக்கப்படுகிறது. மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் குறிக்கப்படுகின்றார். இச்செப்பேட்டின் காலம் கி.பி.1625 எனலாம்.

காவல்காரர்கள் மதுரை கச்சேரியில் பணம் காணிக்கைகளை செலுத்திக் கொண்டிருந்த போது திருமலை நாயக்கர் நடைமேடையில் தெற்குப் பகுதியில் வந்து நின்று கவனித்துக் கொண்டிருந்தார். இதனைப் பார்த்த அரசன் மந்திரி என்பவர் தான் கொண்டு வந்திருந்த ஆட்டுக் கிடாயை தெற்குமுகமாகத் திருப்பி அதன் தலையை முறித்துப் பலிகொடுத்தான். அரசனின் நலனுக்காகக் கொடுக்கப்பட்டபலி என்பதை உணர்ந்து அரசன் தேவன்குறிச்சி வன்னிவலம்பட்டி என்ற இரு கிராமங்களை அவனது நாட்டாண்மை கிராமங்களாக்கி மானியம் கொடுத்தான். இவ்விரு கிராமங்களின் எல்லைகளும். அளவுகளும் சொல்லப்பட்டுள்ளன.

---

1. கல்வெட்டு இதழ் எண்.53. திருவள்ளுவர் ஆண்டு 2030-31 பிரமாதி மார்கழி - தைத்திங்கள் 2000 சனவரி பக்.1-8. 'வன்னிவலம்பட்டி செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் டாக்டர் வெ. வேதாசலம் கல்வெட்டாய்வாளர் மதுரை

செப்பேடு

1. வ ராமஜெயம்
2. அதிதமான மதுராபுரித் தலத்தில் யெ
3. ழுந்தருளிய மீனாட்ச்சி சொக்கலிங்
4. கத திருவுளத்தின் அனுக்கிரகத்தினாலே பா
5. ண்டி மண்டலம் பதினாறு முடிபொருந்த நீ
6. ளரி[2] கற்த்தறாகிய திருமலை நாயக்கறவர்
7. கள் விடையருளியது தேவயன்குரிச
8. சி கிறாமத்துக்கு மகமகனாக காவலுக்கு நே
9. முகஞ் செய்த தாம்பூர சாதின காணிகா
10. ச்சிப் படடயம் யெனனவெனறால் குறோ
11. தன வருஷ மாசி மீ ம் உடயா வ மிந்த கிறா
12. மம் காவல் பிளவறக துடிஅளகன் முத
13. திரி மகன் அளகவ முத்திரி[1] கிறாமம் தெ
14. ன் வடல் கீள் மேள் மால் உள்ளதுகதெ
15. ல்லாம் கட்டின வீட்டுக்கு பணம்*கு தவச மூக்
16. குருணி விபரகாபமில்லா வீட்டுக்கு* பணம்*க
17. கட்டின கடை ஒன்றுக்கு* பணம்*ய வ ஆடி தீவாளி
18. பண்டிகைக்கி வ க்கு ஆட்டு கிடாய கூ நஞ்சை
19. மானியம் வெங்கிஷ்ட கிட்டணப்பயன் ந
20. ஞ்சைக்கு* -நஞ்சைக்கு* மேற்கு*கருப்பன முத்திரி
21. ம்-கொப்பூரய்யன் நஞ்சைக்கு*தெற்கு கிழக்கு* முக்தற
22. சன் செட்டி நஞ்சைக்கு* வடக்கு*
விரையடி கூடு்ரா[1]
23. பிஞ்சை[2] மானியம் கிறமாகத்துக்கு* கிளற்கு செங்க
24. மனாக்கள் பிஞ்சைக்கு*-கிளக்கு* திருவேட்டயன் பிஞ்சை க்கு*
25. மேற்கு* -குருவா ரெட்டி பிஞ்சைக்கு* தெற்கு* - கா
வெட்டி
26. அய்யன பிஞ்சைக்கு* வடக்கு* எ-சயத்து நிலம் கா

27. வயமானியம் வெகை விசுவான சிராம

28. ம் வளனிரொம்பட்டி க்கு)* நாட்டாமைக்கி

29. றாசா உத்தரவு ஆனது பிறந்த துடிஅளகை

பின்பக்கம்

30. யகா அளகன் முத்திரிக்கி கிராமம் நஞ்சை

31. யில் தெலுகுராமன்செட்டி (நஞ்சைக்கு)* கிளற்கு ம

32. ஈற வேலுகவுண்டன் நஞ்சைக்கு வடக்கு அளகுரெட்ட

33. நஞ்-தெற்கு) விளாபாடி வா-மானியம் பிஞ்

34. சை மானியம் கிராமத்துக்கு தென்மேற்கு கலி

35. யாணி செட்டி (பிஞ்சைக்கு)* கிளக்கு பொன்னம்பலஞ்

36. செட்டி (பிஞ்சைக்கு)* மேற்கு ஆள்வார் னாக்கன் (பிஞ்சைக்கு)*

37. தெக்கு அளமேலு கவண்டன் (பிஞ்சைக்கு)* வடக்கு அ

38. ரசமரத்து பிஞ்சை - சயற்று நிலம்

39. நாட்டாமைக்கி யாதொரு முதலையும அள

40. கன் முத்திரி றாசா உத்தரவு படி கிராமம் வகை

41. ரெண்டுக்கு புத்திறாள் புநதிறான் உள்ளவரைக்கும்

42. ஆண்டு வருவாளாகவும் மிது பெருக்கெ

43. ன்றாவ மதுராபுரி பட்டணம் கச்சேரியில்

44. காவல்க்காறன் பணஞ்செலுத்தும் போது

45. றாசா நடைமேதைகையின் பேரில் வந்து தெக்கு

46. வாசலில் நிற்கும் போது தெஞ்சிறாகாய கிடா

47. வய தலையை முரிச்ச அளகன்முத்திரி கட்ட

48. படிபிளாவே நாட்டாமைக்கி காவலுக்கு உத்த

49. ரவு பிதுக்கு சாச்சி சதுரகிரிக் காமய னாக்

50. கன் சின்னமறவன சகலற்றதேவன் ஒன்பது

51. கூத்தன் வகை சாட்சி பட்டயத் தயா-ா

52. செய்தவ மாணிக்க கொட்டகா வெ ஒ

53. ன்பது கூநதன வைகைகசி பெருங்கோல துடைக்கன்

54. தச்சவீரன் நீர்மகன பூமாலை - குடிமகன் பூமுத்

55. தன் மாதாரி திருமன் நீராணி கருபபகரு

56. டும்பன் வ

---

1. இச்செப்பேட்டை. இக்கட்டுரையாசிரியரும் காப்பாட்சியா திரு. செ. போசு அவர்களும் கண்டறிந்தனர்.
2. 'தளத்துக்கு' என்று படிக்கவும்
3. 'முத்திரியற்கு' என்று படிக்கவும்
4. 'மூன்றுகலம்' என்று படிக்கவும்
5. இச்செப்பேட்டில் டகுசை. நருனை என்ற சொற்கள் பீசை என்றும் ந என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.
6. 'தென் சிரசாக' என்று படிக்கவும்.
* இவை செப்பேட்டில் குறியீடாக உள்ளன.

# 4. பாலக்கோம்பை செப்பேடு

*ஆரியவம்ச வேளார்க்கு மங்கலரேவு நாட்டாண்மை வழங்கியமை*

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டம் பாலக்கோம்பை திரு. கே. முருகேசன் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது.

21 x 14.5 செ.மீ அளவுடைய இச் செப்பேட்டில் முன்பக்கம் 33 வரிகளும் பின்பக்கம் 14 வரிகளுமமாக 47 வரிகளில் வாசகம் உள்ளது.

தமிழ் வருடம் 'செய' குறிப்பிடப்படுள்ளது. மதுரை நாயக்க மன்னன் திருமலை நாயக்கர் (கி.பி.1629-1659) சதிரகிரி காமய நாயக்கர் பெயரும் குறிப்பிடப்படுகின்றன. இதனில் குறிக்கப்படும் ஜெய வருடம் கி.பி.1654ல் வந்த ஜெயவருடம் எனக்கொண்டு இச் செப்பேட்டின் காலம் கி.பி.1654 எனலாம்.

மதுரையில் ஆரியவம்ச மல்லினாக்கன் மகன் ராமலிங்கம் பிள்ளை. சென்னைப்பிள்ளை மற்றும் இவர்களைச் சேர்ந்த 7 குடும்பங்கள் வசித்து வந்தபோது திருமலை நாயக்கர் இவர்களிடம் பெண் கேட்டதால் இவர்கள் மதுரையை விடுத்து முரிஞ்சு நாடு சென்று ஆரியபட்டி என்ற ஊரமைத்து இருந்தனர். அங்கு கள்ளர் தொந்தரவு இருந்தது அங்கிருந்து மேல் மங்கலரேவு வந்து குடியிருந்தனர். அப்போது சதுரகிரி காமய நாயக்கரிடம் சக்கரை வெத்திலை. பாக்கு. தட்சிணை வைத்து மரியாதை செய்து காமய நாயக்கரின் கீழ்ப்படிந்தவர்களானார்கள். காமயநாயக்கரும் தன்படையில் கூடுதலாகச் சேவுகர் விருத்தி சேர்த்துக் கொண்டு படி, பாற்சேலை துப்பட்டி தலைப்பாகை ஆகிய மரியாதைகள் கொடுத்தார் இச்சமயத்தில் காட்டுமுருந்தல் என்ற இடத்தில் துள்ளுக்குட்ட

---

கல்வெட்டு இதழ் எண்.49. தாது ஆண்டு தை - மாசித் திங்கள் 1997 ஜனவரி திங்கள்: பக் 20-26 'பாலக்கோம்பை செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர்கள் முனைவர் வெ. வேதாசலம் கல்வெட்டாய்வாளர் திரு. சே. போசு காப்பாட்சியர், மதுரை

நாயக்கர் என்பவர் காமயநாயக்கருக்குக் கட்டுப்படாமல் இருக்கவே. காமயநாயக்கரின் ஆணைப்படி இந்த ஆரியவமசத்தினர் அவனைக் கொன்று வெற்றிகண்டனர். இதற்காக காமயநாயக்கர் இவர்களுக்கு மங்கலரேவைச் சேர்ந்த எட்டுப்பட்டி கிராம நாட்டாண்மை தந்தூச செப்புப்பட்டயம் வழங்கினார். பாப்பாக்குளம் மருதன் மடைப்பாசனத்தில் 7 காணி நஞ்சைநிலம் ஆற்றுக்கு வடக்கில் 10 காணி புன்செய் நிலம், பெருமாள் கோயில், விநாயகர் கோயில் மானியங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டன.

## செப்பேடு

1. உ ராமஜெயம்
2. ஜெய ஸ்ரீ ஆவணி மீ ம் மதுரைக்கோட்டை
3. டயில் ஆரியவம்சமும் மல்லிநாக்கன் மகன் நா
4. மலியகம்பிள்ளை செனைப்பபிள்ளை யிவாளை
5. ச சேற்ந்த -எ- வீட்டுகவாறுரை கற்த்தாக்கள் திரு
6. மலைநாயக்கர் பேரை கேட்டாற்கள்ளென்று
7. மூரிஞ்சு நாட்டுப் புறத்தில் ஆரியபட்டி யென்று முனை
8. முனைப பிடிசக வீறுகட்டிக் குடியிருக்கில் வா
9. ளற் சில்லரை கூடி வராமல் மேலமங்கரேவி
10. ல் வநது குடியிருந்தார்கள் அப்போது அரம
11. னையாரைக் கண்டுகொள்ள வேணுமென்று
12. சக்கரை பாக்கு வெத்திலை தெச்சளை பேடி கம்
13. பொன் வச்சு சதுரகிரிக் காமயனாக்க ரவற்களை
14. சமூகத்தில் வச்சு கண்டு கொண்டார்கள் அரம
15. னையாருக்கு சந்தோசமாகி ஆர் யெவடமென்று
16. கேளக்க நடந்த வர்த்தமானங்களைச் சொனனா
17. ற்கள் படி பார்க்கிளை துப்பட்டி தலப்பாவ் குடுத
18. து சேவுகாவிருத்தி மனுசாளென்று அரமனைய
19. ாற் வச்சிருந்தாற்கள் துள்ளுகுட்டி னாககிரெவ
20. று கறட்டுமுற்தவில் வீறுகட்டி யிருந்தான்
21. சதிரகிரிக் காமயனாயக்கருடனே எதிரி பலவானி

22. ளான் தாமரையார் ஆரியமும்முசத்தைக் கூப்பிட்
23. டு துள்ளுகுட்டி சாக்கனைச் சங்கா றம் பண்ணி வந்
24. திருக்கோம் கேட்ட பற்ற் தாரோமென்று உத்தரவாக
25. சது ஆரிய ராமலிங்கம்பிள்ளை செண்பகப்பிள்ளை பி
26. ருபேரும் படைப்பை பெருக்கி ஆயுதபாணியுடனே
82. டையத்தி லெழுதியிருக்கிற பிரகார மாதித்த சந்திர பிரவை யுள்ளவரைக்கு

83. ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இதற்கு யாதா மொருவர் தடங்கல்

84. பண்ணினார்களேயாகனால் அவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசு

85. வைக் கொன்ற தோஷத்திலும் தனுக்கோடிக் கரையிலே பிராமணர் வதை

86. பண்ணின தோஷத்திலும் மாதா பிதாவைக் கொண்ட தோஷத்திலும் போக

87. க் கடவாராகவும் உ இராமநாத சுவாமி துணை உ

# 14. வெள்ளிக்குறிச்சி செப்பேடு

## *பண்டாரம் உறவின் முறையினரின் சாதி ஒழுங்குப் பட்டயம்*

சிவகங்கை மாவட்டம் திருப்பூவனம் அருகில் உள்ள வெள்ளிக்குறிச்சியில் இராமலிங்கபண்டாரத்தின் பேரனும் ஜெகநாத பண்டாரத்தின் மகனுமான திரு அம்மையப்ப பண்டாரத்திடம் இச்செப்பேடு உள்ளது.

35X38 செ.மீ அளவுள்ள இச் செப்பேட்டில் ஒரு பக்கம் மட்டும் 69 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் ஓம் எனப்பொறிக்கப்பட்டு அதனுள் சிவலிங்க உருவும் கோட்டுவமாக உள்ளது.

செப்பேட்டில் சக வருடம் 1561 (கி.பி.1639). தமிழ் வருடம் ரௌத்திரி கி.பி.1620 அல்லது 1680 ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று பொருந்தி வரவில்லை. செப்பேட்டின் தொடக்கத்தில் 'சேதுபதிநாதராகிய கூத்தநாதய்யர்' குறிக்கப்படுகிறார். இறுதிப் பகுதியில் 'முத்துவிசய ரகுநாதரான கன்றுமேய்க்கி உடையார்' சேதுபதி சொல்லப்படுகின்றார். கிழவன்சேதுபதி (கி.பி.1674-1710). அடுத்துவந்த கூத்தன் சேதுபதி அவரது தம்பி தளவாய் ரகுநாதசேதுபதி ஆகியோராக இவர்களைக் கருதலாம். இச் செப்பேட்டில் 'ரூபாய்', 'கும்பினியார்' ஆகிய சொற்கள் உள்ளன. ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகமே 'கும்பினி' என்று குறிக்கப்படுகிறது. எனவே இச்செப்பேடு 19ஆம் நூற்றாண்டினது என்று கருதலாம்.

---

கல்வெட்டு இதழ் 50-51 ஈஸ்வர ஆண்டு சித்திரை. ஆடித் திங்கள் (1999 ஏப்ரல். ஜூலை) பக்.67-69 'வெள்ளிக்குறிச்சி - பண்டாரம் உறவின் முறைசெப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியவர் திரு மா. சந்திரமூர்த்தி பதிவு அலுவலர். சென்னை.

சேதுபதி சீமையான பழைய இராமநாதபுரம் திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள 69 ஊர்களும், இவ்வூர்களின் பிரதிநிதிகளாக ஒவ்வொருவர் பெயரும் சொல்லப்பட்டு இவர்கள் அனைவரும் இணைந்து ஒப்பந்தமுறி எழுதியதாக இச்செப்பேடு குறிக்கிறது. இப்பிரதிநிதிகளின் பெயர்களில் ஆண்டி, பண்டாரம், புலவர் ஆகிய பின்னொட்டுச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இச்செப்பேடு பண்டாரம் உறவின் முறையினர் தங்களுக்குள்ளான திருமண நெறிமுறைகள், திருமண முறிவு நெறிமுறைகள் குறித்து எழுதிய தீர்மானமாகும். கணவன் மனைவியின இடையே ஏற்படும் பிணக்குகளும் அதற்கான தீர்வுகளும் சொல்லப்பட்டுள்ளன. திருமண முறிவுகள் நிகழ்ந்தாலும், திருமணங்கள் நிகழ்ந்தாலும் அவர்களது சமூகத்திலிருந்து வேறுபட்ட பிறிதொரு சமூகத்தினர் கலந்து விடாமல் இருந்திட எடுக்கப்பட்ட கவனமான தீர்மானமாக இத்தீர்மானம் காணப்படுகிறது.

## செப்பேடு

1. சாலிவாஹன சஹாப்தம் 1561 இதுமேக்கு
2. ரியான ரௌத்திரி இரு பங்குனி மீ மிறுக ஸ்ரீ மத் சே
3. து நாதராகிய கூத்தநாதய்யரவர்களுக்கு அடியிற் கண்
4. ட தங்கள் வம்சத்தவர்களாகிய மடபதிகள் உறவின் முறை
5. யார்கள் நடக்கிற ஒப்பந்ததிற்க்கும் சாதி ஒழுங்காய் [2] நடக்கிற விதி
6. யத்திற்க்கும் நாங்களும் எங்கள் வாரிசுகளும் தங்களுக்கும் தங்கள் வ
7. ாரிசுகளுக்கும் எழுதிக் கொடுத்த ஒப்பந்தமுறி [3] முதுகுளத்தூர் மடபதி சிவனாண்டிப் புலவர் எமநேஸ்
8. வரம் நட்டுவாலி முத்தழகு பண்டாரம் இராமநாதபுரம் நெருப்பாண்டி ஆனைக்குளம் வடுகநாத பண்டார
9. ம் இடைகாட்டூர் நீராகாரப பண்டாரம் விளத்தூர் கருப்ப பண்டாரம் பூவந்தி திருவேட்பண்டாரம் மண
10. லூர் வாளாயுதிவேலு பண்டாரம் பெருங்கருணை மாவுத்தாண்டிப பண்டாரம் மஞ்சூர் குருநாண்டி

11. முதலியப் குருந்தனாண்டி அபிராம காளையதிர்ப் பண்டாரம் வளநாடு பாண்டிப் பண்டாரம் கிடாரந் தெ

12. வ்வினாத பண்டாரம் வண்ணான்குளம் சுடலாதிப் பண்டாரம் கோவிலாங்குளம் முத்துக்குமாருப் பண்டார

13. ம் வரவணி சாமிநாத பண்டாரம் காக்கூர் ஆள்வாளாண்டிப் பண்டாரம் வாணியங்குடி மொக்க பண்டா

14. ரம் உடையாண்டிப் பண்டாரம் மானாகுடி வயிரவ பண்டாரம் ஆப்பனூர் காசிப்பண்டாரம் பழயனூர்

15. பொத்தப்ப பண்டாரம் அரியகுடி வீரப்புலவன் குரங்குடி பெத்தண பண்டாரம் வெட்டய்யாபுரம் ' முத்துச்

16. சாமிப்புலவன் வேடபட்டி பெத்தன பண்டாரம் அரசகுடி மொட்டய பண்டாரம ஆத்தூர் முத்துக்கரு

17. ப்ப புலவன் கீள்ச்செத்தாளை உலகப் புலவன் பூசனூர் ரெங்கசாமிப் புலவன் குரனியம்பட்டி உ

18. மையண பண்டாரம் உருசிக்கோட்டை சாமிநாதப் புலவர் ஒட்டப்பிடாரம் உலகப்பண்டாரம் ச

19. வுரிமங்கலம் திருமேனிப்புலவன் தட்டயபாரை கந்த சாமிப்புலவன் செக்காரக்குடி தும்பினிப்

20. புலவன் கன்னனூர் நாதபண்டாரம் சாத்தனூர் கடம்ப பண்டாரம் வளசிநாயகபுரம் ச

21. வுந்தர பாண்டியப் புலவன் முகட்டைக்குரிச்சி காத்தவராய பண்டாரம் திருச்சுழி மணியாண்டி

22. ப் பண்டாரம் அருப்புக்கோட்டை அருணாசலப் பண்டாரம் இருஞ்சிறை வீரணபண்டாரம் கட்ட

23. னூர் கந்தபண்டாரம் மினகனூர் கருப்ப பண்டாரம் கட்டிக்குளம் சிவனாண்டிப் பண்டாரம் வெ

24. ள்ளிக்குரிச்சி சேதுநாத பண்டாரம் பொன்னாகுளம் வீரபண்டாரம் வலச்சேரி பூரணபண்ட

25. ரம உளையூா முருகபண்டாரம் தரைக்குடி முத்தய்ய பண்டாரம் புலவர் வேலவகுடி தி

26. ருமேனிப் புலவர் பருத்தியூா முத்து வெயிலாப் புலவன் எழுவண்டி கருபப பண்டாரம் க

27. ாடவகுடி செண்பகமுத்துப் பண்டாரம் பரளச்சி சுந்தர பண்டாரம் மேலமாந்தை பெத்

28. தனா பண்டாரம் வீரபாண்டியபுரம் பெததனா பண்டாரம் செம்மப்பூர் உமையன பண்டார

29. ம் வடவலாபுரம் திருமேனிப் பண்டாரம் முடிமன்னார் கோட்டை திருவுப்புலவன் தெர்

30. க்கு தரைக்குடி முத்துமைய பண்டாரம் மண்டல மாணிக்கம் வாழவந்த பண்டாரம் தாமே

31. ாதரம்பட்டி வயிரவ பண்டாரம மாதவநத்தம் குருசாமி பண்டாரம் சங்கரனி குருசாமி

32. பண்டாரம் அரியனாபுரம் குமரபண்டாரம் மேல்க்கண்ட மடபதிகள் பண்டாரிகள் உரவின்

33. முறையார் ' களாகிய சகலத்திராளும் நம் ஜாதியில நடந்து கொளள வேண்டிய விஷயத்தை

34. தப்பற்றி அடியிற் காட்டி இருக்கிரபடி நடந்து கொள்ளு வோமாகவும் அதாவது மாம

35. னார் மகனும் மாமியார் மகளும் சம்பந்தம் பண்ணுகிற தென்றும் அப்படி சம்மந்தம் பண்

36. ணாமலிட்டால் குருபரம உரவின் ' முறையார்களுக்கு அபராதம் முப்பத்தி ரெண்டு பொன் கொடுத்து

37. ஜாதிக்கி கீள்ப்படிந்து ' கொள்ளுகிறதென்றும் இது போல் மாமியார் மகன் மாமன் மகளை

38. அன்னியில் போய் வேறே கலியாணம் பண்ணிக் கொண்டாலும் மேல்க் கண்டபடி முபபத்திர

39. ஷடு பொன் கொடுத்து சாதிக்கி தீர்ப்படிந்து ' கொள்கிற தென்றும் பெண்ணுக்குப் பருசம் அய்ம்

40. து ' பொன்னும் கலியாணத்துக்கு தீர்வை இருபத்தி அய்ந்து" பொன்னும் கொடுத்து தீர்ந்து கொ

41. ளளுகிறதெனறும் ஒருத்தி புருஷனுடனே ஒருத்தி சேர்ந்து கொண்டு போனாலும் ரூபிகரமான

42. அத்தாக்ஷி" வந்தாலும் தருமான தண்டனையும் தெண்டினையும் பண்ணி அபராதம் பணணிரன்

43. டு பொன்னும் பிறந்த பிள்ளைக்கி காளி இல்லை யென்றும் இந்தப்படி செய்கிறதென்றும் புரு

44. ஷன் பெண்டாட்டிக்கி தீர்வை துன்பம் வந்தாலும் ஆணாவது பெண்ணாவது மாட்டே

45. ா மென்றாலும் அப்பேர்ப்பட்டவர்களுக்கு கட்டுத்தாலி தீர்வை பண்ணிரெண்டு" பொன்யென்

46. றும் குருவுககு தகதனை பணம் ஒன்பதும் கொடுத்து குருவினுடைய பாதத்தில் காண்டாங்க

47. நமஸ்காரம் செய்து பஞ்சாட்சரம் வாங்கி தரித்துக் கொள்ளுகிறதென்றும் மாப்பிள்ளை

48. க்காரி இடத்தில் பெண்ணில்லாமல் போனால் அண்ணன் தம்பிக்கு சம்மதப்பட்ட இடத்தில் கூட

49. இருந்து கலியாணம் பண்ணுவிக்கிரதென்றும் பெண் காரனிடத்தில் மாப்பிள்ளை இல்லாமல்

50. ப் போனால் தமக்கையார் தங்கை சம்மதப்பட்ட இடத்தில கூட இருந்து கலியாணம் பண்ணி

51. வைக்கிறதென்றும் புருஷன் பெண்டாட்டியை கீள்' நோக்கின வார்த்தை சொன்னாலும் பெ

52. ண்டாட்டி புருஷனை தூஷிணிப்பாய்ப் பேசிப் பேசினாலும் தீர்வை இல்லை யென்றும் ஆண்பிள்

53. ளை பெண்பிள்ளைகள் ஒருவரைவிட்டொருவர் சாதிச்சி விரோதமாய் வேறே எலப்பு எலைப்பத்ததிரு

54. ச்சிறதாக ருகவந்தால் ஜாதிக்கி புறம்பாய் தள்ளிப போட்டு உரவின்முறையில்" நேரிய ஞாயத்தை அ

55. ரணமுளையில் கரையேத்தினால் அப்பேர்ப்பட்டவர்களை தீதுத்துறை தன்ணித்துறை நன்மை

56. தீமையிலுங் கூடடாமல் ஜாதிக்கி பிரம்பாய்த்தள்ளிப் போடுகிறது என்றும் நம்மள் ஜாதி ஞ

57. ாயமாய் நாத முத்திரை போடாதவன் குருபரம் உரவின் ° முறையார் தெண்டனைக்குள் அகப்பட்டு நடந்து

58. கொண்டு நாதமுத்திரை தரித்துக் கொள்வோனாகவும் கலிடாணம் பண்ணின பேர்களுக்கு நபர் ஒன்றுக்கு

59. வருஷக்காணிக்கை ருபாய் அரை வீதமும் கலியாணம் செய்யக்கூடிய வயதுடையவனு

60. க்கு காணிக்கை ருபாய் கால் வீதமும் இந்தப்படி ஸ்ரீமத வேதநாதராகிய கூத்தனாதய்யனுவ

61. ர்கள் சமூகத்தில் கூடிய மடபதிகள் பண்டாரிகள் உறவின் முறையார் சகலமான பேர்களும்

62. நடந்து கொள்கிறதென்று யெளுதிக்° கொடுத்த ஒப்பந்த முறியை யாதாமொருவன் அட்டி அளி

63. வு" செய்தால் கும்பினியாருக்கு அபராதம் பனிரண்டு பூவிராகனும் உரவின் முறைக்கு ஆறு°

64. விராகனும் குடுக்கிறது அப்படி கொடுக்காதவர்கள் ஜாதிக்கி புறமபாய்ப் போவோமாகவும்

65. இந்த ஒப்பந்த முறிக்கி " இடையூரு அட்டியளித்தவன் கங்கைக்கரையில் லாரம் பசுவையும்

66. பிராமணரையும் மாதா பிதாவையுங் கொன்ற தோஷத்திலே போவோமாகவும் என்று நா

67. ங்கள் அனைவோர்களும் சம்மதத்தின் பேரில் இந்த முறியை யெளுதிக்" கொடுத்தோம்

58. இந்த முரியெழுதினேன்* நட்டுவாலி உடையவந்த பண்டாரம் முத்து விஸ்பரகுனாத க

59. னறு மேய்க்கி உடையார் ஸேதுபதி

---

* 'க்கு', 'த்த', 'த்தி', 'க்கி' எனச் செப்பேட்டில் கூட்டெழுத்துகள் உள்ளன

1. உறவின் முறை
2. ஒழுங்காய்
3. முறி
4. சட்டையபுரம்
5. உறவின் முறையார்
6. உறவின்
7. கீழ்ப்படிந்து
8. கீழ்ப்படிந்து
9. ஐந்து
10. ஐந்து
11. திருப்பிக்கக்கூடிய அத்தாட்சி
12. பன்னிரெண்டு
13. கீழ்
14. உறவின் முறையில
15. உறவின்
16. எழுதிக்
17. அழிவு
18. ஆறு
19. ஒப்பந்த முறிக்கு
20. இந்த முறியை எழுதி
21. முறி எழுதினேன்

# 15. இளையான்குடிச் செப்பேடு

*கோயிலில் வழிபாடு செய்ய நம்பியார்க்கு கிராமம் சர்வமான்யமாகக் கொடுத்தமை*

இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி திரு அ. ராஜா பட்டரிடம் இச் செப்பேடு உள்ளது.

இச்செப்பேடு 28.5 X 17.5 செ.மீ அளவுடையது. முன்பக்கம் 48 வரிகளும், பின்பக்கம் 32 வரிகளுமாக மொத்தம் 80 வரிகள் உள்ளன. பின்பக்கம் 10வது வரி அடுத்து தெலுங்கில் மன்னர் பெயர் உள்ளது.

செப்பேட்டில் சகவருடம் 1655 (கி.பி.1733) தமிழ்வருடம் பிரமாதீச (கி.பி.1733) ஆகியவை உள்ளன. சேதுபதி மன்னர் விசையரெகுநாத பெரிய உடையார் தேவர் குறிப்பிடப்படுகிறார். செப்பேட்டின் முதற்பகுதி சேதுபதியின் பெருமைகளை வழக்கமாக எல்லாச் செப்பேடுகளும் குறிப்பிடும் அமைப்பில் குறிப்பிடுகிறது. இறுதிப்பகுதியில் தானம் நிறைவேற்றப் படவேண்டியதன் அவசியம் கூறும் சமஸ்கிருதப் பகுதி உள்ளது.

சேதுபதி இளையான்குடியில் உள்ள ஸ்ரீ இராசேந்திர சோழீஸ்வரர் மற்றும் மன்னுள் மகிழ்ந்த ஈஸ்வரர் கோயில் ஆகியவற்றில் வழிபாடு மற்றும் திருவமுது படையல் ஆகியவை நடத்துவதற்காக ஆதிசைவரும், காசிபகோத்திரம் போதாயன சூத்திரம் சாந்தவருமான சுப்பிரமணிய நம்பியார் என்பவர்க்கு திருவுடையாபுரம் என்ற கிராமம் சர்வமான்ய மாகக் கொடுத்ததை இச் செப்பேடு குறிப்பிடுகிறது. திருவுடையார்புரம் கிராமத்தின் எல்லைகளும் அதன் நாட்டுப் பிரிவும் சொல்லப்பட்டுள்ளன.

---

கல்வெட்டு இதழ் 16 நள ஆண்டு தைத்திங்கள். பக்.29-31ல் இளையான்குடிச் செப்பேடு என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. இரா ப. கருணானந்தன், காப்பாட்சியர், இராமநாதபுரம்.

செப்பேடு

1. ஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் அரியரயிர த
2. ளவிபாடன் பாஷைக்கி தப்புவறாயிர கண்டன் மூவ
3. றாயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குட
4. ரதான் பாண்டி மண்டல தாபனாசாரியான் சோழ
5. மண்டல பிரதிஷ்டாபனா சாரியான் தொண்டமண்
6. டல பிரசண்டப் பிரசண்டன் ஈழமுங் கொங்கும் யா
7. ழ்ப்பாண பட்டணமும் கேயு மண்டலமுமளித்து கெ
8. ச வேட்டை கொண்டருளிய றாசாதி றாசன் றாச பரமேசுபர
9. ன் றாச மாத்தாண்டன் றாச கெம்பீரன் றாச குலசேகரன் இ
10. ரவுப் பாவடி மிதித்தேறுவார் கண்டன் சாமக்காற கண்
11. டன் சாமித்தொரோகியர் மிண்டன் பஞ்சவற்ண றாயர்
12. றாவுத்தன் பஞ்குலான் கண்டன் சொரிமுத்து வன்
13. னியன் திலதநுதல் மடல் மாதர் மடலெழுதும் வரி
14. சமுகன் காமினிகா கந்தப்பன சங்கீத சாயுத்தி
15. ய வித்தியா விநோதன் வீரதண்டை சேமத்தலை
16. விளங்கு விருதாளினான் வில்லுக்கு விமன் பரிக்
17. கி நகுலன் பரதநாடகப் பிறவீணன் வலியச்சவ்வி
18. வரிபிலக்காய் நீட்டி தாலிக்கு வேலி தந்துறாதிய
19. ன் மிண்டன் இராகுசிங்கம் தளசிங்கம் ஆத்து பாச்சி
20. கடலப் பாச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் து
21. லுக்கர் மோகந் தவிள்த்தான் துலுக்கர்த் தளவ
22. ாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் ஒட்டியர் தள
23. விபாடன் வீரவெட்டகமி விளையவெட்டகமி காந்
24. தன் அனுமக்கொடி கெருடக் கொடி விளங்கும் வி
25. ரு தாளினான் செங்காவிக் கொண்டையோன் சுயனா
26. த சுவாமி காரியர் துரந்தரன் ஈனை நாயகர். துர
27 ந்தரீகாறானை சேது மூல துரந்தரீகாரன் சேது செ

28. லட்ச தூராதரீசுறான் தொள்டிடத்துரை ரபை
29. லஷ் சிஷபூசா தூரந்தரீகாரன் துஷ்ட்ட ந்க்கிர
30. க சிஷ்ட்ட பரிபாலகறான பரனாரிசகோதரா அரி
31. லுக்கு அகஸ்த்தியர் பொறுமைக்கித் தன்மா ப
32. கை மன்னர் கேசரி இரணியகபயாசியான
33. சேது வம்மிச தூரந்தரீசுறான் ப்ருது பூறாச்சிய
34. பரிபாலனம் பண்ணியருளின ஸ்வஸ்தி ஸ்ரீ லத்ஸ்ரீ
35. சாலியவாகன சகார்த்தம் ருகூார்ருமரு ற் மே
36. ல் சொலா' நின்ற பிறமாதீவிசா மாசிமீ
37. மிசஉ புனல்ப் பிரளைய நாட்டில் அறுங்குல
38. ாதி பாறாள்ள பெரிய உடையாத் தேவரவர்
39. கள் புத்திரன் அரசு நிலையிட்ட விசைய ரெகு
40. னாத பெரிய உடையாத் தேவரவர்கள் துகலூ
41. ர் கூத்தத்தில் காட்ாதிருக்கை நாட்டில் இ
42. ந்திறாவதான நல்லூறான இளையான்குடி
43. யில் சுவாமி றாச்சேந்திர சோளீசுபர நா
44. யனாருக்கு மனுஷ் மகிள்ந்த ஈசுபரருக்கும்
45. ரெண்டு சன்னதிக்கிம் பூசை நெய்வேதினத்து
46. க்கும் திருவுடையாபுரம் கிறாமம் தாரா பூரு
47. வமாக சறுவமானியமாக ஆதி சய்வமாகி
48. ய காசியபர் கோத்திரமும் போதாயின சூத்திர

பின்பக்கம்

49. மூமான கயிலாச நம்பியார் புத்திரன் சுப்பி
50. றமணிய நம்பியார் கையில் பூறுவபட்சம் பூ
51. றணாஅம்மாவாசியும் சோமவாரமும் சுக நட்செ
52. சத்திர சுபயோகமும் கூடிய சந்திரகெரென
53. புண்ணிய காலத்தில் தானம் ப[ண்]ணிக்குடுத்த கிறா
54. மம திருவுடையாபுரத்துக் கெல்லை அதிகை
55. ரக்கி கிளக்கு சிதுகாத்தகுக்கு வடக்கு அரிய.ர

56. ண்டிபுரம் குலக்காலுக்கு மேற்கு நெடு உடனி
57. த தென் கடக கொம்புக்கு தெற்கு இவ்வாங்கி
58. கல்லைக்கி யுள்பபட்ட திட்டு

(தெலுங்கு எழுத்துக்கள் உள்ளன)

59. திடல் நஞ்சை புஞ்சை மேல் னோக்கிய மரம்
60. கீள னோக்கிய கிணறு [ஸ்ருதீபனாட செபம்மசிவது
61. வடாசானம்] சகல சமுதாய பிராத்தியும் அதி
62. சந்திராக்கமும் புத்திர பவுத்திர பவுத்திர பாரம்பரி
63. யமாக சாமி சன்னதியமுக்கு பூசை நெய்வேதி
64. னம் பண்ணிக் கொண்டு சுகத்திலே இருப்பா
65. றாகவும் இந்த தர்மத்தை பரிபாலனம் பண்
66. ணிக் கொண்டு வந்த பேர்கள் காசியிலேயும்
67. ராமேசுபரத்திலேயும் கோடி சிவலிங்க பிறதிஷ்
68. ட்டையும் கோடி விறும்ம பிறதிஷ்ட்டையும் பண்
69. ணின பலனை யடைவார்றாகவும் இதுக்கு யா
70. தாமொருதன் அகிதம் பண்ணினவன் கா
71. சியிலே காறாம பசுவையும் குருவையும் வதை
72. த பண்ணின்ன தோசத்தில் போகக் கடவ
73. ர்றாகவும் இந்த தற்மசாதனம் எழுதினே
74. ன் விசுவனாசாரி குமாரன் வீரபத்திர ஆ
75. சாரியேன் உ தாநபாலநயோர் மத்யே
76. தாநாத் ச்ரேயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க
77. ம் அவாப்நோதி பாலநாத் அச்சுதம் பத
78. ம் ஸ்வதத்தாத் த்விகுணம் புண்யம் பரதத்த
79. ாநு பாலநம் பரதத்தாபஹாரேண
80. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத்

---

1. செலவா நிறை என்று படிக்கவும்
2. பிரமாதீச என்று படிக்கவும்

# 16. இராமநாதபுரம் மூலைக்கொத்தளம் செப்பேடு - 1

*குருவிற்கு கிராமம் கொடை கொடுத்தது*

இராமநாதபுரம் மூலைக்கொத்தளம் பகுதியில் உள்ள திரு கருப்பையா அவர்களிடமிருந்து, காப்பாட்சியர் திரு கோவிந்தராம் மூலம் தொல்லியல்துறைக்கு அன்பளிப்பாகப் பெறப்பட்டு இத்துறையில் உள்ளது.

21X16.5 செ.மீ. அளவுடைய இச்செப்பேட்டின் ஓரங்கள் சிறிது நெளிந்துள்ளன. முன்பக்கம் 39 வரிகளும் பின்பக்கம் 28 வரிகளுமாக 67 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. 42வது வரியில் இடையில் எழுதப்பட்டுள்ள சொற்றொடரின் வரித்தொடர்ச்சி தெளிவில்லாமல் உள்ளது.

சக வருடம் 1653(கி.பி.1731) தமிழ் வருடம் 'பிரமாதீச' (கி.பி.1759) ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இரகுநாதசேதுபதி காத்தத்தேவர் மருமகன் குமார முத்து விசையரகுநாத சேதுபதி காத்ததேவர் குறிப்பிடப்படுகிறார்.

இவரது நன்மைக்காக இவரது பிரதானி ராமலிங்கம் பிள்ளையின் குரு ஸ்ரீகண்டதேவமுதலியார் மடத்திற்கு, சிறுகொம்பூதி என்ற கிராமம் கொடுக்கப்பட்டதை இச்செப்பேடு குறிப்பிடுகிறது. முதல் 35 வரிகளில் அரசரின் சிறப்புகள் ஏனைய செப்பேடுகளில் காணப்படும் வழக்கமான செய்திகளுடன் சொல்லப்படுகின்றன. ஊரின் நான்கு எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேட்டைச் சென்னவீரப் பண்டாரம் மகன் சென்ன வீரப்பன் எழுதியுள்ளார்.

---

இச்செப்பேடு சேகரித்தவர் திரு. செ.கோவிந்தராம காப்பாட்சியர், இராமநாதபுரம். இச்செப்பேட்டின் வாசகம் கல்வெட்டியல் பயிற்சி நிறுவன மாணவர்களால் படிக்கப்பட்டது.

செப்பேடு

முன்பக்கம்

1. சுபமஸ்துஸ்ரீ சாலிவாகன சகாத்தம் ஆகா நின்ற இதன் மேல் செ
2. ல்லா நின்ற பிரமாதீஷ வருடம் வைய்யாசி மாதம் டுல உத்திராயணத்தில்
3. பூறுவ பட்சமும் வியாளக்கிளமையும் பவுர்ண அமாவா சியும் அனுஷ நட
4. செத்திரமும் பவறா யோகமும் ப, த்திரவாகரணமுங் கூடின புண்ணிய கால
5. த்தில் தேவநகராதிபன் சேதுமூலா துரந்தரன் பராசசேகரன் பரராச செ
6. மு சிங்கம் ராமநாத சுவாமி காரிய துரந்தரன் சிவபூசா துரந்தரன் இரவிகுல
7. சேகரன் இரவி மார்த்தாண்டன் சொரி முத்து வன்னியன் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா
8. மண்டலேசுரவன் அரியராயிரதள விபாடன் பாசைக்குத் தப்புவராயிர
9. கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு
10. கொடாதான பாண்டிமண்டல தாபனாசாரியன் சோழ மண்டல
11. ப் பிரதிட்டாவாசாரியன் தொண்டமண்டல சண்டப் பிரசண்டன்
12. ஈளமுங் கொங்கும் யாட்பாணராயன் பட்டணமுங் கெசவேட்டை
13. கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராச மார்த்தாண்டன்
14. ராஜகெம்பீரன் பாதளவிபாடன உரிகோல சுர்தானன் அந்தம் பிரகண்ட
15. ன் சாடிக்காரர் கண்டன் சாமித்துரோகியன் மிண்டன் இளஞ்சிங்கந் தன்

16. ஞ் சிங்கம் பகை மன்னர் சிங்கம் துஷ்ர ராயசிங்கம் ஆத்திற் பாச்சி கடலில் பா

17. ச்சி மதப்புலி அடைக்கலங் காத்தான் நாவிக்கு தேவி சத்ருவாதியன் மிண்டன்

18. வன்னியராட்டந் தவிர்த்தான் மேவர்கள் கோழூரி பெலவகன் வண

19. ங்கு மிருதாசினான் வீரமகா கெம்பீரன் கீர்த்தி பிறுதாபன் அரிய மான

20. ங் காத்தான் தொண்டை மண்டலமுடைய யமந்துரை காவலன் பூதூர்க வேளந்தன் அனுமகே

21. தவான் குடை தெலுங்கில் பொருள் இல்லாமல் கிறுக்கலாக எழுதப்பட்டுள்ளது க்கு கற்றவன் பரிக்கு நகு

22. வன் கருணாகடாட்சன் குன்றிலுயர் மேருவிற்குன்றாப் வளைகுனில் பொ

23. ரித்தவன் திலதனுதல் மடமாதர் மடலெழுத வரு குமுகன் விசயவட்

24. சிமி காந்தன் கலை நெரியும் விற்டன்னான் காமினி கந்தப்பன் வீர தன்

25. சேமத்தலை விளங்கு மிருதாளினான் ராசகுல திலகன் ராசமனோ

26. பயங்கரன் மன்னரில் முன்ன மகுட வரதன் வேந்தன் மன்னருடாமணி

27. துட்டரில் துட்ட நெட்டூரன் அட்டதிக்கு மனோ பயங்கரன் கட்டாரி

28. சாளுவன் நவகோடி நாராயணன் துலுக்கர் தள விபாடன் துலுக்கர்

29. மோகந்த தவிர்த்தான் ஒட்டிய தள விபாடன் ஒட்டியர் மோகந் தவி

30. ன்றுதான் மலை கலங்கிலும் மனங்கலங்காதான் அசுபதி நரபதி கெசபதி

31. தளபதி அறிவுக்கு அகத்தியன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசை

32. டன் மல்லுக்கு வீமன் வாழுக்கு அபிமன்பு அன்ன சோமன் அடியா

33. கன் வேளைக்காரன செம்பி எனாடன் பூலோக தேவேந்திரன் செங்காதி

34. குடையான் தனுக்கோடி காவலன் கேந்தமாதன கிரியான் துகவூர்

35. க் கூத்தநில் காத்தூரான குலோத்துங்க சோழநல்லூர்

36. கீழ்பால் விரையாதகண்டனிலிருக்கும் ஸ்ரீஇரண்ய கர்ப

37. யாசி ரகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் மருமகன் குமார

38. முத்து விசைய ரகுனாதச் சேதுபதி காத்ததேவர் ரவர்கள் மருமகன் குமா

39. ர முத்து விசைய ரகுனாத சேதுபதி காத்த தேவர்ரவர்களுக்கு

பின்பக்கம்

40. புண்ணியமாக பிறதானி ராமலிங்கம்பிள்ளை யவர்கள் குருக்கள்

41. அவர்களுக்குப் பூறுவாசாரியார் ஸ்ரீகண்ட தேவ முதலியார்

42. அவர்களுக்கு ஸ்ரீகண்டதும் சுப்பிரமணிய சுவாமி கோயில் சன்னதி யில் தான பூர்வமாக விட்டுக் குடுத்த கிராமமாவது

43. சிறுகொம்பூதி இதுக்கு எல்லையாவது சேறு பிடுங்கி குட்டத்து

44. க்கு மேற்கு தெற்கெல்லையாவது நெடுங்களத்துச் சடைக் கொ

45. ம்பில் எத்தத் தேவன் தேட்டத்துக்கு வடக்கு மேல் எல்லை

46. யாவது பெரியகொம்பூதி சட்டித் தலையன் விளாவடி

47. புஞ்சைக்கு கோடங்கிச் சக்கிலியன் புஞ்சைக்கு கிழ கொள

48. க்கூட்டை வீருக்கு கிழக்கு வடக்கு எல்லையாவது கொம்பூ

49. திக் கல்வடி செயக்கும் உடையான் கருகுளம் இரங்கல்ச் செ

50. ய்க்கு தெற்கு இன்னாங் கெல்லைக் குள்பட்ட சிறு கொம்

51. பூதி இதைச் சாந்த நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மர

52. வெட்ட வறாணி குட்டம் மேல் நோக்கிய மரம் கீள் நோக்கிய கிணை

53. று குடிபடை பள்ளுப் பறை பாசி படுகை நிதி நிட்சேபம் செ

54. ய திரு பாஷணமும் சகல சமுதாயப் பிறாத்தியும் சல்லுங காவே

55. ரியும் புல்லு பூமியும் உள்ளவும் ஆதி சந்திராதித்த வரை சந்

56. திர பிரவேசம் ஆண்டனுபவித்துக் கொள்ள கடவர்ரா

57. கவும் இந்த தன்மத்தை பரிபாலனம் பண்ணின போர்களுக்கு

58. காசி ராமீசரத்திலே கோடி சிவலிங்க பிரதிட்டையும்

59. கோடி விட்டிணு பிரட்டையும் கோடி பிரம்ம பிரதிட்

60. டையும் பண்ணின பலத்தை அடைவார்கள் இந்த தர்மத்து

61. க்கு அகிதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே

62. ஆயிரங் காராம் பசுவையும் ஆயிரம் பிராமணரையும் மாதா

63. பிதாவையும் குருவையும் சிஷுவையும் திரிகளையும் வதை பண்

64. ணின தோஷத்தையடைவார்கள் உ இந்த தன்ம சாதனம்

65. எழுதினேன் சென்ன வீரப்ப பண்டாரா புத்திரன் சென்னவீரப்பன்

66. எழுத்து



இராமநாதபுரம் மூலக்கொத்தளம் செப்பேடு-1 முன்பக்கம்



# 17. இராமநாதபுரம் மூலைக்கொத்தளம் செப்பேடு - 2

*கோயில் வழிபாட்டுக்குத் துறைமுக வரிகள் தந்தமை*

இராமநாதபுரம் மூலைக்கொத்தளத்தில் இருக்கும் திரு கருப்பையா அவர்களிடமிருந்து தொல்லியல்துறை காப்பாட்சியர் திரு கோவிந்தராஜ்னால் துறைக்கு அன்பளிப்பாகப் பெறப்பட்டு இத்துறையில் உள்ளது.

இச்செப்பேடு 27.5X16 செ.மீ. அளவுடையது. முன் பக்கம் 31 வரிகளும் பின்பக்கம் 30 வரிகளுமாக 61 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இதனில் சக வருடம் 1659(கி.பி.1737) கலி வருடம் 4738 (கி.பி.1637) தமிழ் வருடம் துந்திபி (கி.பி.1742) ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல் உள்ளன. மன்னர் குமார முத்து விஜயரகுநாத சேதுபதி காத்ததேவர் (கி.பி.1730-40) பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரது பிரதானி இராமலிங்கம் பிள்ளை சேதுக்கரையில் சேதுராமலிங்கசுவாமி கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயில் இறைவனுக்கு நீராட்டு மற்றும் அமுதுபடிச் செலவுகளுக்காகப் பாம்பன் துறைமுகம், இராமேசுவரம் துறைமுகம் ஆகியவற்றில் வரும் மரக்கலம், படகு, தோணி, படவு ஆகியவற்றில் ஏற்றுமதி இறக்குமதியாகும் சரக்குகளுக்கு அரசிற்குக் கிடைக்கும் தீர்வை, சுங்கம் ஆகியவற்றில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. மேலும் தண்ணீர்ப்பந்தல், செவ்வாய்க் கிழமை மடம் ஆகியவற்றுக்கும் வேங்கடபதி சோசியருக்கும் முன்

---

இச்செப்பேடு சேகரித்தவர் திரு. சொ. கோவிந்தராஜ் காப்பாட்சியர் இராமநாதபுரம். இச்செப்பேட்டின் வாசகம் படித்து எழுதியவர் திரு க. ஈஸ்வரன். கல்வெட்டுப் படியாளர் சென்னை

ஒதுக்கிய வரிகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட பங்கும கோயிலுக்குத் தரப்பட்டது. ஏறப்ப பண்டாரம் இந்த ஆவணத்தை எழுதியுள்ளார்.

செப்பேடு

முன்பக்கம்

1. ஸ்ரீ முதும்கா மண்டலேசுரன் அரியராயிர தளவிபாடன் பாஷைக்கு தப்பு வார்
2. கண்டன் மூவராயிர கண்டன் கண்டனாடு கொண்டு கொண்ட னாடு குடா
3. தான் பாண்டி மண்டலத் தாபனாசாரியன் சோழ மண்டலப் பிறதிட்டாப
4. னாசாரியன் தொண்ட மண்டல சண்டப் பிரசண்டன். பூறுவ தெட்ஷண
5. பட்ஷ சமர் சத்த சமுத்திராதிபன் எளமுங்கொங்கும் யாள்ப்பாண பட்டண
6. மும் அளித்து கெசவேட்டை கொண்டருளின இராசாதி ராசன் ராச பரமேசுர
7. ன் இராசமாத்தாண்டன் இராச குலதிலதன் ராச மனோ பயங்கரன் துட்டரில்
8. துட்டன் துட்ட நெட்டுரன் துட்டரில் கொட்ட மடக்கி துரை ராச சிங்
9. கம் துரைகள் சிகாமணி துரைகள் ரேபந்தன் தொட்ட வாரந் தவராதவன்
10. அஸ்வசத்திர சோமன் அனும கேதனை கெருடகேதனன் அட்ட திக்கும
11. னோ பயங்கரன் வீரலட்சுமி விசையலட்ஷுமி தன லட்ஷுமி பாக்கியலட்ஷுமி மகாலட்ஷ
12. மி அட்டலட்சுமி நிவாசன் இளஞ்சிங்கம் தளசிங்கம் பனைகமன்னிய
13. சிங்கம் ஆத்துப்பாச்சி கடலிபாச்சி மதப்புலி ஆனைக் கரங் காத்தான் அந்த

14. ம் பிறகண்டன் நாலிக்கு வேலி சமறகோலாகலன் பஞ்ச வன்னராய ராவுத்தர்

15. மிண்டன் பணுக்குவார் கண்டன் குடைக்குரர்னை பரிக்கு நகுலன் வில்லுக்கு

16 விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் அறிவுக்கு அகத்தியர் திலநுதல மடமாதர்

17. மடலெழுதி வரு கமுகன் வீரவெண்பாமாலை சேமத்தலை விளங்கு மிருதானினான்

18. கெந்தமதான கிரியான் தொண்டியன்று துரைகாவலன் அரச ராவண ராமன்

19. அடியார் வேளைக்காரன் செங்காவி குடையான் செம்பி வளநாடான் தேவநக

20. ராதிபன் சேது காவலன் ராமனாத சுவாமி பறுபதவர்த்தினி காரியர் துரந்தரன் சிவ

21. சுப்பிரமணிய சுவாமி காரியர் துரந்தரன் அசுபதி நரபதி கெசபதி தளபதி சேது

22. பதி துகலூர் கூத்ததில் காத்தூராகை குலோத்துங்க சோழநல்லூரில் கீள்பால்

23. விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ இரணியகெற்ப யாதி ரெகுனாத்த சேதுபதி காத்த தேவ

24. ர்ரவர்கள் புத்திரன குமார முத்து விசைய ரெகுனாத சேதுபதி காத்ததேவ

25. ர்ரவர்கள் பிறிதிவிராட்சிய பரிபாலனம் பண்ணி அருளாநி நிறை சாலிபவாக

26. ன சகாத்தம் ககாருமக கலியுகம் சதுளாடிமடு இதன் மேல் செல்லா நின்ற

27. துந்துமி நாம சம்மட்சரத்தில் தெட்சணாயனத்தில் சாரிது விடு காத்திகை மீ

28. சுகில பட்சத்தில் பவுன அம்மவாசையும் பரணி நட்சத்திரமும் வாரிநா

29. மயோகமும் விபகரணமும் சோம கிறண புண்ணிய காலத்தில் ராமேசு

30. ரத்தில் சேதுக் கரையில் ஸ்ரீமாது இரணிகெற்பயாசீ முத்துக் குமார விசை

31. சுப ரெகுநாத சேதுபதி காத்த தேவர்ரவர்கள் பிரதானி ராமலிங்க பிள்ளை

பின்பக்கம்

32. சிவப்பிறதிட்டை பண்ணிவிச்ச சேதுராமலிங்க சாமிக்கு அபிஷேகஉரு

33. ய்வேத்திபத்துக்கு கட்டளையிட்ட தாம்பிற சாதனப் பட்டயங் கட்ட

34. ளையிட்ட ஊதியம் பாம்பன் துறைமுகத்திலே பாறுபடவு வருக்க

35. ளிலே தீருவை ஏத்துமதி இறக்குமதி தீருவைப்பட்ட சரக்கெல்ல

36. லாம் அரமனைக்குத் தீருவை பத்துபணம் தந்தால சேதுராமலிங்க சுவா

37. மிக்கு மகமை ஒரு பணமும் துறைமுகம் சுங்கத்திலே தீருவைப் பட்

38. ட சரக்கெல்லாம் பத்து பணத்துக்கு ஒரு பணமும் தலைச் சிமையாக

39. வருகிற சரக்கெல்லாம் சுமைக்கு அரைக்கால் பணமும் இராமீ

40. சுரம் துறைமுகத்தில் வருகிற பாறு படவு ஏத்துமதி இறக்குமதி களிடு

41. ல அரமனைக்கு தீருவை பட்ட சரக்கெல்லாம் அரமனைக்கு தீருவை

42. பத்து பணந் தந்தால் சேதுராமலிங்க சுவாமிக்கு மகமை கால்ப்ப

43. ணமும் துறைமுகத்திலே அன்னு தண்ணீர்ப் பந்தல் செல்வாய்க்சின

44. மை மடம் வெங்கிடபதி சோசியர் இந்தமூன்று வகைக்கு மெடுத்துவ

45. ருகிற அளவிலே மூன்று பங்கையும் நாலு பங்காக பண்ணி ஒரு பங்கு அன்

46. ளூம் சுங்கம் துறையிலே வந்து திருவல பட்ட சரக்கெல்லாம் அர

47. ['சிவசுப்ரமணியதேவர' என்று தெலுங்கில் உள்ளது]

48. மனைக்குப் பத்து பணம் திருவலைக்குச் சேதுராமலிங்க சுவாமிக்கு மகமை

49. கால் பணமும் தலைச்சுமையால் வருகிற சரக்கெல்லாம் சிமைக்கொ

50. ரு காசும் கட்டளை வரிபணிலே பெரியகட்டளை தேவர் கட்டளை சுக்ரவாரக் க

51. ட்டளை மதத சிங்வரா கட்டளையிலும் கிரையத்துக்கு விக்கிற நெல்லு மத்தச் சிறு

52. தானியங்களுக்கும் பணத்துக்கு கால்படி வீதம் அளவுமை இப்படிக்குத் தான பூறுவம்

53. ராகச் சேதுராமலிங்கப்பனிடத்திலே தாம்பிற சாதன பட்டையங் கட்டளை யிட்டபடிக்கு

54. சந்திராத்தவரை சந்திரப் பிரவேஷம் உள்ளு மட்டும் ஆண்டு அனுபவித்து வர

55. க்கடவராகவும் யாதாருமொருவர் இந்தச் சேதுக்கரை சிவலிங்கத்தும் கோவி

56. ல்த் தர்மத்தைப் பரிபாலனம் பண்ணின பேருக்கு காசியி லேயும கோடி சிவலிங்கப்பிரதி

57. ட்டை பண்ணின பலத்தையும் கோடி பிரம்ம பிறதிட்டை பண்ணின பலத்தையும் அடையக்க

58. டவர்ராகவும் இந்த தன்மத்துக்கு யாதொருமொருதர் விக் கினம் பண்ணின பேர்கள் கா

59. சியிலேயும் தனுக்கோடி கரையிலேயும் கோவதை பண்ணின தோசத்திலேயும் பிரம்

60. மவதை பண்ணின தோஷசத்திலேயும் போகக் கடவர்ராகவும் இந்தபடிக்கு பிறதானி ராமலிங்

61. கம் பிசானா சொல்படிக்கு எறப்ப பண்டாரம் கய்எழுத்து உ குருவே துணை உ



இராமநாதபுரம் மூலக்கொத்தளச் செப்பேடு - 2 முன்பக்கம்



இராமநாதபுரம் மூலகொத்தளம் செப்பேடு - 2 பின்பக்கம்

# 18. வேலன்பட்டி செப்பேடு

*அன்னதான மடத்திற்கு தர்மசாதனப்பட்டயம்*

தொல்லியல்துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் அலுவலகத்தில் இச்செப்பேடு உள்ளது.

23 X 18 செ.மீ. அளவுள்ள இச்செப்பேட்டில் முன்பக்கம் 25 வரிகளும் பின்பக்கம் 13 வரிகளுமாக பெரிய எழுத்தில் செப்பேட்டு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

சக வருடம் 1571 (கி.பி.1649) கலிவருடம 4750 (கி.பி.1649) தமிழ்வருடம் விரோதி (கி.பி.1649) ஆகிய ஆண்டுக் குறிப்புகள் உள்ளன. நத்தம் பாளையப்பட்டு முத்துலிங்கய நாயக்கர் குறிப்பிடப்படுகின்றார்.

முத்திலிங்கய்ய நாயக்கர் வேலன் பட்டியில் அன்னதான மடம் அமைத்து அதன் செலவுகளுக்காக பூதகுடி கிராமத்தில் நஞ்சைநிலம் செய் 20ம் புஞ்சை நிலம் 19 கலம் விதைப்பாடு அளவும் கொடுத்துள்ளார். கிராமத்தின் எல்லைகளில் பல திருப்பங்கள் இருந்து மொத்தம் 19 சூலக்கற்கள் நடப்பட்டு திசைகள் திக்பாலர் பெயரில் இசானிய மூலை அக்கினி மூலை என்று சொல்லப்பட்டுள்ளன.

## செப்பேடு

### முன்பக்கம்

1. அன்னதான மடம் தற்மத்துக்கு
2. து(ர)° ம்பிற சாதன பட்டையம் உ சொஷ்
3. த்த ஸ்ரீ சாலிவாகன சகாற்த்தம் கூ(ரு)ள

---

தொல்லியல்துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் திரு.கி.ஸ்ரீதரன மூலம் இச்செப்பேடு பெறப்பட்டு திரு சி.இராமச்சந்திரன். கல்வெட்டாய்வாளர். சென்னை இதனைப் படித்துக் குறிப்பெழுதியுள்ளார்.

4. எழுக கலியுகத்தும் சகூனாறுய் இதில
5. மேலச் செலவா நின்ற விரோதி வருஷ
6. காற்த்திகை மீ ரு உட சோம வாரமு
7. ம் திறிதிகையும் மூலா நக்ஷெத்
8. திரமும் கூடிய சுபதினத்தில் யாத
9. வ கோத்திரோற்ப்பவராகிய ஷொ
10. ந்திலிங்கய நாயக்கரவர்கள் புந்
11. திரன் முத்திலிங்கய நாயக்கரய்
12. யனவர்கள் வேலம்பட்டி அன்ன
13. தான மட தற்மசாதனம் பண்ணி வி
14. ச்சபடி சாதனமாவது பூதகுடிக்கி
15. றாமம் பள்ளபட்டி பணங்குடிக் குள
16. ம் இந்த நஞ்சை புஞ்சை எல்லை
17. க்கு விபரம் பூதகுடி முனை நாளிக்க
18. ல் காயத்திக் கருங்கல்ப்பாறை இறக்க
19. த்தில் இராவிய மூலைக் கட்டுக்கால்
20. உசிலைமரம் அக்கினி மூலையில் கொ
21. ங்கார்ன்னை வடகரை நிருதிமூலை
22. யில் ஆத்தோரத்தில் கொப்பைய
23. ம்பட்டி எல்லை ஆத்திமரம் வாய்வு
24. மூலைக் குளத்துள்ளப் வேப்பமரம்
25. இந்த நாங்கு எல்லைக் குள்ளிட்ட

பின் பக்கம்

26. குலக் கல்ப் பத்தொன்பதுக்குள்
27. சேற்ந்த நஞ்சை புஞ்சையில் தே
28. தவதாயம் விறமதாயம் மட தற்ம
29. ம் நீங்கலாக புஞ்சை விரை பெசு

30. ஈ . . ச டு நஞ்சை செய் டைபிடு

31. இதில்ச் சேற்ந்த அஷ்ட்ட போக

32. தேச சுவாமியங்களுடன் ஆஷ

33. சந்திராற்க்க ஷ்தாயியாக தற்மப

34. ரிபாலனம் பண்ணின பேற்க்

35. கு அஸ்வமேதயாக பலன் ஷிக

36. ரதம் பண்ணின பேர் கெங்கை

37. கக்கரையில்க் கராம் பசுவை இ

38. ம்சை பண்ணின பலன் வு



ஜோனன்பட்டி செப்பேடு - முன்பக்கம்



வேலன்பட்டி செப்பேடு - பின்பக்கம்

# 19. நத்தம் செப்பேடு

*கோயில் வழிபாட்டுக்கு வரிகள் தர இந்து இஸ்லாமிய வணிகர்களின் இசைவுப் பட்டயம்*

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோயில்பட்டி அருள்மிகு கைலாசநாதர் கோயில். திரு சுந்தரேசக் குருக்களிடம் உள்ளது.

31 x 16 செ.மீ. அளவுள்ள இச்செப்பேட்டில் முன்பக்கம் 53 வரிகளும் பின்பக்கம் 22 வரிகளுமாக 75 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் குலக்குறி உள்ளது.

சகவருடம் 1663(கி.பி.1741) தமிழ் வருடம் துன்மதி (கி.பி.1742) ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. பாளையப்பட்டு நாயக்கர் சொக்கலிங்க நாயக்கர் குறிக்கப்பட்டுள்ளார்.

நத்தம் பேட்டை, சொக்கலிங்கபுரம் பேட்டை ஆகிய சந்தைகளில் வணிகப்பொருள்களின் மீது வசூலிக்கப்படும் வரிகளைக் கொண்டு சொக்கலிங்க நாயக்கருக்கு பிரியமான கைலாசநாதர் கோயிலில் அர்த்த ஜாம பூசையும், பள்ளியறைக்குச் செல்லும் பல்லக்குச் சேவையும், பிற வழிபாடுகளும் சின்னப் பண்டாரம் மூலம் 56 தேசத்து வணிகர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை இச்செப்பேடு குறிப்பிடுகிறது. மேற்சொன்ன பேட்டைகளில் உள்ள இந்து வணிகர்கள் மட்டுமல்லாது இஸ்லாமிய வணிகர்களும் வரி தந்தமையால் ராவுத்தர் என்ற பின்னொட்டுச்சொல்லுடன் உள்ள இஸ்லாமிய வணிகர்களது பெயர்களால் தெரியவருகிறது. 26 ஊர்களைய அவரு உள்ள வணிகர்கள் பெயர்களும் இசைவு தெரிவித்து இதனில் காணப்படுகின்றன.

---

நத்தம் கோயில் பற்றிய ஆய்வு நூல் எழுதிய இத்துறைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன (1991-92) மாணவர் திரு எச்.பி.செல்வராஜால் சேகரித்துப் படியெடுக்கப்பட்டது.

முன்பக்கம்

1. ஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் எதிரை
2. விநாடவ தொரந்திலிங்கயனாயக்கரய்யனவ
3. ர்கள் குமாரன் சொக்கலிங்கனாயக்கரய்ய
4. வவர்கள் பேற்றும் நத்தங் கபிலாஷ நாத சு
5. வாமியருக்கு அத்தசாமம் கட்டளை பல்லக்குச்
6. சேருவை அபிஷேக நெய்வேத்தியம் பள்ளிய
7. றைக்கு காளாஞ்சி பாக்கு வெத்திலை கூடன்
8. சாம்பிராணி திரைக்கட்டளை நடக்கத் தக்கதா
9. க முத்தேழு மணியக்காறன் முன்னிலைக்கு ந
10. டப்பிக்கச் சொல்லி சமூகத்தில்க் கட்டளை
11. யிட்ட படியினாலே அந்தபடிக்கு முத்தெழு மணி
12. யகாறன் வந்து நத்தம்பேட்டை சொக்கலி
13. ங்கபுரம் பேட்டையில்க் கூடிய அன்பத்
14. தாறு தேசத்துப் பலரையுங் கேட்டுக் கொ
15. ண்டு இந்த தற்மம் என்றைக்கும் புறொவற்
16. த்தியாக நடக்கத் தக்கதாய்க் கேட்டுக் கொ
17. ண்டது சொல்நன்த்திரி சாலிய வாகன ச
18. காற்த்தம் ஆகாகுயிரு க்கு மேல செல்லா
19. நின்ற துன்மதி ௵ ஆனி ௴ உயஉ தேதி நத்
20. தம்பேட்டையில் கூடிய அன்பத்தா
21. று தேசத்துப் பலரும் சொக்கலிங்கபுர
22. ம் பேட்டையில கூடிய அன்பத்தா
23. று தேசத்துப் பலரும் மனப்பூறுவமா
24. ய் சூரியசந்திர காலம் வரைக்குங் கல்லு
25. ங் காவேரியும் உள்ளவரைக்கும் புத்திர
26. பவுத்திர பாரம்பரியமாக நத்தம்பேட்
27. டையில் உப்புத் தலைசுங்காய தானியஞ்

28 சவேரி பாகரு பிள்ளு பஞ்சனபாரம் சகல
29. மான பொதிக்கும நடை ஒன்னுக்கு
30. அராவலரைகளானி பணமும் சொக்க
31. லிங்கபுரம் பேட்டையில் நடை ஒன்
32. னுக்கும் கனைக்குமதிச்ச பொதிப்படி
33. க்கு பொதி ஒன்னுக்கு அரைமா பண
34. மும் இந்தபடிக்கு குடுத்து வருகுறோமென்று
35. சம்மதித்து சாதனப் பட்டையம் எழுதிக்
36. குடுத்தோம் உள்ளூர் நத்தம் பேட்டை
37. யில் மாணிக்கம் செட்டியார் இமமுடி
38. கான்மீராசாபு நயினாக்கான் சேஷன்
39. செட்டி புவனசெட்டி சோசிகுறிச்சிக் கு
40. ன்பக்கர் மீரா ராவுத்தன் பக்கீரு ராவுத்த
41. ன் சொக்கன்செட்டி வெங்கிடாசலம்
42. செட்டி உள்பட்டார் சொக்கலிங்கபு
43. ரங் கனியராவுத்தன் பளனிசெட்டி உள்
44. பட்டாரும் வேலன்குடி நல்லதம்பி செ
45. ட்டி உள்பட்டார் திருப்பத்தூர் சிங்க
46. ள சயிலு ராவுத்தன் நெற்குப்பை சே
47. ய்வலூர் பெரிய மாமனராவுத்தன்
48. பொன்னமராபதி சின்னான்செட்டி
49 உள்பட்டார் செம்பூதிக் குப்பன் செ
50. ட்டி உள்பட்டாரும் திருமயம் திருவ
51. ப்பூர் எழுவன்கோட்டை கன்றா
52. கோட்டை அன்னவாசல் இளையா
53. ன்குடி வெறுவருகோட்டை அட்டை

பின்பக்கம்

54. ப்பட்டி சுக்கிராயன்பட்டி கனகமாக்

55. துப்பட்டி மறுநூத்து எமசக்லிப்பு
56. ரம் திண்டுக்கல் மதுரை சோளகுவா
57. ந்தான் திருமங்கலம் காமுனாயக்கர்
58. வர் அம்புத்தூறு தேசத்துப் பவர
59. னைவோரும் சம்மதித்து தாம்புர சாத
60. னப் பட்டயம் எழுதிக் கொடுத்தோ
61. ம் கபிலாசநாத சுவாமியார் சன்னதி
62. யில் சின்னையபண்டாரம் மணிக்கத்தில்
63. டண்டு பண்ணின தர்மம் என்றென்றைக்
64. கும் புறோவிர்த்தியாகும்படிக்கு ஆதா
65. ரொருதர் நடப்பிச்சார்களோ அவ
66. ர் கோடி கன்னிகாதானம் பண்ணி
67. ன பலனை அநுபவிற்பாரர்களும் இத
68. ற்கு யாதொருத்தர் விகாதம் பண்ணி
69. ன பேர்கள் கெங்கை கரையிலே
70. காராம்பசுவை வதைத்த பாவத்தி
71. லே போக கடவராகவும் இந்தபடிக்கு
72. இவர்களைவோரும் சம்மதியில் வி·
73. னதீர்த்தா பிள்ளை மகன் தாண்டவரா
74. ய பிள்ளை சொல்படிக்கு சம்பிறிதி
75. சொக்கு பிள்ளை கையெழுத்து உ



நத்தம் செப்பேடு - முன்பக்கம்



நத்தம் செப்பேடு - பின்பக்கம்

# 20. பழனிச் செப்பேடு

*தாய் தந்தையர் பெயரில் சத்திரங்களும் கொடையும்*

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள நத்தம் திரு எம்.எம். கனைப்பனிடம் இச்செப்பேடு உள்ளது.

முன் பக்கம் 31வரிகளும் பின்பக்கம் 30 வரிகளுமாக 61 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

சகவருடம் 1703 (கி.பி.1781) கலிவருடம் 4882(கி.பி.1781) தமிழ் வருடம் பிலவ (கி.பி.1781) ஆகிய ஆண்டுக் குறிப்புகள் உள்ளன. நத்தம் யாதவகுலத்து தோற்றிலிங்கையநாயக்கர் பேரன் குமாரலிங்கைய நாயக்கர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

குமாரலிங்கைய நாயக்கர் தனது தந்தை எறுதாது லிங்கய நாயக்கர் மற்றும் தாயார் தாநாமமாள் அவர்கள் பெயரில் இரண்டு சத்திரங்கள் கட்டி அதன் நிர்வாகச் செலவுக்காக ஏற்கபட்டிகிராமம், காரைக்குன்று, அம்மாபட்டி, ஆகிய ஊர்களைக் கொடுத்துள்ளார். இவ்வூர்களில் உள்ள நிலங்களின் எல்லைகளின் திசைகள் ஈசானிய, அக்னி, நிருருதி, வாயு என்று திசாபாலகர்களின் பெயரில் சொல்லப் பட்டுள்ளது. நிலத்தின் ஒவ்வொரு திருப்பத்திலும் எல்லைக் கல்லாகக் குலக்கல் நடப்பட்டதால், 'குலகால் 11க்குள் சேர்ந்த', 'குலக்கல் 14க்குள் சேர்ந்த' என்று நிலங்கள் குறிக்கப்படுகின்றன.

இச்செப்பேட்டில் உள்ள வாசகம் அப்படியே நத்தம் அருகில் உள்ள சத்திரம் ஊராளிப் பட்டியில் கல்வெட்டாகவும் பொறிக்கப் பட்டுள்ளது. கல்லிலும், செம்பிலும் வெட்டிக் கொள்க என்று வரும் கல்வெட்டுச் சொற்றொடர்க்கு இச்செப்பேடு நல்ல எடுத்துக்காட்டாகும். இதனில் சொல்லப்படும் சத்திரங்கள் இன்று பழனிக்குப் பாதயாத்திரை மேற்கொள்ளும் வழித்தடத்தில் உள்ளன.

---

கல்வெட்டு இதழ் எண் 36 ஆங்கிரச ஆண்டு கார்த்திகைத் திங்கள் (1992, நவம்பர் திங்கள் பக்.1-3. கட்டுரையாக எழுதியவர் திரு க. இராசகோபால் கல்வெட்டாய்வாளர், மதுரை.

## செப்பேடு

### முன்பக்கம்

1. சத்திரத்து தற்மத்துக்கு தாம்பிறசாதனம்
2. சொத்தஸ்ரீ சாலிவாகன சகாற்த்தற் ஆனாக
3. லியத்தம் சகூஅாஅடுடூ இதின் மேல்ச் செல்லா
4. நின்ற பிலவ ஷூ தை மீ ய்கஉ சோமவார
5. மும் பவுற்ணமையும் பூச நக்ஷெத்திரமும் கூடின
6. சுபதினத்தில் யாதவ கோத்திரோற்பவராகிய தொ
7. ந்திலிங்கய நாயக்கரவர்கள் பவுத்தரன் எழுதா
8. து லிங்கய நாயக்கரவர்களின் புத்திரன் குமாரலிங்
9. கய நாயக்கரய்யனவர்கள் சத்திரத்துக்கு த
10. ற்ம சாதனம் பண்ணிவிச்சபடி த
11. ாதனமாவது நம்ம அய்யார் எழு
12. தாது லிங்கய நாயக்கரவர்கள் ச
13. த்திரத்துக்கும் நம்மட அம்மாள் தாத
14. ம்மாளவர்கள் சத்திரத்துக்கும் இந்
15. த ரெண்டு சத்திரத்துக்கும் நஞ்சை
16. புஞ்சை எல்லைக்கு விபரம் ஏற்க்
17. கபட்டி கிராமத்துக்கு ஈசானிய மூ
18. லையில் வெள்ளைக கல் நாட்டியும்
19. மன் கோவில் அக்கினி மூலையில்
20. ஆதிபாளையத்து வடக்கு நிரு
21. தி மூலையில் செட்டியன் அணையறு
22. வாய்வு மூலையில கருங்கல்லுக் கு

23. டு இந்த நான்கு எல்லைக்குள்ளி
24. ட்ட குலக்கல் பதினொன்றுக்கு
25. ளச சேர்ந்த புஞ்சையில் தேவதாய
26. ம விருமதாயம் நீங்கலாக நின்ற பு
27. ஞ்சை விரை நிலம் ஈசுரசெ உ யும் நஞ்சை
28. செயிய சம் இதுவும் அம்மாள் சந்தி
29. ரத்துக்குக் காரைக் குண்டு அம்மா
30. பட்டிப் புரவில் ஈசானிய மூலை நரி
31. க்குட்டு அக்கினி மூலை பாப்பா மலைசரி

பின்பக்கம்

32. நிருதி மூலை பெயிலூத்து ஓடை வா
33. ய்வுமூலை சக்கானி புஞ்சை வேப்ப
34. மரம் இந்த நான்கு எல்லைக்குள்ளி
35. ட்ட குலக்கல் பத்துக்குள்ச் சேர்
36. ந்த புஞ்சையில் தேவதாயம் நீ
37. ங்கலாக நின்ற புஞ்சை விரை
38. நிலம் ஈசுரஉயும் அதிராசசேரிக்குள
39. த்தில் ஈசானிய மூலை பெரியாத்து
40. இலந்தை அக்கினி மூலையில் நா
41. ச்சான் புளி நிருதி மூலையில் நவ்வ
42. ல் வாயவு மூலையில் வேலடி மருகால்
43. இந்த நான்கு எல்லைக்குள்ளிட்ட
44. குலக்கல் பதினாலுக்குள்ச் சே
45. [ர்]ந்த நஞ்சையில் தேவதாயம் வி

46. ருமதாயம் நீங்கலாக நின்ற நஞ்
47. சை செய் டயிசை புஞ்சை விரை மூன்று மா
48. குளத்துத் தண்ணீர் பிடி கல் ந
49. ாட்டுக்குள்ளிட்ட புஞ்சை விரை முக்கால்
50. ஆக வகை மூணுக்கூடிய புஞ்சை
51. விரை 14 கலம் 1/4 உ நஞ்சை செ
52. யி 39 1/2 நஞ்சை புஞ்சைக்கு
53. ள்ச் சேர்ந்த அஷ்டட போக தே
54. ச கலாமியங்களுடன் ஆர்ச்சந்
55. திராற்க்கனதாயிபாக தற்மம் ப
56. ரி பரிபாலனம் பண்ணிக் கொண்டு
57. வருவாராகவும் இந்த தற்மம் பரிபாலன
58. ம் பண்ணின பேற்க்கு அஸ்வமேதயாக
59. பலன் விகாதம் பண்ணிந பேற்க்கு கெ
60. ங்கைக் கரையில் காராபசுவை கொ்யி
61. சை பண்ணின பலன் உ



பழனி செப்பேடு - முன்பக்கம்



பழனி செப்பேடு - பின்பக்கம்

# 21. நெய்வேலிச் செப்பேடு

*பண்ணாட்டார் பெருமை நிலைநாட்டியவர்க்கு குரு பதவியும், கொடைகளும்*

இச்செப்பேடு நெய்வேலியில் வசித்துவரும் திரு என்.எஸ். பெரியசாமி அய்யரிடம் உள்ளது.

முன் பக்கம் 73 வரிகளும் பின் பக்கம் 92 வரிகளும் ஆக 165 வாசக வரிகளுடன் நீள் சதுரமாகக் காணப்படும் இச் செப்பேட்டில் துளையுடன் கூடிய வட்டக் கைபிடி அமைப்பு மேல்பகுதியில் உள்ளது. பிடி அமைப்பில் முன்புறம் 6 வரிகளில் 'ராசகெம்பீரராயபண்ணவர்களுக்கு எழுகரைநாட்டுப் பண்ணாட்டாரெ திக்குறுத்த சாதனப் பட்டையம் உ' என்றும் பின்புறம் 5 வரிகளில் 'யிடங்கை வாத்தியம் மேள முதலான தாரை கொம்பு துடுப்பு தப்பட்டை வாத்தியவுள்பட' என்றும் பொறிக்கப்பட்டுள்ளன. முன்பக்கம் கைலாயகிரியில் உமா சகிதராக சிவபெருமான் அமர்ந்த வண்ணம் எதிரே உள்ள முனிவருக்கு மாலை வழங்கும் காட்சி கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. முனிவரின் அருகில் ஓமத்தீயிலிருந்து அம்பும் வில்லும் ஏந்திய உருவம் வெளிப்படுவதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. உமையின் அருகில் எருமைத்தலை மீது துர்க்கையுருவம் உள்ளது. துர்க்கையை அடுத்து ஆசனத்தில் அமர்ந்த ஆண் உருவம் பேசுவதுபோல் காட்டப்பட்டுள்ளது. இவை செப்பேட்டில் சொல்லப்படும் செய்திகளுக்கு ஒப்ப உள்ளன.

இச்செப்பேட்டில் சகவருடம் 1555 (கி.பி.1633), கலிவருடம் 4734 (கி.பி.1633) தமிழ் வருடம் ஸ்ரீமுக (கி.பி.1633) ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. வெங்கிடபதி நாயக்கர் மற்றும் தளவாய் பெத்தநாயக்கர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

---

கல்வெட்டு இதழ் எண்.22. பக்.26 25-44. 'பண்ணாட்டார் பட்டயம்' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் நடன. காசிநாதன். இயக்குநர் தொல்லியல் துறை சென்னை. கண்டறிந்து படித்து தமிழாசிரியர்கள் கருத்தரங்கு மலரில் கட்டுரையாக எழுதியவர் திரு ச. செல்வராஜ் தொல்லியல் அலுவலர் சிதம்பரம்.

ருத்திரப்பள்ளியார் வரத்தினால் தோன்றிய பாரபபள்ளி துட்டபள்ளி, சிஷ்டப்பள்ளி, வன்னிய பள்ளி, அரசபள்ளி என ஐந்து சாதி பள்ளிகள் தேசமெங்கும் பரவி பண்ணாட்டார் என்று புகழுடன் இருந்தபோது அவர்களுக்குரிய விருதான பஞ்சவர்ண பாவாடையை வலங்கையார பறித்துக் கொண்டனர். சேலம், ராசிபுரம், சேந்தமங்கலம், பூந்துறை, பூவாணி, மொகனூர், தென்கரைக்கோட்டை என்று பலபகுதியில் இருந்த இடங்கை பண்ணாட்டார்கள் ஒன்றுகூடி வலங்கையருடன் சேலம் அருகில் கருப்பூரில் கைகலக்கும் நிலை ஏற்பட்டது. கம்பள ராயரான வெங்கிடப்ப நாயக்கரும் தளவாய் பெத்தன நாயக்கரும் சமரசம் செய்ய முன்வந்து வலங்கையாரை அழைத்து அவர்களது தோற்றம் முதலிய புராணங்களைக் கேட்டனர். பின்னர் இடங்கையாரை அழைத்து அவர்களது புராணத்தைக் கேட்டனர். இந்நிலையில நாராயண தீக்ஷிதர் குமாரர் ராசநாராயண அய்யர் வலங்கை, இடங்கையா சமயார்த்தம், இடங்கையார் பிறப்பு வளர்ப்பு, வன்னியபுராணம் என அனைத்தையும் எடுத்துக் கூறினார். விருதுகள் இடங்கையாரான பண்ணாட்டார்க்கு உரியது என்றும் கூற வலங்கையார் அதனை ஏற்க மறுத்து காஞ்சிபுரம் பொன்னம்மன் சன்னதியில் வலங்கை இடங்கை இருவர் பேரும் திருவெழுத்தாகத் தனித்தனியே எழுதி அக்கினியிலிட வலங்கை திருவெழுத்து வெந்து போனதென்றும் இடங்கை திருவெழுத்து வேகாததால் அவர்களே விருதுக்கு உடைய பெரியோர் என கம்பள ராயர் முடிவு அறிவித்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தங்களது பெருமையை நிலைநாட்டிய ராசநாராயண அய்யரைச் சிறப்புச் செய்வதற்காக பண்ணாட்டார் சேலம் சுகவனேசுவரநாதர் கோயிலில் கூடி பொன்னம்மன் சாட்சியாக கீழ் கண்டதீர்மானங்களை நிறைவேற்றி அவருக்குப்பட்டயம் எழுதிக் கொடுத்தனர். அதன்படி வருடம் தோறும் குருக்காணிக்கை பெரியகுடிக்கு 2 பணம், சிறிய குடிக்கு 1 பணம் கலியாணத்தில தாரைவார்க்கிற நீர்ப்பணம் மற்றும் ஏர் ஒன்றுக்கு நான்கு வள்ளம் தானியம் கொடுப்பது என்று தீர்மானித்தனர். இத்தீர்மானத்திற்கு 62 ஊர்களைச் சேர்ந்தவர்கள் ஒப்புதல் அளித்தனர் ஊர்பெயர்களும் ஆட்பெயர்களும் நீண்டப்பட்டியலாகச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

செப்பேடு முன்பக்கம்

கைப்பிடி அருகில் 6 வரிகளில் உள்ள வாசகம்

'ராசநாராயணய்யனவர்களுக்கு எழுகரை நாட்டு பண்ணாடடாரெழுதிக் குடுத்த சாதன பட்டையம் உ'

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா விஷ்ணுவானவர் தம்முட் பாதார விருதத்தினாலே அளக்கப்பட்ட விஸ்று

2. பூலோகமெங்கும் அசையாமல் காத்து செய ஸ்தம்பம் நாட்டி வைக்கும் வன்னிய குல மகா மண்ட

3. லேஸ்வரன் கண்டரில் கண்டன் மிண்டரில் மிண்டன் வண்டராவுத்தன் உத்தண்ட கோலாகலன் விடங்

4. கைச் சமய குலதிரன் மதியாத வன்னியப் பெருமாள் மணிமகுட முடி மாலை சூடும் மனோ பயங்க

5. ரன் ஈழ மிலங்கையுந் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராச பரமேஸ்வரன் நவகண்ட சக்கி

6. ரவர்த்தி மலை சுரங்கிலும் மணங்கலங்காதவன் ஒரு கொடைக் கீழ் உலக முழுவதும் ஆண்டராசகோலா

7. கலன் சுவாமி கயிலாசகிரிக்கு பிறதானிக்காரகவும் சதகோடிச் சத வருஷமான அக்கினி பாண

8. ம் பெத்தவர் சங்குநிதி பதுமநிதிக்குடையவரான குபேரனைப் பொக்கிஷமாகப் படைத்தவர் கண்ட

9. னாடு கொண்டு கொண்ட னாடு விடாத மகாமேரு சமான வங்கிஷ நாராயணன் வங்கிஷ பரிபாலகர்

10. வங்கிஷ சிந்தாமணிகள் செங்கழுநீர் புஷ்டம் வாடாத மாலை வர்ணத் துடுக்குயில் வலம்புரிசங்கும் பஞ்ச

11. வர்ணப் பாவாடை உடனே காமாட்சி அம்மன் கையில் முத்து மாலிகையும் மோகனப் பதக்கமும் அழிவி

12. லாச் செல்வமும் அதிகவரம் பெத்தவர் அக்கினியில் பிறந்து அம்பினூராங் கண்டவர் கெங்கை கொ

13. ண்டான் சோழந் திருமுடி காத்தவர் பீடாளநாடுக் கிழவனாகிய மிலவன் வாதாவியைச் செயித்துக் கா

14. சுமாரிஷி கன்னி அபிமானங் காத்தும் சோழநாடு விளங்காத்து[1] துஷ்ட ராட்சதாளைக் கொன்றும் அறுபத்துனா

---

[1] வளங்காத்து என்று படிக்கவும்

15. வடிக் கம்பத்திலேறி நமனைப பசாரித்த வன்னிய குலராசன் முன்னூல் பின் குடுமி[2] புலிக்கொடிப் பதா

16. கையும் அஞ்சடஞ்ச விருத்தும் பெத்த யிடங்கை சமயத்துக் கதிபதியானவர் கல கண்டிகைத் தேரு

17. ம் அக்கினிப்புரவியும் சாமித்துரோக வெள்ளடையைத் தவள சங்கமும் செகசம்புக் குடையும் பஞ்ச மு

18. கத் தீவட்டியும் முடைத்தான கலை சாம்மிறாச்சிய ' லக்ஷூமி வியாசன் சிவசமய விஷ்ணு சமய

19. தேவப் பிறாமண காரிய துரந்தரர் ஆயிள்ரோக்கி அஷ்ட ஐஸ்வரிய விஸ்விசைய பராக்கிறமர் எழுகை

20. ர நாட்டுக் கதிபதியான சறுவசம்மாவி யபிமானங் காத்தவர் விபூதி ருத்திராக்ஷ மாலிகாபரணர் அன்

21. னதான விநோதர் சகல திறம் பரிபாலகர் குமாரசுவாமியையும் துர்க்கையும் படைத்தவராகப் ப

22. டைத்த பன்னாட்டாரிட கீர்த்தி வற்கப் பிறப்பு வழி விளங்கி ஸ்பிரம் தேவி அனுக்கிறகத்தினாலே

23. வேத மொழி விளங்கிய சறுவ சிவ தயாபரனான வில் வீர பராக் கிறமரான ருத்திரப்பள்ளிய

24. ரா குமாரராகிய திலகங்கள் வச்சிரபாகன் கங்கை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன் மி

25. வர்களாகம் கதை பூறுவம் ளது வேதத்துக் கஞ்சா வேதமென்றும் மகாபாரதம் விளங்கின

26. து அந்த் சொச்சம் நின்றது வாதாவியைச் செயித்து ருத்திரப் பள்ளியார் ஆண்டது வாதாவி ரத்தி

27. னாகிரிப்பட்டின மீழ மிலங்கை யீளமையோற் பற்லத மெட்டுத் திக்கு மஷ்டதிக்கு பாலகர் கா[வ]

---

2. பின்குடுமி என்று படிக்கவும்
3. வரிக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது.
4. சாம்ராச்சிய என்று படிக்கவும்

28. ஷாதிப செம்பூத்தீபம் ஆதிசேஷன் ஸஹஸ்ர பணா பணிம பரிசத்து த்வதல புவன மத்யலோக ஜம்பு

29. ந்தீப மகாமேரு தெக்ஷண பார சம்ப்ரதவு கண்ட பிறபஞ்சயம் அங்கதேசம்[5] முதல் ரேவண தேசபரியந்

30. தம் யிப்படி யிலங்கா நின்று அபத்தாறு[6] தேசாதி தேச மீழ யிலங்கையும் திறை கொண்டருளிய ராச

31. ராசேஸ்வரன் நவகண்ட சக்கிறவர்த்தி மலை கலங்கிலு மனங் கலங்காத வில்விர பராக்கிரம ருத்

32. திரப் பள்ளியார் வரத்தில் வந்த நீலகங்கன் செங்கை பரிபாலன் வச்சிரபாகன் பரசுராமன் சம்பு .

33. ல வேந்தன் யிந்த அயிவர் மரபில் வந்த பார்ப்பள்ளி யென்றும் துட்டப்பள்சி யென்றும் சிஷ்டப்பள்ளி யெ

34. ன்றும் வன்னியப்பள்ளி யென்றும் அரசப்பள்ளி யென்றும் யிப்படி அஞ்சு சாதிப் பள்ளியும் தேச தேச மெ

35. வ்வாம் பரவி நிற்கும் பன்னாட்டார் சங்கோசிகையில் விருது பஞ்சவர்ணப் பாவாடையை வலக்கைப்

36. யார் பிடுங்கும்போது சங்கொற்றி சேலம் அழகாபுரம் பன்னாட்டாருடன் முறை செய்யும் பொது யிட

37. ங்கைச் சமையம் பன்னாட்டார் கூட்டம் சேலஞ்சீமை எழுபத்தாறு நத்தத்திலுள்ள பன்னாட்டார்க

38. ளும் தெவிபூர் னாடு முப்பத்திரெண்டு கிறாமத்திலுள்ள பன்னாட்டார்களும் ஆதினாடு அறுபத்திநாலு நத்

39. தத்திலுள்ள பன்னாட்டார்களும தம்மம்பட்டி மங்கலபுரத்திலு ள்ளோர்களும ராசிபுர னாடு சேந்தமங்கல

40. ம் ஏழூர னாடு பரமத்தி பிதத்திப்பள்ளி னாடு மணலி னாடு தகடப்பாடி னாடு பூந்துறை னாடு பூவாணி னாடு சா

41. ம்பள்ளி னாடு ஓமலூர் அஞ்சுகரை னாட்டிலுள்ளோர்களும் தளம்புச்சீமையிலுள்ள வன்னியரும் தென்ங்க

---

5. அங்கதேயம்

6. அய்ம்பத்தாறு

42. ரைக் கோட்டை மீது முதலாகிய தேச தேசத்துப் பண்ணாட்டார்களும் மிடங்கைக்குள்ளாகிய சறுவ சேனை

43. ங்களுமா திக்குத் திக்குக் கூட்டங் கூடி நியாயந் தீராதபடியினாலே சேரமண்டலம் சேரனாட்டில் திருவஞ்சி

44. முத்தாநதி சூழ்ந்த[7] சேலமாநகரம் கருப்பூர் தாபரமாக யிடங்கை யார் வந்திருக்கும்போது வலங்கை

45. யார்கு மிடங்கையார்க்கும் கை கலந்து சண்டையாயெங்குறித் தறிந்து சேரமண்டலம் சேலமாந

46. கரம் மூன்றாம் வீட்டிக்கு ளாவாம் வீடாய்க செங்கோல் செல் லுத்திய கம்பளராச ராசேகரஸ் திலை புவனாதி

47. பன் செவுகுலதீபகன் முல்லையந் தார் மாரபகன் பதிணெட்டு மன்னியம் மிண்டன் நரசோகர் கண்டன் ல

48. ங்கிஷ் மார்த்தாண்டன் சேர சோள பாண்டிய வல்லாள ராய மனோபயங்கரன் மண்டல மதிகரு ம

49. தி முக வதனன் பதினெண்டு சுடக மதகேசம் படைத்த பரிதி குலதிரன் சதுர்வேத பாராயண தாதாச

50. ரிய சிஷனாகிய [8] பட்டாபி மேக பரிபூரண தயாபரனாகிய வெங்கிடபதிநாயக்கரும் தளவாய் பெத்த

51. னாயக்கரும் மத்திய ஸ்தானத்திலே யிருந்து கொண்டு வலங்கைச் சமயக் காரியக்காரரை அழை

52. த்து யுங்கள் வலங்கை யாகம் புராண கதையுண்டானத்தை யுத்தச் சொல்லித் கேட்டதன் பின் யிடங்கைச்

53. சமயத்துக் காரிக்காறரை[9] அழைத்து யிடங்கையாகம் புராணமும மங்கள் பிறப்பு வளப்பு உண்டான

54. புராணங்களை அழைப்பிக்கச் சொல்ல ஆதினாட்டுக் கதிபதி யான னாடு சேலர்க் கவுண்டரும் பாண்டிய

---

7. சூழ்ந்த
8. சிஷயனாகிய
9. காரியக்காரரை

55. ன் சீர்மையிலாறூரிலிருக்கும் பிறுஹ்ம லெங்கிறத்தின் மனு
விக்ஞான சாஸ்த்ர வேதாகம புராணம் யி

56. டங்கை வலங்கைச் சமடார்த்தம்மும் யிடங்கைப்பார் பிறப்பு
ளைப்பும் வனனிய புராணமுமறிந்த பக்ஞ

57. நாராயண தீக்ஷித குமாரன் ராசனாராயண அய்யரவர்களை
அழைக்கவந்து யிடக் கும்பள ரா

58. பருடன பிறசங்கம் பண்ணுகுறார் ஸ்வாமி ஆதிகாலத்திலே
யிடங்கை வலங்கை யெங்குற பேதமும் ப

59. ரமேஸ்வரன் பாற்வதாதேவி அம்மனைத் தொட்டு வந்தது
அந்த ஆகமமோதிய பின் ரெண்டாவது சிவ

60. னாரிடத்து பாகம் பிறவேணுமென்று அம்மன் பாதாள கம்பா
நதியில் அரிய தபசு பண்ணி பரமேஸ்வ

61. ரருடை வாமபாகம் பெத்தது மூன்றாவது யிந்த யிடங்கைக்
குடையவர் வர சிவனும் தேவேந்திரனும

62. ரம: வலங்கைக்குடையவா விறும தேவனும் பிறுகு மகா
ரிஷியுமாம் சரீரக்கூறில் ரெத்தம் மாங்

63. கிஷம் சற்மம் நேத்திரம் கருமுழியு மிடங்கைக் கூறுமாம்
எலும்பு நரம்பு மூளை நிணம் யிது வலங்கை

64. க்கு சேந்தது வலங்கைச் சாதி பத்து யிடங்கைச் சாதி எட்டு
ஆக பதினெட்டுச் சாதிப் பிறப்பு வளப்புமே

65. ாதிய பின் யிடங்கைப பெரியோனாகிய பஞ்சனாட்டார் பிறப்பு
வளப்பு எப்படி யென்றால் வனனிய புர

66. ாணம் பூர்வகாலத்தில் பரமேஸ்வரர் துவாரபாலகருக்கு மூன்று
பிறப்பு சத்துருவாக வாவென்று சாபந்

67. கொடுக்க அவதாரத்தில் யிரணிய றிரணியகசிபு யென்றூரு
பிறப்பு ராவண கும்பகருண னென்றொ

68. ரு பிறப்பு சிசுபாலன் தென்றுவக்கிறனென்றொரு பிறப்பு
யிப்படி மூன்று பிறப்பு யித்துரு சத்துருவாக

69. வந்த காலா சொச்சம் நிறைது பிலவலன் வாதாவி யென்று
ராக்ஷதனாகப் பிறந்து சொர்க மத்திய ப

70. ாதாள லோகம் மூன்றுங் சொன்னையிடும்போது சகலமான தேவரிஷி கணங்களெல்லாரும்

71. கைலாசகிரியில் பரமேஸ்வரருடன் முறையிடும்போது சுவாமியா ரந்த க்ஷணம் செம்பு மாமு

72. னீஸ்வரனை வரவழைத்து உம்முட வரப்பிறகாத அக்கினி குமார வன்னியனை அழைப்பிக்க வே

73. ணுமென்ன அப்போ விஸ்வகர்மன் யாகசாலை யுண்டுபண்ண பார்வதாதேவியம்மனிடத்து

பின்பக்கம்

74. வுள்ளங்கை ஓம குண்டமாக பரமசிவன் நெத்திக் கண்ணாக நியாகச் சிவன்று திருமார்பிலணிந்த செங்க

75. ழுனீர் மாலையைச் செம்பு மாமுனிவர் வாங்கி பிறம்மா வேதமோத செம்பு மாமுனிவர் ஆகருஷ்ண மந்

76. திரந் தியானம் பண்ணி திருப்பாற்கடலில் அமுர்தத்தி லுதையுஞ் செய்த நாராயண மூர்த்தியே நீர் வ

77. ன்னிய குமாரனாய் பிடங்கைக் காத்தனாய்த் தேவ தேவாதிகள் சிறை மீட்க வரவேணுமென்று ஓமாக்

78. கினியிற் போடக் கருகறுத்த மேனியும் கறுப்புச் சடையும் கட்டிய கச்சையுங் கைவில்லும் முதுகில

79. ம்புறாத் தோணியுந் தோளில் முன்னூலும் மார்பிலணிற் பஞ்சவர்ணத் தார் வட முத்து மாலிகை வெண்ணத் த

80. டுக்குரு செங்கழுநீர் வாடாத மாலையும் பூசிய சந்தனமரையில் வீரசிங்கினி வீரிட்டலறக் கை

81. யில் வீர வாளும் பஞ்சவற்ணப் பாவாடை வீசப் புலிக்கொடி மேற் நோக்கி வரச் செக சமபுக் குடை நிழற்

82. அகோர கோபத்துடன் வில் வீரன் பிறந்து நிற்கச் சிவன் மந்திரம் உபதேசம் பண்ண மகாயரம்[10] பெத்து வாதாகிய

83. னைச் செயிந்து வன்னிய குமாரனாகிய ருத்திரபபள்ளியார் பிறப்பு வளப்பு ஆனைகுபினாலே பஞ்சவனைப் பா

10. மகாவரம்

84. வாண்டயு மறுகால் புண்ணிகாசவமுஞ் செக சம்புக் குடையும் பஞ்சமுக்த் தீவட்டியும் படைத்த யிடங்கைப் பெ

85. ரியோனாகிய பண்ணாட்டாரென்று கமபணராசனுடன் ராச னாரண அய்யன் சொல்ல

86. யாக்கிறம் போலே சீறியெழுந்து வித்துவான் கட்டின கட்டு பெய்ங்களுக்குச் சம்மதியோ காஞ்சிபுரத்திலே

87. பிறமாணத்திலே ஒப்பிக்கச் சொல்லு மென்று கம்பணராயனைக் கேட்க கமணராயனு மவர்கள் சொன்ன

88. பிறகாரம் ஒப்பிப்பு மென்ன ராசனாரண அய்யனும் சம்மதித்து பிறந்த வதலமே காஞ்சிபுரமென்று போ

89. ன்னம்மன் சன்னதியில் யிடங்கை வலங்கை திருவெழுத்து ரெண்டு மெழுதி அக்கினி பிறவேசம் பண்ண வல

90. ங்கைத் திருவெழுந்து வெந்து போச்சு யிடங்கை திருவெழுத்து வேகாதபடியினாலே கம்பணராயனு மதி

91. க சந்தோஷமாகி ராசனாறணய்யனுக்கும் பண்ணாட்டாருக்கும் வெகுமானமுந்தவி டங்கைப் பெரியோ

92. ரென்றும் விருதுடைய பண்ணாட்டாரைப் பட்டணப் பிறவேசம் பண்ணி வச்சு அனுப்பி விட்டார் வெகு சந்

93. தோஷித்துடன் தேசதேசத்துப் பண்ணாட்டாரெல்லோரும் ஏகஸ்தராய் நம்முட் நகப்பனி செம்புமா முனிவரா

94. மே செமபு மாமுனிவர் ஓமாக்கினியிதிற் பண்ணாட்டாரை வங்கிஷோத்தாரணம் பண்ணப்பட்ட செம்பு

95. மாமுனிவராம ப்ரம்ம வங்கிஷ சதுர்வேத பாராயணதர்ம சாஸ்த்ர நிருக்த சகளாகம புராண சாஸ்த்ர வயித்திய

96. சாஸ்த்ர[ரி] வாக்ய சித்தாந்த கணிதஜ்ஞ ப்ரவீணரான [அநேந் வர] அன்ன வ[ர]ஜ்ஜந டக்ஷோபவீதாலங்கிருத

97. காயத்ரி கவச சாவித்திர தயான சரஸ்வதி வாதயாதிகாரரான பூர்வ சீலாப்பிராமண ஹோமகுண்ட ஸ்தா

98. பநாச்சார்ய ப்ரதிஷ்டாகுண ருக்வேதா[சார்]யான ஹரி கோத்ர ஆஸ்வலாயன சூத்ராதிகாரரான பிறவா

99. ச நல்லூராதிபன் க்ராமாதிபதி ராசநாராயணப் பெருமாள் பாத மறவாத பிச்சைநாணப்பரவரகள்

100. செம்பூமா முனிவரே யிவராகியும் நம்முடை பண்ணாட்டார் குல குருவாகியும் நம்முடை வன்னிய புரோகிதராகி

101. யும் நம்முடை பண்ணாட்டார் குலவங்கிசாபிவிர்த்தி பண்ணின தசப்பனாகிய ராசனாறணையநயர்க

102. ளுக்கு தேச தேசத்துப் பண்ணாட்டார் ரெல்லோருங்கூடி ஏக தராய் நிசவர்த்தனை எழுதிக்குடுத்த ளாள்

103. ஸ்ரீமன் ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் ௲ரு௱ரு௰ரு[11] சமேத கலியுகமானது ச௲எ௱ங௰ச[12] இதி

104. ன் மேல் செல்லாய் நின்ற ஸ்ரீமுக னாம சம்வச்சரம் தெக்ஷணா யனம் கார்த்திகை மாசம் சுரிது கிஷ்ண பக்ஷ

105. ம் புதவாரம் பஞ்சமியும் பூச நக்ஷத்ரம் சுப்பிறணாமயோகம் ஏதுலவாகரணம் யின்னாள் யிருபத

106. னர நாழிகைக்கு மேல் சுபக்கிரகங்கள் நோக்குண்டான மீன லக்கினத்தில் சந்திர ஓரையில் ராசஸ்ரீ

107. வளையிலும் நிசவர்த்தனை சாசனப் பட்டயம் எழுதின தாவது சேரயாமலை சேரனாட்டில் திருவணி மு

108. த்தாநதி சூழ்ந்த சேவமாநகரில் கிளிவண்ணனாதர்[13] சன்னதியில் அழகிய பொன்னம்பலன் சாட்சியாய்

109. வருஷம் பிறுதியும் குருகாணிக்கை பெரிய குடிக்கு ரெண்டு பணமும் சின்ன குடிக்கு ஒரு பணமும்

110. கலியாணத்தில தாரை வாற்குற யிட்ட னீர் பணமும் கட்டினடி பேரொன்னுக்கு நாலு வள்ளந் தா

111. னியமும் ஆசந்தார்க்கமாகக் குடுத்து வருகுறோமென்று எழுதிக் குடுத்த லாவநப் பட்டையம் நீல

112. கங்கன் வெச்சிர பாகன் கருவரை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன் இவர்கள் சந்ததி

113. பாகிய அழகாபுரம் மெய் யோகராயக்கவுண்டர். குமாரசுவாமிக் கவுண்டர். ஏற்பாவுண்டர்.

---

11. 1555
12. 4734
13. கிளிவண்ணநாதர்

114. சேலம் முதலிக் கவுண்டர். பிரமிச்சி கவுண்டர். செவி கவுண்டர். அனைதாரிபட்டி அனைதாரி கவுண்ட

115. ர். பருவத கவுண்டர். அய்யம் பெருமாக் கவுண்டர். அயோத்தியா பட்டணம் தெய்வராயக் கவுண்ட

116. ர். செல்லப்ப கவுண்டர். வாழிககைமங்காக கவுண்டர். நெவைப் புடையார் காங்கய குருக்கவுண்டர். கந்த

117. ப்பம் பட்டி கந்தப்ப கவுண்டர். கூடத்துார் வாத்தியாக் கவுண்டர், சின்னாக் கவுண்டர். சீரகட்பாடி நல்லிரிசாக் கவுண்டர்.

118. புத்திரி கவுண்டர். சென்னகிரி ஒட்டைவாழி பிரிசாக்கவுண்டர், வெள்ளைய கவுண்டர். வீரபாண்டி மந்திச் சின்னா

119 க் கவுண்டர். பாலம்பட்டி வடமலை கவுண்டர். கோட்டைக் கவுண்டர் வயிரூசி வெத்திலைப்பிரமிச்சி கவுண்டர் தேவு

120. த்தாக் கவுண்டர். பிச்சபிள்ளை பிச்ச கவுண்டர், மல்லூர் மாணிக்க கவுண்டர். கூத்த கவுண்டர். அன்னா மலைப்பட்

121. டி சேர்வை முத்தாக் கவுண்டர். பொன்பரப்பி பெரிய குப்ப கவுண்டர். ஆண்டி கவுண்டர், அம்மாபாளையம்.

122. ஆட்டையாம்பட்டி ராயப கவுண்டர். பிச்ச கவுண்டர். வெங்காம் பட்டி குழந்தைக் கவுண்டர் செந்தலைக் கவுண்டர்

123. மூக்குத்திதாசன் வாழைக்குட்டைப்பட்டிப் புத்திரி கவுண்டர். சின்னாக் கவுண்டா, அம்பு கட்டி பாளையம் குட்

124. டையாக் கவுண்டர். பெத்தாக் கவுண்டர். மின்னக்காவு கோனா பிரிசாக்கவுண்டர். சிவனாக் கவுண்டர். வெம்படி த

125. னம் ஆனைகுட்டி கவுண்டர். கல்பாறு சின்னப்பாவுக் கவுண்டா் சேவாக் கவுண்டர். பிளம்பிள்ளை பிளைமுரு

126. வுண்டர். மொறந்தைக் குட்டி கவுண்டர். நயினாம்பட்டிச் சேர்வை நயினாக்கவுண்டர் தொக்காதுக் கவுண்டர். வெ

127. ள்ளையாக் கவுண்டர். அய்யம் பெருமாக் கவுண்டர். வட்டமலைக் கவுண்டர். நயினாக் கவுண்டர், சேவாக் கவுண்ட

128. ர். நல்லனையன் பட்டி பூவாக் கவுண்டா, குப்ப கவுண்டர், வடகரு முகம் பிரமிச்சி கவுண்டர் கரியபெருமாள் காப

129. மபை கவுண்டா அரியாகவுண்டர் நயினாக கவுண்டர்
வெள்ளைய கவுண்டா. வெட்சி கவுண்டர். மொன்னைய
கவு

130. ண்டர். நல்லாக் கவுண்டர். வடமலை கவுண்டா மற்றும்
முண்டாந உறவின் முறையாரும். வெளியூர் னாடு பச்சையாக்

131. கவுண்டர். புளி யான்னட ம்பிசாக் கவுண்டா. நயினாக கவுண்டர்
சின்னாக் கவுண்டர். மூர்த்தி கவுண்டர். மன்னாக் கவுண்ட

132. ர். தேவராடிக் கவுண்டர். மத்துமுண்டாந உறவின் முறையாரும்.
ஆத்தினாடு சேயாக் கவுண்டா. அம்பாயிரக் கவுண்ட

133. ர். வரதன் கவுண்டர் கறுப்புடையார் கூத்த மூப்பன் மத்து
மூண்டாந உறவின் முறையாரும். ராயப்பநல்லூர் காங்க

134. ய வுடையார். வெங்கிடாத்திரி உடையார். மத்தும் பனிரெண்டு
பத்திலுள்ள உறவின் முறையாரும். மங்கலபுரம் தெரு

135. னாதபிள்ளை. மத்து மூண்டான உறவின் முறையாரும்;
ராசிபுரம் பிரமிச்சி கவுண்டர். உடையாக் கவுண்டர் மத்துமூண்

136. டான உறவின் முறையாரும். சேந்தமங்கலம் குள்ளச்செருவை
காறன் குள்ளத் தாண்டவ கவுண்டர். ஏழூர் மணி

137. க்கவுண்டர். பரமத்திச் சீமை வேலாயுதம் பாளையம் அனந்த
கவுண்டர். மத்து முடதனாடு. பாண்டிய தேசத்திலுள்

138. டான உறவின் முறையாரும்: துறகம் வெங்கிடாத்திரி கவுண்டர்
பரித்திபள்ளிப் பாலாண்டிண்டக் கவுண்டர்.

139. தாளைழுயூர் நொறுக் கிரிசாக் கவுண்டா. வைகுந்தம் ஆய்யம்
பெருமாக் கவுண்டர். வேலந்தூம் வடமலை கவுண்டர். ஆட்ட

140. யாம்பட்டி செங்கோட கவுண்டர். திருமலை கவுண்டர். கண்டக
மாணிக்கம் செவிகவுண்டர். தாண்டி கவுண்டர். பிமாப்பட்

141. டி வெங்காக் கவுண்டர். வேலப்ப கோவில் பரித்திப்
பள்ளினாடு முப்பத்திரெண்டு கிராமத்திலுள்ள உறவின்
முறையாரும்:

142. பிரணாபுரம் பூவனினாடு அரசிராமணி ஆனைக் கவுண்டர்.
கன்னியாக் கவுண்டர் ராம கவுண்டர். கள்ள குளம் வாத்தியாக் க

143. வுண்டர் யிடப்பாடி பிச்சி கவுண்டர். ஆடையூர் நயினாக் கவுண்டர் பூவாணிவாட்டு அரியாக கொத்தன் சிவந்தாக்க

144. வுண்டர். சித்தூர் ஆவணி வேலூயிருப்பளி சமுத்திரம் கச்சவனி யிளம் கவுண்டர் முன்னுள்ள உறவின் முறையாரு

145. நல்லா கவுண்டர். மத்து சாம்பள்ளி னாட்டிலுள்ள உறவின் முறையாரும்: அந்தியூர் மந்திக் கவுண்டர். யிரச

146. டையாக் கவுண்டர் தலைக்காவல் யிரிசாக் கவுண்டர், தீவட்டி கவுண்டர். யின்னம் ஓமலூர் சீமையிலுள்ள

147. உறவின் முறையாரும்: சாம்பளி உத்தண்டிச் சேருவை காறன்; புத்திரிச் சேருவை காறன் குளத்தூர்

148. நல்லா கவுண்டர். மத்து சாம்பள்ளி னாட்டிலுள்ள உறவின் முறையாரும்: அந்தியூர் மந்திக் கவுண்டர். யிரச

149. ரக் கவுண்டர். அரிச்சிக் கவுண்டர். அங்கிலுள்ள உறவின் முறையாரும் தெங்கரைக் கோட்டை வடமலைக்க

150. வுண்டர், கோனப்ப கவுண்டர். அந்தச் சீமையிலுள்ள உறவின் முறையாரும்: தர்மபுரிக் கோநேரிக் கவுண்டர், க

151. டகத்தூர் பச்சையா கவுண்டர். மத்துமற்றச் சீமையிலுள்ள உறவின் முறையாரும்; காவேரிப்பட்டணம்

152. அவசிச்சியாக் கவுண்டர். நட்டைக்கல் கோனேரி கவுண்டர். நெடுங்கல் குப்பக் கவுண்டர். திருப்பத்தூர் மாணிக்க

153. கவுண்டர். அனிச்சி கவுண்டர். பின்னும் உத்தர தேசத்திலுண்டான உறவின் முறையாரும்: கீழ் தேசத்துறவி

154. ன் முறையாரும்: தெற்கு மேற்கு தேசம் யிதுனாங் கெல்லைக் குள்ளாமயிம் " சேது முதலான பஞ்சாஷ்ட

155. கோடிவிஸ்திற பூமண்டலத்தில் உண்டான உறவின் முறையா ரெல்லோற்கும் செம்பு மா முனிவ

156. ரல்லோர் தகப்பன் யிந்த யுகத்தில் நம்முடை பன்னாட்டார் வைசிகும் அபிஷேத்தியாக்கிவிக்கும் ரெண்டா

157. ஞ் செயபு மாமுனிவர்ராகிய வெக்கு நாராயணதீக்ஷதா ராசனாராயண அய்யருவாளுக்கு நிலைத்தனைச் சாச

158. னப்பட்டையம் யெழுதிகுடுத்து வருஷம் பிரிதியும் பெரியகுடிக்கு ரெண்டு பணமும் சின்னகுடிக்கு ஒ

159. ரு பணமுங் கலியாணத்தில தாரைவாக்குற யிட்டுநீர் பணமுங் கூட்டின பேரொன்னுக்கு னாலுபன்ன

160. தானியமும் ஆசந்திராற்கமாக புத்திர பவுத்திர பாரம்பரிய மாய்க் குடுத்து வருகுறோம் யிதில் தமுக்கமான

161. ம் அந்தந்தவூர்க் கவுண்டன் வாங்கிக் குடுக்கத்தக்கவன் கல்லும் முள்ளும் பத்தரத்தாலுமப்பளரி புத்தறாதவன் ஆனை

162. யினாலே கல்லுங் காவேரிபுள்ளளவும் ஆசந்திராற்கமாக புத்திர பவுத்திர பரம்பரியமாய குடுத்து வருகரோ

163. மென்று நிசயத்தனை எழுதிகுடுத்தோம் தாறாயவிறுவிக்கிற யோக்கியமாக ஆசந்திராற்கம் புத்திர பவுத்தி

164. ர பாரம்பரியமாய நீங்கள் அனுபவிக்கக் கடவராகவும் யிந்த கீற்தி பிறதிஷ்டை பண்ணமாட்டார் சகைம

165. என பேருக்குமுண்டு யிந்த தற்மபரிபாலனம் பண்ணிறபேருக் காசி ராமேசுரத்திலே கோடி சிவலிங்க பிற

# 22. அரியலூர்ச் செப்பேடு

*மடத்திற்கு அரியலூர் சந்தை வரிகள் வழங்கியமைக்குச் செப்பேடு*

அரியலூர் முருகன் கோயிலில் இச்செப்பேடு உள்ளது. இதன் மைப்படியும், நிழற்படமும் அரியலூர் அரசு கலைக்கல்லூரிப் பேராசிரியர் இல. தியாகராஜன் மூலம் பெற்றப்பட்டன.

19 X 25 செ.மீ. அளவுடைய இச்செப்பேட்டில் முன்பக்கம் 13 வரிகளும் பின்பக்கம் 28 வரிகளுமாக 41 வரிகளில் வாசகம் உள்ளது. செப்பேட்டின் மேற்பகுதி வட்டவடிவில் உள்ளது வட்ட அமைப்பின் மேற்பகுதியில் 2 செ.மீ. விட்டமுடைய வட்டத்துளையுள்ளது. முன்பக்கம் பாதி அளவிற்கு கோட்டுருவங்களும் அவற்றிற்கான விளக்கப் பொறிப்புகளும் உள்ளன. நடுவில் நடராஜர் உருவம் முயலகன் மீது ஆடும் கோலத்திலும் தலைமுடியில் கங்கையுடன் கோட்டுருவமாக உள்ளது. அதன் வலது புறம் சிவகாமி. வியாக்ரபாதமுனிவர். பதஞ்சலி ஆகியோரும் இடது புறம் பாதபூசை அம்பலத்தாடு மையர் என பீடத்தின் மீது அமர்ந்த முனிவர் அவர் அருகில் மன்னர் விசைய ஒப்பிலா மழவராயர். அவரடுத்து வீரமுத்து வெங்கடப்ப மழவராயர் (தளபதி?) ஆகியோர் உருவங்கள் கோட்டுருவமாக உள்ளன. நடராஜருக்கு மேலாக ஐரோப்பிய பாணி இறக்கையுடைய தேவதைகள் மாலையுடன் பறந்துவருவது போலவும் இவ்வுருவங்கள் அனைத்திற்கும் பின்புலமாக பூவிதழ்கள் பொழிவது போல திரையமைப்பும் உள்ளது. செப்பேட்டின் ஓரத்திலும். துளையைச் சுற்றிலும் கோடிடப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. உருவங்களின் கீழ் கட்டங்களில் அவற்றின் பெயர்கள் உள்ளன. பின்புறம் வட்டப் பகுதியில் தொங்கல் அணி வேலைகளும் கீழ்பகுதியில் இச்செப்பேட்டு வாசகம் அனைத்தும் பீடத்தின் மீது வைக்கப்பட்டது போன்ற பீட உருவமும் உள்ளன.

---

இச்செப்பேட்டினைப் படித்தவர் திரு. க. ஈஸ்வரன் கல்வெட்டுப் படிப்பகம் தொல்லியல் துறை சென்னை.

சக வருடம் 1625 (கி.பி.1703) தமிழ் வருடம் சுபானு (கி.பி.1703) ஆகிய ஆண்டுக் குறிப்புகள் உள்ளன. அரியலூர் அரசு ஒப்பிலா மழவராயர் குறிப்பிடப்படுகின்றார்.

சிதம்பரத்தில் வீரமாகேசுர சமைய (வீரசைவர்?) மடம் அமைத்துள்ள பாதபூசை அம்பலத்தாடுமைய்யர்க்கு ஒப்பில்லா மழவராயர் மற்றும் அவரது வழிப பரம்பரையின் நன்மைகளாக கொடுத்த தர்ம சாதன பட்டயம் இச்செப்பேடு. இதன்படி அரியலூர் பேட்டைக்கு (சந்தை) வந்து போகின்ற சரக்குப் பொதிகளுக்கு பொதிக்கு ஒரு காசும். அங்கு அமைந்துள்ள கடைகளுக்கு 8 நாட்களுக்கு ஒருகாசு வாடகையும் வசூலிக்கப்பட்டு அம்பலத்தாடுமைய்யர் மடத்தில் குருபூசை. மகேசுவரபூசை ஆகியவை என்றென்றும் நடக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இச்செய்திச் சுருக்கம் செப்பேட்டின் இறுதியில் பாடல் வடிவில் உள்ளது. அரியலூர் குமரப்ப ஆசாரி இச்செப்பேட்டை எழுதியுள்ளார் அருணகிரித் தம்பிரான் பணி மேற்பார்வையில் இச்செப்பேடு உருவாக்கப்பட்டுள்ளது.

## செப்பேடு

### முன்பக்கம்

கோட்டுருவங்களின் கீழ் கட்டமிட்டு பின்வருமாறு எழுதப் பட்டுள்ளன

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விருத்து வெங்கட ப்பமழவ ராயர் | இளி ஓமை ய ஒப் பிலாம ழவரா யர் | இலகா தபூசை அம்பல தாடுமை யயர் | இபொ அம்பலவாண சுவாமி ஆனந்த நடனம்சிவ | இவசி வகாமி அம்மன் | இவலி பாகலி நபாதா | இநா பதஞ் சலி |

### முதல் பக்கம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாற்பித்தம் ஆகுளாயமு இதன் மே
2. ல் செல்லா நின்ற சுபானு ஸ்ரீய புரட்டாசி மீ எ உ சக்கிறவார ளான்
3. ஸ்ரீமது அரியலூர் அரசு நிலையிட்ட மழவராய கோத்திர சம்பன்
4. னான ரெங்கப்ப மழவராயர் பேரன் ஒப்பிலா மழவராயர் குமா

5. ரர் விஜய ஒப்பிலா மழவராயா பூலோக கயிலாச மான சிவகு

6. லைகளில் சகஸ்ர கலையும் பரிபூரணமான பதஞ்சலி வியா

7. க்ரபாதாதி பத்தர்களுக்கு ஆக ஆனந்த நடனஞ் செய்தருளிய கன

8. க சபாபதியாகிய அம்பலவாண சுவாமியே யெவ்வுயிரும் உய்யும்படி

9. எழுந்தருளியிருந்து பொன்மாரி பொழிந்து திருச் சிற்றம்பலமான சி

10. தம்பரம் அதனில் வீரமாயேசுவர சமைய சிவாசார சம்பன்ன

11. ரான சிதம்பரம் பாதபூசை அம்பலத்தாடுமையர் அவர்

12. களுக்கு தற்மசாதனப் பட்டையம் குடுத்தபடி நம்முடைய

13. அரியலூர்ப் பேட்டையில் ஏற்பேர்ப்பட்ட போக்குவரத்து

பின்பக்கம்

14. துப் பொதிகளுக்கும் பொதிக்கு ஒருகாசும் கடைகளுக்

15. கு எட்டு வாசலுக்கு ஒருகாசும் நாம் மகமை அமைத்தி

16. விச்சபடியினாலே அதினால் வருகிற பலாபலன்கள் ம

17. டத்தில் குருபூசை மயேசுவர பூசைகளுக்கு உதவியாக

18. நடப்பிச்சிக் கொள்ளும்படி பண்ணி அந்தச் சகுற்த

19. பலம் மழவராய கோத்திரமான நமக்கும் நம்முடை

20. ய மாதா பிதாவுக்கும் மேல்வரை புத்திர புத்திராதி தலை

21. முறையளுக்கும் அர்த்த அந்த சகுறுதம உண்டாகத்

22. தக்கதாக நடப்பிக்கும்படி பண்ணவும் யிந்த மகமை

23. த் தர்மம் நாமும் புத்திர பவுத்திர பாரம்பரை உள்ள பேரெ

24. ல்லாம் சந்திர சூரியாதித்தர்கள் உள்ள வரைக்கும் உத்

25. ர ரோத்திரமாய் நடப்பிக் கடவோமாவோம் யிது தப்பித

26. ம் வராமல் நடப்பிக்கிறத்தினாலே காசி சேதுமத்தியத் தலங்

27. களில் அன்னதானமும் கெங்கையிலே கோ தானங் கு

28. டுத்த பலனும தனுக்கோடியிலே கோடிச மகாதானமும் கு
29. டுத்தபலனும் பெறக்கடவோமாகவும இதுக்கு சாட்சி அம்
30. பலவாண ஸ்வாமியும் சிவகாமியம்மனுமே சாட்சி
31. இது விசைய ஒப்பிலா மழவராயன் கைப் ஒப்பம் ஸ்ரீ[1]
32. யிப் பறங்கலிங்க உ பற்றலர்கள் பணிந்த குன்றை விசை
33. ய ஒப்பிலான் புரியும் பாத பூசை பெற்றருளம்பலத்தா
34. டுமைப்பயறாக்கில் வரியலூர்ப் பேட்டைக்குள்ளே உற்ற
35. புகழ் மகமையொன்று கட்டளை யிட்டானுலகை மூள்
36. ளமட்டு நற்று சந்திர சூரியர்களுள்ளவும் தன்மமுற்று
37. நடக்குந்தானே உ சிவ உ நல்லப்பிள்ளை பெருமா
38. பிள்ளை / அண்ணாமலை பத்தர் / இந்தச் செப்பேடு
39. எழுதினவர் ஆரியலூர்ச் சிதம்பர ஆசாரி குமாரன்
40. குமரப்பன் உ இது அருணகிரித் தம்பிரான் பு
41. ணிவிடை யிந்தச் செப்பேடு திருச்சிற்றம்பலம் உ

---

1 தெலுங்கில் உள்ளது



அரியலூர் செப்பேடு - முன்பக்கம்



அரிபயூரா செப்பேடு - தொடக்கம்

# 23. திருமானூர் செப்பேடு

*வேதம் வல்ல பிராமணர் மற்றும் கோயில் வழிபாட்டுக்குக் கொடை*

இச்செப்பேடு அரியலூர் வட்டம் திருமானூர் அருள்மிகு கைலாசநாதர் கோயில் தர்மகர்த்தா திரு.டி. சம்பந்தம் பிள்ளையிட மிருந்து ஆய்வுக்குப் பெறப்பட்டது

முன்பக்கம் 4 வரிகளும் பின்பக்கம் 9 வரிகளும் மொத்தம் 32 வரிகளில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

சகவருடம் 1712 (கி.பி.1790) கலிவருடம் 4891 (கி.பி.1790) தமிழ்வருடம் 'சாதாரண' (கி.பி.1790) ஆகிய ஆண்டுக் குறிப்புகள் உள்ளன. எனவே இதன் காலம் கி.பி.1790. திருமானல்லூர் சேத்திரத்தில் உள்ள ஸ்ரீகபிலாசநாதர் சுவாமி கோயிலுக்கு ஸ்ரீ விஜய ஒப்பிலாத மழவராயர் குமரர் ஸ்ரீ குமார ஒப்பில்லாத மழவராயர், திருமானல்லூரில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலத்தை சேஷாத்திரிய தானமாக வேதம் வல்ல பிராமணர்க்கான கொடையை கொடுத்துள்ளார். இந்நிலத்தில் கிடைக்கும் வருவாயில் 100 பூவராகன் (பணம்) அரசிற்குச் செலுத்திவிட்டு மிகுதியைக்கொண்டு கோயிலில் அபிஷேகம், நெய்வேதனம், திருவிளக்கு, திருமாலை முதலிய வழிபாட்டுச் சேவைகள் செய்திட செய்துள்ளார்.

நிலத்தின் எல்லைகள் சொல்லப்படுவதுடன் திருமானல்லூரின் எல்லைகளும் இச்செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளன.

---

கல்வெட்டு இதழ் 19. காளயுக்தி ஆண்டு ஐப்பசித் திங்கள். பக்.19-22. 'மழவராயர் செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. அ. அப்துல் மஜீத். பதிவு அலுவலர் திருச்சிராப்பள்ளி.

செப்பேடு

1. உ சுபமஸ்து ஸொஸ்துஸ்ரீ மன்மாக மண்டலேசுபரன் பா
2. தள விபாடன் பாஷைக்குத் தப்புவராத ராயர் கண்டன கண்ட
3. னாடு கொண்டு கொண்ட னாடு கொடாதன் ஆரியர் தள விபாடன் ஆ
4. ரியர் வீரம் அழித்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் கொட்டந்தவிழ்த்
5. தான துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மெலுக்கை யழித்தான் பூறுவ தெட்
6. சண பச்சிம உத்தர சதுற் சாகர கண்டாக்ஷ்பள் பீட்ககற...
7. .....' சமுத்திராபதி சுவாயம்பூ மனுச் சக்கிறவற்த்தி
8. நிருமித அகண்ட நவகண்டப் பிறுத்வி மண்டலாதிபதி அங்க வங்க கலி
9. ங்க காஷ்மீர கொங்க ளடங்க குடுத குச்சர மாளுவ துளுவ மாதே காம பொ
10. சமண்டலீகர் திறைபளக்க வந்த ரெகுராமன் அரிகர பஞ்சல பரிசக்கிறவாக
11. மொடு கெசவேட்டையாடும் புசபெல பராக்கிறமன் ஆடுமனி நாலுகையா
12. து சட்டி நாடு புரக்கும் நராதிபர் சிங்கம் சேரமண்டல ஸ்தாபனா சாரியன் சோ
13. ழமண்டலப் பிறுதிஷ்டாபனாசாரியன் பாண்டிமண்டல துரந்தரீகன் ஏ
14. ம் மண்டலமுந் திரைகொண்டு ஏழுமுந் திறைகொண்டருளிய ராசாதிரா
15. சன் ராசபரமேசுபரன ராசமாறுதாண்டன் நாற்பத்து முக்கோண மேற் ச
16. க்கிறமமாக பட்டமாளிகையுங் கூடகோபுரமும் கோட்டை மதிளுங்
17. குளவாழ்க்கையுந்த விசைய நகரத்திலுமா வேபுரங்களிலு முழுதிறை ॥

18. நிருபக்கத்தேரெவைாய் பொலிய ஆஸ்தான மண்டபத்தாறு காற்பிடதே

19. ரி மினிதமர்ந்து தேவேந்திரன் ஓலக்கம் போலிருந்து மனுவிக்கிரமா

20. எம்துர்ம[7] பாராட்டித் திக்கெல்லாம் புகழ்ச் செங்கோல் செலுத்தும் இம

21 லவிசாற் கன தேவுபகாராயர் மூஸ்ரீசெயரங்கராயர் அவர்களிற்பின் அ

22. ரியலூர்ச் சமஸ்தானம் ஸ்ரீ மழுவராய துரையவர்கள் பிறுதிவராச்சிய பரி

23. பாலனம் பண்ணியருளாநின்ற சாலிய வாகனச் சாகட்டதம் திறும் ஆளாயிஉ

24. கலி சகாப்தம் ரூறுவ சதுவாருயிக இதின்மேற் செல்லா நின்ற சாதாருண

25. திறு வைய்யாசி மீ உயிறுக சுக்குரவாரமும் சப்தமியும் சதைய நஸ்சத்திரமு

26. ம் கூடின இந்த சுபதினத்தில் திருமழபாடிக்கு கிழக்கு கோவிந்த புதூருக்கு

27. மேற்கு பழுவூருக்குத் தெற்கு திருவையாறு காவேரி கொள்ளிடத்து

28. க்கு வடக்கு யிந்த நான்கெல்லைக்குள்ளாய சமஸ்த தேவாசதானி

29. யாய் விளங்காநின்ற ஸ்ரீ திருமானல்லூர் க்ஷேத்திரத்தில் அகிலாண்

30. டகோடி பிறுமாண்ட னாயகராய அரியயன் தேடுதற்கரிய பொருளாய்

31. மான் மழு கல கடாவங் காளகண்டஞ் சதுர்புசம் திரிநே[த்தி]ர தாராய்

32. ஸ்ரீ காமாக்ஷியம்பாள சமேதரா பெழுந்தருளியிருக்கா நின்ற ஸ்ரீசுயம்ப

33. ளாத சுவாமிக்கு அரியலூர் விருதுமத்தர் வலியுடைய துளை
சிகாமணி

34. யாகிய ஸ்ரீ விஜைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீ
குமார ஒப்பி

35. ல்லாத மழவராயர் க்ஷேத்திரபுத்ரனா சாதனம் பண்ணிக்
குடுத்தபடி

36. க்ஷேத்திரபுத்ரனைமாவது மஞ்சமேட்டுக்கு கிழக்கு திருவெங்க
ளூருக்கு

37. மேற்கு பாவட்டங்குறிச்சி ஓடைக்குத் தெற்கு கொள்ளிடத்துக்கு
வடக்கு

38. யிந்த நான்கெல்லைக்குள்ளாகிய திருமானல்லூர் பிஞ்சை நிலம்
திட்

39. டு திட்ட மாவடை மரவடை எப்பேர்பட்டதும் பயிர் வெகிளை
கிந்

40. நீர சிப்பந்தி சாதிவலார் அரசு மானியம் உள்பட க்ஷேத்
திரியம் பூ

41. ரா இந்தப் பூமிலே ராசுன் நூறும் சருக்காருக்கு செலுத்தி
வைச்சுக்கெ

42. காண்டு மேல் அதிகம் உண்டாகிய பலனை சுவாமிக்கு
அபிஷே

43. க நெய்வேத்தியம் திருவிளக்கு திருமாலை திருப்பள்ளிக்கி
அனுபவித்து

பின்பக்கம்

44. க் கொள்ளுகிறது இந்தப்படி சந்திராதி நாள் உள்ள வரைக்கும்
கல்லுங்

45. காவேரியும் புல்லும் பூமியு முள்ளவரைக்கும் ஸ்ரீ கயிலாசனாத
சுவ

46. ாமியே க்ஷேத்திரிய தானமாய் அனுபவிக்கக்கிறது யிந்தபடி
சம்

47. மதிக்க ஸ்ரீ குமார ஒப்பில்லாத மழவராயர் பண்ணிக்குடுத்த
தற்மத்துக்கு யா

48. தொரு சுவஜூமில்லை தற்மத்தை மென்மேலும் பரிபாலனம்
பண்ணி

49. ன பேர்களுக்கு ஸ்ரீ கயிலாசனாத சுவாமியும் காமாட்சி யம்மனும் அருளு

50. ம் பிறசாதமுங் கொடுத்து ரெக்ஷிப்பர்கள் யிதுக்கு யாதாமொருவர் விறகி

51. த்தி நினைந்தால் ஸ்ரீகத்தி கோவத்தி பிறும்மத்தி அசுவத்தி சிசுவத்தி கெசவத்தி

52. பண்ணின தோஷத்தை அநுபவிப்பர்கள் ஸ்ரீராமசெயம் உ-

---

1. ஆறாவது வரியின இறுதிப் பகுதியும் ஏழாவது வரியின் தொடக்கப் பகுதியும் சரியாக விளங்கவில்லை.
2. விக்கியாளம் தம்மம் என்று படிக்கவும்

# 24 தாருகாபுரம் செப்பேடு

## *எதிரியை வென்றவர்க்கு பட்டமும் நிலமைக் காணியாட்சியும் அளித்தமை*

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயில் வட்டம் தாருகாபுரத்தில் உள்ள ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவரும் இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி குடும்பத்துடன் மணத் தொடர்புடையவருமான திரு இந்திரன் இராமசாமிப் பாண்டியன் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது.

22 x 12 செ.மீ அளவுடைய இச்செப்பேட்டில் முன்பக்கம் 45 வரிகளும் பின்பக்கம் 29 வரிகளுமாக 74 வரிகளில் வாசகம் உள்ளது.

செப்பேட்டில் சகவருடம் 1127 (கி.பி.1205) கொல்லம் 382 (கி.பி.1206) தமிழ்வருடம் நள கி.பி.1256 ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. தென்காசிப் பாண்டியரான சீவலி மகாராசா குறிக்கப்படுகின்றார். செப்பேட்டின் காலம் கணிக்க இவை முரண்பட்டவையாகவுள்ளன. செப்பேட்டின் எழுத்தமைதி செய்தி அமைப்புக் கொண்டு கி.பி. 16 ஆம் நூற்றாண்டாக இதன் காலத்தைக் குறிப்பிடலாம்.

தென்காசிப் பாண்டியர் எல்லைக்குட்பட்ட மலையங்காட்டுப் பகுதியில் தீயவனும், மிருகத்தனமுடையவனுமான சந்திரன் என்ற ஒரு எதிரி இருந்ததாகவும் அவன் பல அரசர்களை கொன்று வந்ததாகவும் அவனை கொண்டையன் கோட்டை மறவரின் குருவனான திருவன்னாத் தேவர் வெட்டி வெற்றிகண்டமையால் திருவன்னாத்தேவர்க்கு இந்திரத்தலைவன் என்று பட்டம் தரப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. இவருக்கு நிலமை காணியாட்சியாக உம்பளச் சர்வமானியமாக 22க்கு மேற்பட்ட கிராமங்கள் வழங்கப்பட்டன. இக்கிராமங்கள் பெயரும் அவை உள்ளடங்கிய

---

கல்வெட்டு எண் 42. பல ஆண்டு பங்குனித் திங்கள் 1995 புரட்டாசித் திங்கள்] பக்கம் 19-24 தாருகாபுரம் செப்பேடு. என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திருச்செ சந்திரவாணன். ஆட்பாட்சியர். குற்றாலம்.

பகுதியின் எல்லையும் இச் செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளது. இவர் பல்லக்கு. தீவட்டி. குடை. கொடி. சாமரம் முதலிய பரிவாரங்கள் வைத்துக் கொள்ளத் தேங்காய் தொட்டு உரிமை வழங்கியதும். கோயில் மரியாதை வழங்கியதும் சொல்லப்பட்டுள்ளது.

## செப்பேடு

முன்பக்கம்

1. உ ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் ஆராஉயின ன் ஸ்ரீ செல்
2. வாநின்ற கொல்லம் நாஉயிலே ஸ்ரீ நளஹெய ஆடி மீன
3. வ சோமவாரமும் அசுபதி நட்செத்திரமும சுபயோ
4. க சுபகரணமும் பெற்றனாளில் தென்காசியிலிரு
5. க்கும் சீவிலி மகாராசா அவர்களோம் கிழவெ
6. னாட்டுக் கொண்டையன் கோட்டை மறவரில்
7. த் திருவண்ணாத் தேவர் யிந்திரத் தலைவனுக்கு நில
8. மைக் காணியாட்சைச் சாதனப் பட்டையம் எழு
9. திக் குடுத்தபடி பட்டையமாவது நம்முடைய வீரி
10. ருப்பு மலையங் காட்டில் சந்திரனென்றொரு துஷ்ட
11. மிருகமிருந்து கொண்டு அநேகம் இராசாக்க
12. ளையெல்லாம் உயிர்வதை செய்து போட்ட படியினா
13. லே அந்தச் சந்திரனென்கிற சங்கு வெள்ளைக் கொடிய
14. னை ஒரு ராசாக்களாலும் செயம் டண்ணமாட்டாமல்
15. போனபடியினாலே அப்படிக்கொத்த துஷ்டமிரு
16. கத்தைத் தான் வெட்டி செயம் பண்ணின படியினாலே த
17. னக்கு இந்திரத் தலைவனென்று பட்டமுங் கொடுத்து
18. த் தண்டிகை பல்லக்கும் ரெட்டைத் தீவட்டியும் ரெ
19. ரட்டைக் குடையும் மகரக்குடையும் காங்கு ட
20. ராவு கெருடக் கொடி விருதும் உபைய சாம
21. ரமும் தவளச்சங்கும் நடனாடக சங்கீதம மி
22. யவளடி விருதும் குடுத்து நாகபுரம் மிந்திரபு

23. ரமென்று பேருங் குடுதது தேங்காயும் தெ

24. ாட்டுக் குடுத்து யிந்திரபுரம் னாகபுரத்திலக்

25. கோட்டையும் போட்டுக் குடுத்து திருவண்

26. ணா தேவன் யிந்திரத் தலைவனுக்கு நாம் எழு

27. திக்குடுக்கிற உம்பளச் சறுவ மானியப் பூமியாவ

28. து சங்கரநயினார் கோவில் மேலத் தெரு

29. நடு நாராசரத்துக்கும் குத்துக்கல்லுக்கும்

30. மேற்கு சாலைக்கு வடக்கு கருமலைக்கு கிழக்கு வ

31. ாக தேவநல்லூர் கூனி ஆத்துக்குத் தெற்கு

32. யிந்த நான் கெல்லைக்குள் பட்ட பூமியா

33. வது வேட்டகாறன்பட்டி திருவேட்டனல்

34. லூர் பாண்டியக் கோனார் குளம் இராம

35. லிங்கபுரம் புன்னைக்குளம் புளியங்குடி வ

36. ாக தேவநல்லூர் தாருகாபுரம் மலை

37. யடிக்குறிச்சி பட்டகுறிச்சி அரியூர் பரி

38. யூர் புதூர் யிருமன்குளம் வீரிருப்பு வேம்ப

39. ங்குளம் நயினார் குளம இந்திரபுரம் னாக

40. புரம் முள்ளிக்குளம வடமலைபுரம் யிது முத

41. லான கிராமமெல்லாம் சறுவ மானியமா கே

42. ாட்டைக் கட்டளைக கிராமமாக தனக்

43. கு நாம் பட்டைய சாதனம் எழுதிக் குடுத்

44. த படியினாலே கல்லுங் காவேரியும் புல்லு

45 ம் பூமியும் உள்ளவரையும் புத்திர பாரம்பரை

பின்பக்கம்

46. யாக சந்திராதித்தர் உள்ளவரையும் மக்கள்

47. மக்களுக்குச் சீதனங்களும் விலை விக்கிரய

48. தான தருமங்களுக்கும் யுருத்தாக ஆண்

49. டனுபவித்துக் கொள்வாராகவும் சங்க

50. ர நயினார் கோவில் ஆவுடைத்தாயு சன்
51. னிதானத்தில் தனக்கு தீர்த்தம் திருநீ
52. று சந்தனம் திருமாலை பாக்கு வெத்திலை
53. முன்னிதாக குடுத்து தேர்வடமும் முன்
54. னிதாகத் தொட்டு தேர் நடத்திவிக்கிற
55. து யிப்படிக்கு சம்மதித்து சாதன பட்டை
56. யம் எழுதிக் குடுத்தோம் சிவலி மகார
57. ாசா அவர்களோம் யிந்திரத் தலைவனு
58. க்கு யிதுக்கு சாட்சி பொக்குஷம் குரசங்
59. கு னாயக்கர் கடம்பூர்த் தடியத் தலைவன்
60. வடகரை முடி பொறுத்த செம்புலித் தே
61. வன் யிந்த சாதனப் பட்டையம் எழுதினே
62. ன் சங்கர நயினார் கோவிலிருக்கு ச
63. ஙகரலிங்கம் பிள்ளை மகன் மீனாட்சிநாத
64. ன எழுத்து இந்தப்படிக்கு நாம் எழுதிக்
65. குடுத்த பூமிக்கும் யிந்த பட்டையத்துக்கும்
66. ஆதாமொரு ராசாக்கள் சீமை பரிபாலனம்
67. பண்ணுகிற பேர்கள் குடிவம் பண்ணித் தோ
68. ஷத் துரோகம் நினைத்தாலும் வலுவின் பேரி
69. ல் கதட்டைகைகொண்டாலு மவர்கள் கெங்கை
70. கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தே
71. ாஷத்திலும் தீர்த்தக் கரையிலெப் பிராமண
72. ரைக் கொன்ற தோஷத்திலும் போகக் கட
73. வாராகவும் யிந்தப்பட்டுகக உ
74. ய சங்கரலிங்கம் ஆவுடைத் தாயார் துணை உ

# 25. திருவாடுதுறைச் செப்பேடு

*திருச்செந்தூர் கோயில் திருப்பணிக்குக் கட்டபொம்மனின் கொடை*

திருவாடுதுறை ஆதீனத்தில் உள்ள செப்பேடுகளில் ஒன்றாக இச்செப்பேடு உள்ளது. இச்செப்பேடு 21 x 13 செ.மீ அளவுடையது. முன்பக்கம் 39 வரிகளும் பின்பக்கம் 19 வரிகளும் ஆக 58 வரிகள் உள்ளன.

சக வருடம் 1700 (கி.பி.1778)ம் தமிழ்வருடம் 'விளம்பி' (கி.பி.1779) யும் சொல்லப்பட்டுள்ளன. தேதியும் குறிக்கப்பட்ட போதிலும் ஆண்டு என்ன குறிப்பிடப் படவில்லை. செகவீரராம செகவீரபாண்டிய கட்டபொம்ம நாயக்கர் பெயர் குறிப்பிடப்படுகிறது.

திருச்செந்தூர் வள்ளி, தெய்வானை உடனுறை சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி மற்றும் வழிபாட்டிற்காக செகவீரபாண்டிய கட்டபொம்மநாயக்கரின் ஆட்சியின் கீழ் அமைந்த உம்பளக் கிராமம், சீவிதக் கிராமம், ஆகிய அனைத்திடங்களிலும் உள்ள எல்லாசாதியினர் வீட்டிற்கும் வருஷம் ஒன்றிற்கு மரக்கால் குறுணி தானியம் வீதம் வரிவசூலிக்கப் பிறப்பித்த ஆணையை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

முருகனின் பெருமையும், வீரபாண்டிய கட்டபொம்மனின் சிறப்புக்களும் சொல்லப்பட்டுள்ளன. செப்பேட்டினை எழுதியவர் இராயசம் குமாரசாமியா பிள்ளை மகன் சுப்பிரமணியபிள்ளை ஆவார்.

---

கல்வெட்டு இதழ் எண்.47 தாது ஆண்டு ஆனி - ஆடித் திங்கள் 1996 ஜூலைத் திங்கள் பக்.21-26. 'கட்டபொம்மன் வழங்கிய செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. ச.கிருஷ்ணமூர்த்தி தொல்லியல் ஆலோசகர் தொல்பொருள் ஆய்வுத்துறை.

## செப்பேடு

1. உ சுவத்திரி சகாற்றம் 1700க்கு மே
2. லசெ சொல்லா நின்ற கொல்லம் வருசம் விளம்பி வருசம்
3. உத்தராயணமான தை 28 தேதி குருவாரமும் பூறுவ பட
4. சதுத் துவாதெசியும் மாகேந்திறாக யோகம் பால
5. வாகறணமும் சுபயோக சுபகரணமும் பெத்த மிருகசீ
6. ருச நட்செத்திரத்தில் நாள்ச் செய்த தான சாதனப்
7. பட்டையமாவது சூடநாட்டுத் திருச்செந்தூரான் தி
8. ரிபுவன மகாதேவி சதுர்வேதிமங்கலம் நா
9. யன்மாரிளைய நாயினாரான சிருட்டித் திதி சங்க
10. ராத்தி ரோடா னுக்கிரக பஞ்ச கத்த
11. வலிய வீரமயில் வாகன குக்குடத் துவஜ
12. கரான சராயிட. சகல சத்திபாத்மக சுருப
13. வல்லி தேவநாயகி சமேத சுப்பிரமணிய
14. சுவாமி சன்னிய்தானத்திலத் திருப்பட
15. ணிக்கு ஆச்சந்திராக்கம் ஆகத் தான
16. சாதனப் பட்டையமாவது பாஞ்சை
17. நகராதிபன் சக்கதேவி அநுகூலன்
18. துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனன் செ
19. ச மன்னியர் கோனேரி மறு மன்னியர்
20. சிறப்ப கெருடன் ரணமுக சதுர வீரன்
21. அருணா நடமுக சந்திரோதய னியவிசை
22. நாடக முத்தமிழாதிபன் கவி சாருவ பூம
23. ன் பச்சைக் குடை பூச்சக்கிறவாளக ரு
24. டைக்கத்திபன் தளைடுவார் முண்டன் தென்
25. னாட்டு ராயன் ரட்டை வான்கத்திபன் மயில்
26. க் கொடிச் சேவற் கொடி ரிசபக் கொடி அநு
27. மக் கொடிக் கெருடக் கொடிக கத்திபன் சோ

28. திவிழுவந்த சிவ கந்தவடி மறவாத அடியே

29. ன் செகவீர ராமச் செகவீர பாண்டியக் கட்ட

30. பொம்ம நாயக்கரோம தான சாதனமாகத்

31. தாம்புர சாதனப பட்டைய மெழுதிக்

32. கொடுக்கபடி தான சாதனமாகத் தாம்

33. புர சாதனப் பட்டையமானது மென்று

34. டைய ஆதிக்கத்திலச் சேர்ந்த கிராமம்

35. உண்பகை கிராமஞ் சீவிதக் கிராமஞ் சிறு

36. பாட்டுக் கிராமம் அமரக் கிராம முதல் ஆகிய

37. நத்ததுக்கும் சகல சாதிக்கும் கவிள்த்திக்

38. கட்டின கிரக ஒன்றுக்கு வருராசவங் குறு

39. ணித் தான்னிய விதம் கோவில்த் தலத்தா

பின்பக்கம்

40. ர் மனுசர் வசம் யீரம் பதார்த் தாக்கி

41. அளந்து கொடுத்து வருவோமாக

42. வும் யிந்தத் தர்மம் ஆச்சந்திராக்க

43. ம் சந்திப் பிறதிவேஷம் ஆதிக்கத்திலப்

44. பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருவோ

45. மாகவும் யிந்தத் தர்மத்துக்கு வாக்குச் ச

46. காயம் சரீர சகாயம் அறிந்த சகாயம்

47. பண்ணின பேர் சாலோக சாமீப சாருப

48. சாயுச்ச பதம் பெறுவாராகவும் யிப்படி

49. க்குச சம்மதித்துத் தான சாதனமாக யி

50. ந்தத் தாம்புர சாதன பட்டயம் சுவாமி

51. சுபபிரமணிய சாமி சன்னிதானத்

52. தில்த் திருப்பணிக்குக தாம்புர சாதன

53. ப் படையமெழுதித் தானம் பண்ணி

54. க கொடுத்தேன் செகவீரராம செ

55. கவீரபாண்டியன் கட்ட பொம்ம நா

56. யக்கரோம் ஐ யிந்த பட்டையமெழு

57. திவேன் ராயசங் குமாரசாமியா

58. பிள்ளை குமாரன் சிவ சட்பிரமணியன் உ

# 26. எட்டயபுரம் செப்பேடு

*பாளையப்பட்டுகளில் ஆங்கிலேயரின் ஆயுதப்பறிமுதல் குறித்த விளம்பரச் செப்பேடு*

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பாளையக்காரர் அரண்மனைக்கு முன்னதாக உள்ள ஆ/பி எட்டீஸ்வரர் கோயில் நுழைவாயிலின் வலதுபுறம் 4 அடி உயரமுள்ள கல்தூண் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது.

52 X 32 செ.மீ. அளவுள்ள இச்செப்பேட்டில் ஒருபுறம் மட்டும் 33 வரிகளில் வாசகம் உள்ளது. தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ள இச்செப்பேட்டின் இறுதியில் I.A. BANNERMAN என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் சக வருடம் 1721 (கி.பி.1799) ஆங்கில வருடம் 1799. தமிழ் வருடம் சித்தார்த்தி (கி.பி.1799) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 4 நாட்களுக்குப்பின்னர் இச்செப்பேடு எழுதப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சீமையில் உள்ள பாஞ்சாலங்குறிச்சி ஏழாயிரம்பண்ணை. நாகலாபுரம், கோலார்பட்டி, காடல் குடி. குளத்தூர் ஆகிய பாளையப்பட்டுகளை ஆங்கிலேய கம்பெனி - தன் ஆட்சியில் சேர்த்து கொண்டது. கட்டபொம்மநாயக்கனை சிரச்சேதம் செய்தது ஆகிய செய்திகள் சொல்லப்பட்டுகின்றன. பாளையப்பட்டுகளில் உள்ள கோட்டைகள் தரைமட்டமாக்கப்பட்டு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்ட செய்திகள் சொல்லப்பட்டு இனியாரும் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதின் விளம்பரமாக இச்செப்பேடு வெளியிடப்பட்டுள்ளது.

---

செப்பேட்டின் வாசகத்தை படித்துக் குறிப்புகளுடன் அனுப்பியவர் திரு.செ.மா கணபதி காப்பாட்சியர் மேலும் இராமேசுவரம்.

செப்பேடு

முன் பக்கம்

1. ஆனரகும்பெனி ௲௭௱ அட்டோபர் மீ ௨ உம் ௳ சகார்த்தும்
ஆனரடுமிக மேவிசெல்ரோ நிரை சித்தராதந்தி ஸ்ரீ ஆர்பசி மீ

2. எ ௳ திருநெல்வேலிச் சீமையுடனே சநதப் பாளையப்பட்டுச்
சீமைகளிலே யிருக்கப்பட்ட பாளையக்காரர்

3. சகலவிதமான குடியானபோகளுககும் தெரியும்படிக்கி
விளம்பரம பண்ணிவிக்கிரது யென்ன வென்றால் மேசர் பா

4 ளர் மெனதுரையவர்கள் கும்பினியாரிடத்தில் பெற்ற
உத்தரவினாலெ தாசாலத்திலெ கும்பினியார்வர்கள் தி

5. ருநெல்வேலிச் சீமைகளிலே பாளையஞ் சேகரிக்க அகத்தியம்
டசெ டானதும் பாஞ்சாலங்குரிச்சி யாளேழாயிரம

6. பண்ணையான் நாகலாபுரத்தான் கோலார்பட்டியான் காடல்குடி
குளத்தூராளிவர்களனைவரும் ஆங்கத்தப் பித்தர்

7. மார்க நடத்தைகளாக நடந்ததினாலே இவர்களுடைய
பாளையப்பட்டுக்களைக் கொள்ள நிமர்த்தியம் உண்டானது

8. ம் பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனாயக்கன் அவனுடைய
தானாபதி சிவசுப்பிரமணிய பிள்ளை நாகலாபுரத்

9. துப் பாளையக்காரனுக்குத் தமையனாகவும் காரியஸ்தனாகவு
மிருந்த சவுந்தர பாண்டிய நாயக்கனைவரகளையு மிரச்சேத

10. மாக ஆக்கினை செய்ததும் மேசர் பனர்மென் துரை யவர்கள்
நாகலாபுரம் யேழாயிரம பண்ணைப் பாளைக்கார ரையுமின்ன

11. தனு சிலது மூக்கிடமாயிருக்கப்பட்ட மனுடர்களையும்
அவரவர் பாளையப்பட்டுக்களை நீக்குவிச்சுச் சென்னைப்
பட்டணத்துக்கு

12. அனுப்பிவிக்கிம்படி நிமித்தியம் உண்டானதும் பாளையப
பட்டுகெளிலேயுள்ள கோட்டைகளை யெல்லாமிடித்து அதிலு

13. ள்ள சோல்சயகாறா சேவகா குடியான பேர்கள் கையிலுள்ள
ஆயுதங்களையும வாங்கிக் கொள்ள நிமித்தியம் உண்ட

14. ளனது மித்தியாதி காரியங்களெல்லா மிதற்கு முன்வகை விபரமாக விளம்பரப்படுத்திய விளம்பரங்களினாலே சகலமா

15. ன பேர்களுக்கும் லோகப் பிரசித்தமாயத் தெரியப்பட்டிருக்குமே யின்னங் கீழே எழுதப்பட்ட காரிய குளங்

16. களை யெல்லாஞ் சகலமான பேர்களுக்குந் தெரியப் படுத்த வேண்டியது மேசர் பனர்மென்துரையவர்களுக்கு நிமி

17. த்தியமாய்த்தோணி விளம்பரம் பண்ணவிக்கிறது யென்ன வென்றா யினிமேலட்டு யாதாமொரு பாளைய கார

18. னம் கெடிபடி கோட்டை கொத்தள முடையங்கள் போட்டாலும் பிரங்கி ரெக்குலொசா காபிமாராதுகள் வைத்திருந்த

19. ாலு , மித்தியாதிகளைச் சம்பாதித்தாலுமவர்கள் கும்பினியாருடைய ஆதாவுகளையுமிழந்து அவர்களுடைய பாளையபட்டு

20. களையும் கும்பினியார் கட்டிக்கொண்டு அந்தப்பாளையக்காரனையும் கும்பினியாருக்கு தோணினபடி தேண்டிப்பார்கள்

21. பாளையபட்டுகளிலுள்ள சேர்வைகாரர் சேவுகர் காவல்காரர் குடியான பேர்களிந்தவித மனுடர்களில் யாதாமொரும

22. னுடர்களானாலும் துபாக்கியாகிய கல்வெடி திரிவெடி யீட்டி வல்லயங்கள் பிடித்த பேர்களைக் கண்டாலு மிதுகளை

23. யொளித்து வைத்திருந்த பேர்களைக் கண்டாலு மவர்களை யுயிர்ச் சேதம் பண்ணுவோர்களுந்தந்தப் பாளையக்காரர

24. வர்களுடைய பாளையபட்டு குடியானபேர்களுடைய நடத்தைகளுக்கு அந்தந்த பாளையக்காரர் தாமே உத்தரவாதம் பண்ண வே

25. ணும் அதல்லாமலும் யாதாமொரு பாளையகாரனுடைய சனங்களாயுந் பாணிகளாய் யெந்தச் சீமைகளிலேயாகிலும் சஞ்சரிய

26. ங்களும் பெலபந்தங்களும் செய்யிறதைக் கண்டாலந்தச் சனங்களுக்கு உயிர்ச்சேதமாகிய தண்டினையும் நடக்கிறதும

27. ஸ்வாமித்ந்த்ரு ஜனங்களுடைய பாளையப்பட்டுப்பாளையக காரருடைய சீமைகளையும் கூடிக் கொண்டு அந்தப்பாளையக்காரன

28. க ம்பினியாருக்குத் தோணின தண்டனை நடப்பிப்பார்களின்னா மரிய வேண்டியது தென்ன மென்றால் மேசர்பனர்

29. மென்துரையவர்கள் பொர உத்தரவுக்காக நடத்திவிச்ச காரியங்களையும் சீமைகளு க்ஷுகத்தியமாகும் படியாய் மேலே

30. யெழுதி யிருக்கப்பட்ட சட்டங்களையும் சகலவிதசனங் களுக்கு மிப்போதைக்கு மினிமேலென்றென்னைக்கும் அறிந்து

31. மனதிலே வைக்க வேண்டியது மிகவும் யுத்தமாயும். அகத்தியமாயு மிருக்கப்பட்டதான படியினாலே யிந்த விளம்பரத்

32. தை யொரு செம்புத் தகட்டிலே எழுதி அந்தந்தப் பாளையப்பட்டுத் தவக்கிராமங்களில் பயிர் பலமாயிருக்கப்பட்ட யிடங்களிலே

33. அடிக்கும்படியாய் உதவிரவாச்சது அதுவரியவும் இந்தப்படிக்கி மேசர்னர்மென் துரையவர்கள் உ.

I.A. BANNERMAN

MAJOR

# 27. செங்கல்பட்டு வெள்ளிப்பட்டயம்

*விக்டோரியா ஸ்ரீராணி பெயரால் காசுமாலை கொடுத்தது*

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் கோட்டைப் பகுதியிலிருந்த கோதண்டராமசாமி கோயில் வாயில் கதவினில் முன்பு பதிக்கப்பட்டிருந்தது. இன்று இக்கோயில் கோட்டைப் பகுதியிலிருந்து நகர்ப்பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது. வாயிற்கதவில் பதிக்கப்பட்டிருந்த இவ்வெள்ளித் தகடு இன்று அதனிலிருந்து எடுக்கப்பட்டு நிர்வாகத்தார் பாதுகாப்பில் உள்ளது.

33x23 செ.மீ அளவுடைய இத்தகட்டின் நான்கு மூலைகளிலும் ஆணிகள் அடித்த துளைகள் உள்ளன. முன்பக்கம் மட்டும் 11 வரிகளில் வாசகம் உள்ளது.

கலிவருடம் 4987 கி.பி.1886 தமிழ்வருடம் 'விய' கி.பி.1886 ஆங்கில வருடம் கி.பி 1887 ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. 'விக்டோரியா சக்கரவர்த்தினி' பெயரும் குறிப்பிடப்படுகிறது.

விக்டோரியா மகாராணியின் 50 வது ஆண்டு நிறைவு விழா அன்னதானம் வழங்கப்பட்டும் இலவச சேலை, வேஷ்டிகள் வழங்கப்பட்டும் கொண்டாடப்பட்டது. அந்நிகழ்வில் ராணியின் பேரால் சிறப்பிற்காக கோயில் தர்ம பரிபாலகர் மா. குப்புசாமி நாயுடுவின் குமாரரும் மாவட்ட நீதிமன்ற ரிட்டருமான மா. ராமானுஜ நாயுடு ரூ300 மதிப்புள்ள தங்கக் காசு மாலை ஒன்றினை கோதண்டராமசாமிக்கு வழங்கியுள்ளார். இச் செய்தி இவ்வெள்ளிப் பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

---

கல்வெட்டு இதழ் 31 பிரஜோற்பத்தி ஆண்டு ஆவணித்திங்கள் 1991 ஆகஸ்ட் திங்கள் பக்.33-35 'விக்டோரியா ராணியின் வெள்ளிப்பட்டயம்' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு கு. தாமோதரன் துணை இயக்குநர் தொல்லியல் துறை.

## வெள்ளியேடு

1. செங்கல்பட்டு ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி சந்நிதியில் கலியுக
2. காதி 4987-ல நிகழும் வியவிரு மாசி மீ 6க்கு 1887 பிப்
3. ரவரி மீ 16 உ நமது விக்டோரியா சக்கரவர்த்தினி அவர்களுடைய
4. 50-வது ஆண்டின் பெருமையை உற்சவ கோலாகலங்களு
5. டன் அன்னதான வஸ்திரதான முதலியவைகளை செய்து பாவைறாலும்
6. கொண்டாடப்பட்டது அது சமயத்தில் தேவஸ்தான தர்மபரி பாலகர்
7. மா - குப்புசாமி நாயுடுகாரு குமாரர் செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு கோர்ட்டு-
8. ஷீடர் - மா - ராமானுஜ நாயுடுகாரு மாகதிமை தங்கிய நமது சக்கிரவர்த்தி
9. நியவர்கள் பெயரால் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமிக்கு சுமார் 300 முன்னூறு
10. ரூ. விலையுள்ள பொன் காசு மாலையை சமர்ப்பித்து புகழப் பட்டது.
11. சர்வம் ஸ்ரீகிருஷ்ண பிரீதி

# 28. பள்ளப்பட்டி செப்பேடு

*பள்ளப்பட்டி பெரிய நாட்டாண்மைக்கு விருது கொடுத்தமை*

திண்டுக்கல் மாவட்டம். நிலக்கோட்டை வட்டம். பள்ளப்பட்டியில் உள்ள திரு ரா. பாண்டியராஜ் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

23.5 x 13.5 செ.மீ. அளவுடைய செப்பேடு இது. தலைப்புப் பகுதியில் மொட்டு வடிவக் கைப்பிடிப்பகுதியில் ஒரு சிறு துளையுள்ளது. அதன்கீழ் பீடத்தின் மீது நிறுத்தப்பட்ட திருமண் நாமம் காட்டப்பட்டு அதன் இருபுறமும் சூரியன் சந்திரன். சங்கு. சக்கரம் ஆகியவை கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. வாசகம் முன்பக்கம் மட்டும் 43 வரிகளில் உள்ளது.

வேதமார்க்கத்தை நிலைநிறுத்தியவரும் ஆதிபிரம்ம சகோதரரும். வைணவ மடத் தலைவருமான ஸ்ரீவேதவியாச பட்டர் அய்யங்கார். பள்ளப்பட்டி பெரியநாட்டாண்மை தொட்டய கவுண்டனுக்கு விருதுகள் அளித்து ஆணை திருமுகம் வழங்கியதை இச்செப்பேடு சொல்கிறது. இதன்படி தேர்த்திருநாள். அரிபூசை குருபூசை நாட்களில் அனுமக்கொடி. கருடக்கொடி. வெள்ளைக்கரை டால் பஞ்சவர்ண டால். மஞ்சள் நிற டால். கருட்டி. சூரிய பரன் ஆகிய பரிசின்னங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. இச்சிறப்புகள் தொட்டயக் கவுண்டர் தூளி சமுதாயத்திற்கு நாட்டாண்மை என்பதால் தூளிசமயத்திற்கு கொடுக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். கட்டு சமயத்தார். தூளி சமயத்தார். மலைக்குடியினர். இன்னும் பிறரும் அறிய இப்பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

---

இச்செப்பேட்டினைச் சேகரித்துப் படித்தவர் முனைவர் இரா.ப.கருணானந்தன். கல்வெட்டாய்வாளர். உதகமண்டலம். 'தூளி சமயச் செப்பேடு' என்ற தலைப்பில் தொல்லியல் செய்திமடல்: கோவை 4 மடல் 1. 1999 ஜனவரி-இல் செய்திக்குறிப்பு வெளியாகியுள்ளது.

செப்பேடு

1. ஸ்ரீ இராமஜெயம் சொஸ்தத்திறி சாலிவாகன சகார்
2. த்தம சுசாஉபிக கலியுக சதார்த்தம் சதுசுரா அ
3. ஜிதின்மேல் செல்லாநின்ற விப ஸ்ரீப பைங்குனி மீ
4. யிரூடு சக்கிரபச்சத்து பஞ்சமியும் சுக்கிரவாரமும்
5. உத்திர நக்ஷெத்திரமும் அமுர்தநாமயோகமும்
6. வாலவாகரணமும் கூடிய இந்த சுபதனத்தில்
7. ஸ்ரீ மத்வேதமார்க்க பிறதிஷ்டாபனாசாரிய
8. உபயவேதாந்தாசாரிய ஆதிபிறமம சகோ
9. தரரான ஸ்ரீ வேதவியாச பட்டரய்யங்கார் நம்
10. முடைய அமமயனாயக்கர் சீமை பெஞ்சை நக
11. ரம் பெரியநாட்டாண்மை பள்ளபட்டு தூளி சமை
12. யம் தொட்டயகவுண்டனுக்குத் திருமாளிகையில்
13. விருது குடுத்ததற்கு விபரம் அனுமக்கொடி டால்
14. கெருடக்கொடி டால் வெள்ளைப் பகலரை டால்
15. பஞ்சவற்ன டால் மஞ்ச டால் வெள்ளைக் குடை
16. சல்லி ஙில்லிக் குடை கருப்டி சூரியபரன் யிந்த
17. விருதுகளெல்லாம் நம்முடைய தூளிசமை
18. யம் தொட்டயகவுண்டருக்குக் கட்டளையிட்டபடி
19. யினாலே யிந்த விருதுகளத் தேர்த்திருனாள்
20. அரிபூசை குருபூசை பந்தி பாவாடை யித்தியா
21. தி யிடங்களுக்கெல்லாம் யிந்தவிருதைப் பிடி
22. த்துக் கொண்டு சுகத்திலே யிருபாராகவும்
23. யிந்த ஸ்ரீமுகத்தைச் சீமைவளியிலே யிரு
24. க்கிற சுட்டுசமையத்தார் தூளி சமையா
25. த்தார் பாவாடைத் தாதர்கள் அகாடி
26. த் தாதாகள் தெசபாகத்தார் சாத்தாத

27. வான் மேல் னோக்கித் திருமணியிட்ட திரு
28. மலைக்குடியானபேர் அனைவோரும யிறந்த
29. த் திருமுகத்தைப் பாாத்துக்கொண்டு நம்மு
30. டைய தானி சமையம் தொட்டய கவுண்ட
31. னிடத்திற் குடுத்து விடவும் உ ஸ்ரீ வேத
32. வியாஸ உ இந்தப்பட்டயத்துக்கு ஆராமொருத்தற்
33. வில்லங்கஞ் செய்தாலும் பிரட்டென்று சொ
34. ன்னாலும் விகாத பேதங்கள் செய்தாலும்
35. இப்படியாக கோத்ததுஷ்ட்டத் துரோகஞ்செ
36. ய்பிரபேற்கள் அனுபவிக்கிர பலன் சாமித்துரோ
37. கம குருத்துரோகம் ஆலையங்களில் திருவிள
38. க்கை அணைத்தவன் ஸ்ரீவதை செய்தவன் யெந்த
39. பாவத்திலே போவானோ அந்த பாவத்தை அனுப
40. விப்பாறாகவும் இதற்கு நன்மையுடையவர்கள் அஷ்
41. ட்டாச்சரத்துக்குடைத்தாகிய வெங்கிடாசலபதி
42 கிருபை பெத்துவாழ்ந்து யிருப்பாராகவும ஸ்ரீவே
43. தவியாச பட்டரய்யங்கார் வாக்கியம் உ



பள்ளபட்டி செப்பேடு

# 29. மயிலாடுதுறைச் செப்பேடு

*கந்தபுராணத்தில் செங்குந்தரைப் பாடியவருக்கு மரியாதை*

இச்செப்பேடு மயிலாடுதுறை தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் வி.சா. குருசாமி அவர்கள் இல்லத்தில் வழிபாட்டில் உள்ளது.

31.5 x 21 செ.மீ அளவுள்ள இச்செப்பேட்டில் முன்பக்கம் 5 வரிசைகளாக புடைப்பு உருவங்கள் வார்க்கப்பட்டுள்ளன. பின்புறம் 45 வரிகளில் செப்பேட்டின் வாசகம் உள்ளது. புடைப்புச் சிற்பங்களில் முதல் வரிசையின் நடுவில் சிவபெருமான் உமையுடன் கயிலை மலையில் அமர்ந்துள்ள காட்சியும். அவரது இருபுறம் துவாரபாலகர்கள். துவாரபாலகரை அடுத்து வலதுபுறம் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகர். இடதுபுறம் விநாயகர் ஆகியோர் நின்ற நிலையில் காட்டப்பெற்றுள்ளனர். இரண்டாம் வரிசையில் 9 சக்திகள் (நவசக்திகள்) நின்ற நிலையில் கரண்ட மகுடம் அணிந்து கையில் மலரேந்திக் காட்டப்பட்டுள்ளனர். மூன்றாம் வரிசையில் 9 வீரர்கள் (நவவீரர்) வலக்கையில் வாள் ஏந்தி நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளனர். நான்காம் வரிசையில் ஒரு யானையும், மகுடமில்லாத தலை ஒன்றும். இருபுறமும் இழுத்துக் கயிற்றால் கட்டப்பட்ட உறியின்கீழ் நெருப்பும், கயிற்றில் தொங்கும் வாள். வேல், வரிசையாகப் பறக்கும் நான்கு கொடிகள் ஆகியவையும் உள்ளன. ஐந்தாவது வரிசையான கீழ்வரிசையில் கொடி. சங்கு. கண்ணாடி. கவரிகள், துனி, விசிறி. உடுக்கை. எக்காளம். குடை. ஏரில் பூட்டப்பட்ட இரு காளைகள் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

---

கல்வெட்டு இதழ் எண்.26: பிரமோதூத - வைகாசி 1990-மே பக்.31-37 மற்றும் இதழ் எண்.27 பிரமோதூத - ஆவணி 1990-ஆகஸ்ட் பக்.25-29ல் 'சமயச் செப்பேடு' என்ற தலைப்பில் வெளியானது. கட்டுரையாக எழுதியவர் திரு பொ. இராசேந்திரன். கல்வெட்டாய்வாளர்.

செப்பேட்டில் சகவருடம் 1107(கி.பி.1185) கலிவருடம் 4186(கி.பி.1185), தமிழ் வருடம் விஜய (கி.பி.1185) ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி.1185க்கு இணையாக வருகின்றன. எனினும் இதனில் உள்ள செய்தி, வாசக அமைப்பு, குறிக்கப்படும் மன்னன் - நரசிங்க ராயர், செப்பேட்டின் எழுத்தமைதி ஆகியவை இவ்வாண்டிற்குப் பொருத்தமற்றவை. இச்செப்பேட்டின் காலத்தினை கி.பி.16ஆம் நூற்றாண்டாகச் சொல்லலாம்.

செங்குந்தர் - கைக்கோளர் எனும் நெசவுத் தொழில் புரியும் சமுதாயத்தினர் தங்களை முருகப் பெருமானின் தொண்டர் வீரபாகுவழி வந்தவர்களாகக் கூறிக்கொள்வர். முருகனைத் தங்கள் குலக் கடவுளாகக் கொண்டு வழிபடுவர்.

முருகன் மீதான கந்தபுராணம் தமிழில் கச்சியப்பசிவாசாரியாரால் எழுதப்பட்டு இன்று பரவலாகத் தமிழில் உள்ள நூலாகும். இச்செப்பேட்டில் திருச்செங்கோட்டைச் சேர்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் கந்தபுராணம் பாடினார் என்றும் அதனில் ''கைக்கோளர் வரலாற்றினைப் பெருமையை மிகுதியாய்ப் பாடி பிரசங்கித்து [illegible] மழுவெடுத்து அரங்கேற்றி [illegible]'' என்றும் அதற்காக இவரை எடுத்த கால் பீடத்தின் மீது இடங்கை பாவாடை விரித்து, இருபுறமும் விளக்கு வைத்து, பாதபூசை செய்து 1. தறிக்கு ஒருபணம் 2. தலைக்கட்டுக்கு ஒரு பணம் 3. [illegible] ஒரு பணம் 4. தீபத்துக்கு ஒருபணம் 5. முக்கூட்டுக்கு ஒருபணம் என கொங்குநாட்டில் உள்ள 24 நாட்டுக் கைக்கோளரும் தருவதென தீர்மானித்து மரியாதை செய்தனர். மேலும் இவர் கைக்கோளர் உள்ள எந்த இடத்திற்கும் சென்றாலும் இவரைப் பாவாடை துணி விரித்து, வரவேற்று உபசாரமும் செய்யவேண்டும் எனவும் தீர்மானித்தனர்.

இந்தத் தீர்மானங்கள் காஞ்சிபுரம் ஏகாம்பரர் கோயிலில் முகவாயில் எழுந்தான் என்ற மண்டபத்தில் கூடி எடுக்கப்பட்டு 'சபையச் செப்பேடு' என்ற பெயரில் செப்பேடாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

## செப்பேடு

1. உ கணபதி துணை சிவ [illegible] சண்முகன் துணை
2. ஸ்வஸ்திஸ்ரீ மன்மகா மண்டலேசுரர் மூவராய க
3. ண்ட நரசிங்கராயர் பிரிதிவிராஜ்ய பரிபாலந

4. ம் பண்ணி யருளா நின்ற சாலிய வாகன சகாப்தத

5. ம் தூள கலியுகாப்தம் சதுகாஆய்சு யி

6. தின் மேல் செல்லா நின்ற விஜய வருஷ டங்குனி

7. உட குருவாரம அசுவதி நக்ஷத்திரமும் சித்தயோகமும்

8. சுபகரணமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீகாஞ்சிபுர

9. யேகாம்பரனாத சுவாமி சன்னிதியில் முகவாயி

10. லெழுந்தான் மண்டபத்தில் செங்குந்தர் மற்றுமுள்ளா

11. ருங் கொளறவற கூடியிருந்து திருச்செஞ்ஞலூர்

12. கத்த சைவாசாரியராகிய ஞானியினால் மழுவெடுத்த

13. ஞானப்பிரகாச சுவாமியாரவர்களுக்கு உரித்தி

14. ர புத்திரர் ஆஜுக்கேறாய்ப் பிறந்தோர் மெயிமீசை

15. யிருந்தோர் வீரர் பாணரென்றும் பொற்கோவில்

16. கைக்கோளரென்னுஞ செங்கழுபத்து ரெண்டு னா

17. ட்டிலுள்ள செங்குந்தரானவரும் பண்ணிக் கொடுத்த

18. சமையச் செப்பேடு கந்தபுராணத்தில் கைக்கோ

19. ளர் வரலாற்றின் பெருமையை மிகுதியாயிப் பா

20. டி பிரசங்கித்து ஞானியினால் மழுவெடுத்து அரங்கே

21. ற்றி நவவீரர் வம்சம் விர்சயித்த சுவாமிகளுககு ப

22. ரிசு கொடுத்துத் தீரஷெகன்று யிரட்டை விளக்கு யீட

23. ந்தைகப் பாவாடை யிட்டு வெண்காவ் பிடத்தே

24. பாதார்ச்சனை பண்ணி சாயிபோகமாயி தரி

25. க்கொரு பணம் தலைக்கட்டுக்கொரு பணம் நன்

26. மைக்கொரு பணம் தின்மைக்கொரு பணம் மூ

27. க்குத்திக் கொரு பணம் யிந்த அஞ்சு பணமும் வரு

28. த்தனையாக யெந்த மண்டபத்திலுள்ள யெந்த

29. கைக்கோள துரைகளும் பாவாடை வரிசை யு

30. பசாரஞ செய்பவும் யிந்த செப்பேடு தள்ளி ய்

31. தாசினையும் ஆக்ஷேபமுஞ செய்ய கூடாது யிந்த

32. கட்டளை சந்திராதித்தயருள்ள வரைக்குந் நடப்பா
33. து யிந்தக்கட்டளை தன்னி யுதாசன யாகேஷப
34. ம் பண்ணின பேர்களுக்கு சிவசக்தி சண்முகன் பா
35. தத்தாவை சிவசமயரு செங்குந்த நாட்டாராவணப்
36. படி மகா பாதகஙகாயாவரதிவரகங்களை
37. யடைவார்களென்றுஞ் சத்தியமாய் யெழுப
38. த்து ரெண்டு னாட்டிலுள்ள செங்குந்தராவரு மேகா
39. ம்பரனாத சுவாமி சந்நிதானத்தில் னரசிங்
40. க ராயர் முன்பாக ஞானப்பிரகாச சுவாமியார
41. வர்களுக்கு தாம்பூர சாசனம் பண்ணிக் கொடுத்தோ
42. மிதரக் காரியஞ்சாதியார் சோழமண்டலத்துள்ள
43. பூமி பாலகரும் வாதாவியைத் திறைகொண்ட
44. வள்ளியரு மிவர்களறிய பொது கையொப்
45. பஞ் செங்குந்தம் உ கந்தவேள் துணை உ



மயிலாடுதுறை செப்பேடு



மயிலாடுதுறை செப்பேடு

# 30. மேல்சேவூர் செப்பேடு

*கோயில் வழிபாடு மீண்டும் நடக்க 24 கோத்திரத்துச் செட்டிகளின் தீர்மானம்*

இச்செப்பேடு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் மேல்சேவூர் அருள்மிகு ரிஷபேஸ்வரர் கோயில் குருக்களிடம் உள்ளது. படுக்கை வசமாக உள்ள இச் செப்பேட்டிற்கு இடதுபுறம் வார்ப்பு முறையில் சேர்க்கப்பட்ட வேல் வடிவ பிடி அமைப்பு ஒரு துளையுடன் உள்ளது. முன் பக்கம் 20 வரிகளும் பின்பக்கம் 20 வரிகளுமாக நாற்பது வரிகளில் எழுத்துப் பதிவுள்ளது. முன்பக்க இடதுபுற ஓரத்தில் 'அரோசிவன் பாதமே துணை சிவ தர்மம்' என்று 7 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

செப்பேட்டில் 'சார்வரி' என்ற தமிழ் ஆண்டுக் குறிப்பு மட்டுமே உள்ளது. சக ஆண்டுக் குறிப்போ, மன்னன் பெயரோ ஏதுமில்லை. எழுத்தமைதியைக் கொண்டு 17ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.

சிதம்பரம் பதஞ்சலி ஆசிரமமான மேலைமடம், பிக்ஷாமடம் ஆகியவற்றின் தலைவரான அகோர சிவாசாரியாரும், திருக்கண்ணபுரம் எச்சாராய்யா ஆசாரியாரும், தங்களது சிஷ்யர்களான உலக மாதேவிபுரம் (உலகாபுரம்) 24 கோத்திரத்துச் செட்டிகளை அழைத்து, அச் செட்டிகளுக்கு ஆபத்து ஏற்பட்டபோது சேவூர் இறைவன் தானும் ஒரு செட்டியாய் வந்து ஆபத்தைத் தடுத்து சிறை மீட்டார் என்றும் அவ்வரச் செட்டிகள் மறந்துவிட்டனர் என்றும் கூறி, மீண்டும் சேவூர் இறைவனுக்கு நின்றுபோன திருவிழா, வழிபாடுகளை நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டனர். அதன்படி செட்டிகள் வருடா வருடம் தலைக்கட்டிற்கு 1/2 பணம், கலியாண முகூர்த்தத்தில் 5 பணம்,

---

கல்வெட்டு இதழ் எண்.21 ரக்தாட்சி ஆண்டு புரட்டாசித் திங்கள் அக்டோபர் 1984 பக். 3-5. 'மேல்சேவூர் செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. பா. கனகமணியன்

தானப்பணம் 1. திருச்சினத்துக்கு ஒரு பணம் என வசூலித்துக் கொடுத்து சேவூர் இரங்கிமீட்ட சுவாமியார்க்கு தினப்படி வழிபாடு திருவிழா நடத்த ஏற்பாடு செய்தனர் என்ற செய்தியை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

செப்பேடு

முன் பக்கம்

அரோ சிவபாதமே துணை. சிவ தர்மம்.

1. சாருவரி சித்திரை மாத முதல் ஸ்ரீமன் சிதம்பரம் பதஞ்சலியாரா
2. சிரமான மேலைமடம். பிட்சாமடம் அகோர சிவாசாரியார
3. வர்களும் திருக்கண்ணபுரம் எச்சராய்யா ஆசாரியரவர்களு மிருவரும்
4. ங் தங்களுட சிஷாக்களான உலகமாதேவிபுரம் செட்டிகளா யிருபத்து
5. னாலு கோத்தரத்தார் எங்களனைவரையும் அழைப்பித்து உங்களுக்கு
6. முன்னாலே வந்த ஆபத்துக்கு யிரங்கி தாமுமொரு செட்டிக ளோடே
7. செட்டியாய் வந்து விவகாரத்துக்கு தாமாய் முன்னின்னுக்கொ
8. ண்டு வந்த ஆபத்தைதெ[டு]த்துக் குடுத்து சிறைமீட்டுக் குடுத்த சேவூர் யி
9. ரங்கிமீட்ட சுவாமியாருக்கு முன்னாலே அபிஷேகம் நெய் ே
10. வதனம் திருவிளக்கு தேர்திருவிழா எல்லாக்காரிய
11. மும் நடக்கத்தக்கதாக நடத்திக் கொண்டு வந்த நீங்க
12. ளத்தப்படிக்கு யிப்படியே நடந்து வரத்தக்கதாக நடத
13. தி கொண்டு வராமலிருப்பானேன் என்று திருவிளம்
14. பத்தின விடத்திலே தாங்கள் யிருபத்துனாலு கோ
15. த்திரத்தாரனைவரும் தெண்டம் பணி விண்ணப்பம்
16. செய்து முன்னாலே யிரங்கி மீட்ட சுவாமியாருக்கு
17. அபிஷேகம் நிவேதனம் திருவிளக்கு தேர் திருவி
18. ழா எல்லாக் காரியமும் நடந்தபடி யிப

19. டவும் நடந்து வரத்தக்கதாக அதுகாரியத்து
20. க்கு எப்படி எத்தனம் பண்ண வேண்டியதே

பின் பக்கம்

21. ா அது காரியத்துக்கு சுவாமியா ரவர்கள் எ
22. ந்தப்படிக்கு புத்தி கட்டளை யிட்டதோ அந்த
23. ப் படிக்குச் செய்குறோ மென்று விண்ணப்பஞ்
24. செய்த போது சுவாமியாரவர்கள் கட்டளை
25. யிட்ட விபரம் யிருபத்துனாலு கோத்திரத்தார
26. வருக்கு ஒரு' ஒரு தலைக்கட்டு வருஷவருஷத்துக்
27. கு அரைப்பணமும் ஒவ்வொரு கலியாணத்துக்கு முகூர்த்
28. த்திலே அஞ்சு அஞ்சு பணமும் தாலிப்பணம் ஒன்னு
29. ஒவ்வொரு திருச்சிலைத்துக்கு ஒவ்வொரு டணமும யிப்
30. படியாய் பணம் வாங்கிக் கட்டிக் கூடின பணத்துக்கு ே
31. சவூர் யிரங்கி மீட்ட சுவாமியாருக்கு அபிஷேகம் நெய்யிலே
32. தன நெய் விளக்கு தேர் திருவிழா யிந்தக் காரியமெல
33. லாம் முன்போல நடந்துவரத்தக்கதாக நடத்திக்கொ
34. ண்டு வாருங்கோ வென்று யிப்படிக்கு கட்டளை யிட்டார்
35. கள் அந்தப்படியே பணம் தண்டல் பண்ணி பணம் வ
36. ாங்கி சிவதர்மம் நடந்து வருகுற காரியத்திலே யிந்த சிவத
37. ர்ம கட்டளைக்கு யிருபத்துனாலு கோத்திரத்தார வருக்குள்
38. ளே யாதாமொருவர் விகாதம் பண்ணினவர் யாவரோ
39. அவர்கள் குருமொழி மறந்த சிஷன் எந்த தோஷத்தி
40. லே போவார்களோ அந்த தோஷத்திலே போவார்கள் வ



பேக்ரேஜூர் செப்பேடு முன்பக்கம்



மேல்சேவூர் செப்பேடு பின்பக்கம்

# 31. நெற்குப்பைச் செப்பேடு

*காராகாத்த வேளார் நான்கு கரையினர்க்கு காணியாட்சி*

. இது சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் நெற்குப்பையைச் சேர்ந்த திரு. பொய்யாமொழி என்பவரிடம் உள்ள செப்பேட்டின் நகலாகும்.

சக வருடம் 1389 (கி.பி 1467) தமிழ் வருடம் தாரண (கி.பி1464) சொல்லப்படுகின்றன. இவை ஒன்றுடன் ஒன்று பொருந்தி வரவில்லை. செப்பேட்டின் காலம் கி.பி 17 ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.

கார்காத்த வேளார்பட்டம் 7. நத்தம் 7057. குடிகாடு 511. பிரமதேயம் 21. தேவதானம் 212 உள்ள பொன்னமராபதிப் பகுதியின் தலைமையிடமான ஒலியூரில் கரைச் சீட்டு 4 கரை புரையமார்க்கு காணியாட்சி முறைப்படி பிரித்துக் கொடுத்த செய்தியை இச் செப்பேடு குறிப்பிடுகிறது. நான்கு கரையினராக 1. மங்காத தேவன் உள்ளிட்டார் 2. பாண்டியர் தேவன் உள்ளிட்டார். 3. தேதிராயப்புரை உள்ளிட்டார். 4. கண்டிய தேவன் நருவராயன் உள்ளிட்டார் ஆகியோர் சொல்லப் பட்டுள்ளனர்.

இச் செப்பேடு விவரம் குடுமியான்மலை. பூவாங்குறிச்சி மலை. கன்னிமலை. பூவாலைக்குடி மலை ஆகிய இடங்களில் கல் வெட்டாகப் பதியப்பட்டதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

---

கல்வெட்டு இதழ் எண் 20. ஏகாதசி ஆண்டு ஆனித் திங்கள். பக் 20-22. 'நெற்குப்பை செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. மா. செந்தில் செல்வகுமரன். தொல்பொருள் ஆய்வாளர் திருநெல்வேலி.

செப்பேடு

1. உ ஸ்ரீ மகா மண்டலீசுரன் அரிய
2. தள விபாடன் பாசைக்கிரு தப்பு மூவரா
3. ரய கண்டன் கண்டனாடு கொண்டு
4. கொண்ட நாடு குடாதான் பாண்டி
5. மண்டலத்தார் அசுபதி கெசபதி நரபதி
6. தேசு [விங்க] றிய துரைச்சியபாரம் ப
7. ண்ணி யருளாயி நின்ற சாலிசு வாக
8. ன சகாத்தம் 1363 கு மேல்
9. ச் செல்லாயி நின்றெல் தாருண ஸ்ரீ
10. அற்ப்பசி மாதம் 17 தேதி சீய சோள செம்
11. பீர வளர் நாடாகிய கோனாடு பிறாம
12. லை சூள்ந்த பொன்னமராபதி [நா]ட்டில்
13. பொரு நல்லூரு ஆறை மங்கல[ட்டாற]
14. கிய பொன்னமராபதியில் வரிசையே
15. அருக்காணி யாச்சிக்கி கற்த்தராகிய காருகா
16. ர்த்த வேளாளர் படம் 7கு தத்தம் 7057
17. க்கு குடிக்காடு 1511 க்கு விறுமத
18. ாயா 27 க்கு தேவதாயம் 212 க்கு விறுமத
19. டு 64 க்கு தலையூராகிய ஒலியூர் கூத்தம் கா
20. ருக்காத்த வேளாளர் களைச்சீட்டுப் போ
21. ட்டுக் குடுத்த காணியாச்சி யாவது வரிசை
22. ச இவ்வூருக் காணியாச்சிக்கி கறுத்தன்னா
23. க வந்த தெச்சினா பூமிக்கி கற்த்தனாகிய சே
24. து காவல்ப புளிரயர்மற் மன்னர் வாள்
25. தளக்கோட்டை ராயன் பட்டமானங்கா

26. த்தா பாண்டியர் தேவன் ஜுள்ளிட்டார்க்கும்
27. நெதிராயட் புரை உள்ளிட்டார்க்கும் கண்டி
28. ய தேவன் நருவராயன் ஜுள்ளிட்டாற்கு
29. ம் வீரமுடி காங்கய தேவன் ஜுள்ளிட்ட
30. எற்கும் ஆ[க]கரை 4[க்கு] சரைப் புரையர்மா
31. ர் மன்னருக் குடுத்த காணியாச்சி யாவ
32. து ராயமானிய ராயதுரையடைகள் சவு
33. ந்திர பாண்டியராசப்புரி ஏறி எல்லைக
34. பட அவனை கல் நட்டபடிக்கி கீள் பாற்
35. க் கெல்லை பாற்க் குண்டு புள்ளையாரடிமி
36. ல் கல்லுச் சூலந்துக்கு நத்த பிஞ்சை
37. க்கும் மேற்க்கு தென்பாற்க் கெல்[லை]
38. கோட்டை புறக்கிப் படு பாறை புள்ளடி
39. நிலை கல்லு கன்னாயிரபுரம் செங்கல்
40. ...பிஞ்சக்கும் வடக்கும் மேல்பாற்கெ
41. [க] ல்லை கீளக் கோட்டை தலைவாசல்லு
42. க்குக் கிளக்கு வடபாற் கெல்லை மத்தி
43. ல் படுபாறை புள்ளடி ச . . கடிச . . ரம்
44. நிலைகல்லுக்கும் தெற்கு யிந்த நாங்
45. கெல்லைக் குள்ளாகியது மன்னு மனை
46. கோவில்க் குளம் மிடையில் அம்
47. பலம் உம்பளம் யிந்த நாலுவகை
48. ப்புரையர் ஆண்டு கொள்ளுவது யிப்
49. படிக்கி குடுமிமலை கொத்தன் வலக்
50. குறிச்சிமலை கல்லிமலை பூவாலைக்
51. குடிமலை பூலாங்குறிச்சிமலை ஆண்டி
52. ரமடம் கல்வெட்டு தாம்பூர சா

53. தனம் குடுத்தபடி கல்லும் புல்லும் பூமி

54. சந்திரன் சூரியன் உள்ளவரை

55. யில் ஆள்வது யிபபடி 33 யூர் நாட்ட

56. டு கணக்கு ஆறுகாத வட்டகைமு

57. வேந்திர வேளார் சொல்ப்படித் தி

58. ருப்பு அனாகிய நாயகி ஒலிபல

59. ன் துணை ரெ

# 32. திருவண்ணாமலைச் செப்பேடு

*24 மனைச் செட்டிகளின் மடம், நந்தவனம் பராமரிப்பு*

கார்த்திகைத் தீபத் திருவிழாவுக்குச் சிறப்புப் பெற்ற நகரமான திருவண்ணாமலையில் 24 மனைத் தெலுங்குச் செட்டியார்கள் சங்கத்தலைவர் திரு பெ. கோவிந்தசாமி அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

37.5x20.2 செ.மீ. அளவும் 650 கிராம் எடையும் உள்ள இச்செப்பேட்டில் முன்பக்கத் தலைப்புப்பகுதியின் நடுவில் சிவலிங்கம், நந்தி உருவங்களும் அவற்றின் ஒருபுறம் விநாயகரும் மறுபுறம் முருகன் உருவமும் கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டில் சகவருடம் 1544ம் தமிழ்வருடம் 'ஜெய' வும் குறிக்கப்பட்டுள்ளன. இவை முறையே கி.பி.1622 மற்றும் கி.பி.1636 ஆகியவற்றை ஒன்றுக்கொன்று முரணாகக் குறிக்கின்றன. எழுத்தமைதி கொண்டு இச் செப்பேட்டை கி.பி 17 ஆம் நூற்றாண்டு சார்ந்ததாகக் குறிக்கலாம்.

தொடக்கத்தில் கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களும் அவற்றின் கால எல்லையும் குறிக்கப்பட்டு அண்ணாமலையார் முறையே ஜோதியாகவும், ரத்ன கிரியாகவும், சொர்ண ரூடமாகவும் சிலரூபமாகவும் ஒவ்வொரு யுகத்திலும் இருந்தார் என்று சொல்லப்பட்டு அண்ணாமலைத் தலத்தின் சிறப்புகள் சொல்லப்படுகின்றன.

---

கல்வெட்டு இதழ் 35, பக் 5-10, திருவள்ளுவராண்டு 2023 ஆங்கீரச ஆவணித்திங்கள் (1992 ஆகஸ்ட்). 'திருவண்ணாமலைச் செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. கோ. முத்துச்சாமி கல்வெட்டாய்வாளர்.

திருக்கோட்டு மகாரிஷியின் திருத் தொடையில் பிறந்தவர்களாக 24 மனைச் செட்டிகள் பெருமைபடச் சொல்லப்பட்டு அவர்கள் பெற்ற விருதுகளும், அவர்களது 24 மனைகளும் சொல்லப்பட்டுள்ளன. இவர்கள் ஒன்றிணைந்து திருவண்ணாமலையில் 24 மனையார் தேசங்கா தர்ம மடம், நந்தவனம் ஆகியவை ஏற்படுத்தி வசந்தராய பண்டாரம் என்பவரை மடத் தலைவராக்கியுள்ளனர். மடத்தினை நிர்வகிக்கும் செட்டியார் பொறுப்பு வழ்கிய கோத்திரம் அண்ணாமலை செட்டியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மடம், நந்தவனம் நிர்வாகச் செலவுகளுக்காக தலைக்கட்டுக்கு ஒரு பணம், கல்யாண முகூர்த்தத்துக்கு ஒரு பணம் பொதி ஒன்றுக்கு அன்னுக்கால் படி, மகமை ஒரு பணம் வீதம் கொடுக்க ஒப்புக் கொண்டனர். மேலும் மடச் செட்டியார், சங்கீதக் காரன், மாணிக்கத்தாள் நாட்டியமகள் பிடுதி மாணிக்கத்தாள் கலியாணங்களுக்குப் பணமும், அன்னுக் கால்படியும் கொடுக்கச் சம்மதித்துள்ளனர்.

செப்பேடு

1. உ அருணாசலேஸ்வரர் துணையாகவும் உண்ணாமலை அம்மன் து
2. ணை உ ஸ்ரீஅகிலாண்ட கோடி பிரமாண்ட னாயகராகிய அ
3. ருணாசலயீஸ்பரரை அரியயன் அடியும் முடியுந் தேடியும்
4. அரிதாகிய மனைக்கெட்டாத அண்ணாமலையுமாகிய கிரி
5. கெரையதா யுகத்திலே யிஅ லெட்சத்து உயமுது முதல் வ
6. ரைக்கு சோதி ரூபங்கொண்டெழுந்தருளிய் தெரெதா
7. யுகத்தில் உ யிஉ லெட்சத்து அயிம ஆ முதல் வரைக்கு நவ
8. நத்தினகிரி கருடாகொண்டெழுந்தருளிய துவாபு
9. ரி யுகத்தில் அ லெட்சத்திய் கூயிசது முதல் வரைக்கு சொர
10. ண ரூபங் கொண்டெழுந்தருளிய் கலியுகத்தில் ம லெட்
11. சத்து கயிஇ முதல்வரைக்கு சிலாரூபம் கொண்டெழுந்
12. தருளிய் யிப்படி யுகங்கண்ட தோறும் வேறுவேறாகிய சரூப

13. ங் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற மகிமையே. பிர
14. ம்மா விஷ்ணு அடியும் முடியும் தேடுதற்கரிதா
15. கிய மகாலிங்கமாய் யெழுந்தருளிய அண்ணாம
16. லையார் ரெண்டும் பெயரினை யுடைய ஷ்தலம் தொ
17. ண்ணூறறாறு பிறம்மா பூசை பண்ணிய ஷேத்தலம் ஒக
18. வுதம ரிஷி ஆஷ்டத்திராங் பண்ணிய ஷேத்தலம் அஷ்ட
19. திக்கு பாலகர் சந்திராதித்தா பூசை பண்ணிய ஷேத்த
20. லமாயுடைத்தாகிய தனியுரு திருவண்ணாமலை யென்
21. னும் பெயரினையும் ஆதி அருபமாகிய சிதமாயி மத்திய
22. பூதமான தெய்வ ரூபமான பருவதராசன் புத்திரி ஆதி
23. ய யீசுபரிக்கி அர்த்த பாகம் அளித்த ஷேத்தலம் துர்க்
24. கைநாயகி அம்மன் மயிடாசுரனை வென்று படிக்கு
25. லிங்கம் எடுத்து யீஸ்பரிக்கி அளித்த ஷேத்தலம் வச்சிராங்
26. கித பாண்டியனுக்கு அனுக்கிறகம் பண்ணிய ஷேத்த
27. லம் நவாசபதிலே யாவதும் கைலாசமிலே யாவதும் ம
28. ஸப்தூறுவமாக அருணாசல மென்றும் நினைக்க முத்தி
29. தருவோமென்று அபைய அஸ்தம் காட்டிய திருக்கார்
30. த்திகை தீபாறத்தினையில் தெரிசனம் பண்ணின ஏ
31 ன்பத்து னாங்கு லக்ஷசம் யோனி பேதமான சீவரா
32. சிகளுக்கும் மோக்ஷசம் குடுக்கப்பட்ட ஷேத்தலம் சாலி
33. யவாகன சம்வத்சரத்தும் துருாசுபிச ௪ வருஷத்து
34. க்கு மேல் செல்லா நின்ற செய ஸுப பிறட்டாசி ஸ்ரீ ரு வ
35. ரோகிணி நக்ஷத்திரம் சதுர்த்தெசி சொக்கிறவார னாள் ஸ்ரீ
36. ருகாஞ்சிபுரம் யேகாம்பரநாதர் திருக்கோட்டு மகா
37. ரிஷி தேவி தேவர் யிருவர் காமாக்ஷி கமலைபதி காமா
38. க்ஷி சிவத்திவாய வந்த கன்னாலத்தார் திருக்கோட்டு கரு
39. வளைகள குலதத்துபார்ந்தோர் திருக்கோட்டு ம
40. காரிஷி திருத்தொண்டையில் பிறந்தோர சமைய ஒரு

41. லாகவன் சங்கீத லோலா சமைய உத்தநன்டா சமை

42. ய தும்ம பிறமத்தார் சமைய ளாளியனச் சமைய கோ

43. லாகலா உத்தமற்கள் உச்சித வீரப்பன்னர் சதுபதுரி

44. ச்சந்திரன் அவதாரக் குடையிலும் கனக்கிலும் வெத்தி

45. லும் டெரிஸ்டியார் துரைமுடைய மனையதுயிரிய தேவனுகா

பின் பக்கம்

46. தேவனி சேசர சமையத்தோர் கண்ட கணக்கத்தார் மாலை

47. மார்பர் சிங்க கொடித்தலைவர் யொக்காளி பட்டவர்

48. த்தனர் குஞ்சரம் வெள்ளை ஷ் ராயசமுக்கம் வெள்

49. , ளவா சக்கரைக் கோட்டை கெவிச்சவர் வெள்ளை

50. வட்டக்குடை வெண்ங்கரி வெண்ங் கொடி வெள்ளை வெ

51. ஞ் சாமரம் விசைய கோலாகலர் தக்கருட்டி ஆல

52. வட்டம் பகல் தீவட்டி பஞ்சவிருது விருதுகள் பிடித்தவர்

53. மது பானை பாம் பானை ஆனதும் மாட்டுத் தலை மான்
தலை

54. ஆனதும் திருக்காஞ்சிபுரம் காமாச்சி அம்மன் வரப்பிரசா

55. தத்தினால் வந்த மூம்முடியவன வழமையவா வரசிவன்

56. கெஞ்சி வங்கிஷவன் மக்கிடயன் சொறுபவன் எடு

57. க்கயடன் தரிச்சவன் வைசிறயன் குதிரை வல்லவன்

58. தவிளையவன் நெட்டையவன் கவிலயன் தொலவன்

59. வெவிலங்கிஷவன் யககவன்னாந் தவன் பவித்யவ

60. ன் கெந்தியவன் வருமயவன் சொறுகவன் கோட்டை

61. யவன் குரியவன் கெடிகிரியவன் யிவர்கள் யிரு

62. வதுனாலு மனையார் பூலோக யபிலாசம் திருவண்ணா

63. மலை அறுணாசலீஷ்டரர் உண்ணாமுலை அம்மை

64. சன்னிதானத்திலே யிருபத்து னாலு மனையபர்

65. நெலுபகா தற்ம மடம் ஷருதவாணம் இயிதுதற்ம

66. மாகளுக்கு ளார்க்கள் அனைவரும் கூடி வசந்தராய

67. பண்டாரத்தை திறளையும் பண்ணி வச்சோம்

68. யிதுக்கு மடம் நந்தவானம் உள்பட தலைக்கட்டு

69. ஒன்றுக்கு ஸ்ரீ பணம் ௨ கலியாணத்துக்கு முகுற்த்த

70. ம் ஒன்றுக்கு பணம் ௨ பொதி ஒன்றுக்கு அன்றுகால்

71. படி ௳ மகமை பணம் அரைக்கால் ௳ செட்டியாற்கு பொதி

72. ஒன்றுக்கு ௨ பணம் மா ௳ கலியாணத்துக்கு பணம் ௧ ௨

73. சங்கீதக்காறனுக்கு கலியாணத்துக்கு பணம் ௧ ௳ கட்டு காணி

74. க்கை பணம் ௧௨ மாணிக்கத்தாளுக்கு கலியாணத்துக்கு பணம்
௧ ௨

75. விடுதி மாணிக்கத்தாளுக்கு கலியாணத்துக்கு பணம் அரை
௳

76. பொதி ஒன்றுக்கு அன்று காப்படி யிந்த படிக்கி

77. ஞாலு சமுத்திரம் உள்பட யிருக்கப்பட்ட யிருவத்துனா

78. டு மனையாரும் சந்திர சூரியாள் உளமட்டுக்கும்

79. தற்மம் பண்ணிகுடுத்தது யிதுக்கு ஆதாமொருத்தர்

80. கண்ணாலே பாத்து காதினாலே கேட்டு யிந்த தற்மத்து

81. க்கு யாதமொருத்தர் ஆத்தா குத்தம் ஆகாத்தியம் பண்ணி

82. னால் காசியிலே கெங்கைக் கரையிலே காறாம் பசுவை

83. கழுத்தறுத்த பாவத்திலேப் போகவும் கோவத்தி பிறம

84. மத்தி செய்த பாவத்திலே போக கடவேனாகவும் அன்

85. னாமலையார் உண்ணாமுலை அம்மன் துணை ஆகவும்

86. உ யிந்ததற்மம் நடபிககுவார்கள் புத்திர கோத்திரமாயி

87. யிருக்க வேணும் சிவமயம் உ ராம செயம் உ உ உ

88. யிந்ததற்மம் நம்ப வயிசிய மனை க்கு செட்டியாறாகிய வம்மிடு
ஜோ

89. த்திரம் அண்ணாமலை செட்டியார் வசம் ஒப்பிச்சோம் அவக
ளி

90. ந்த தற்ம விசாரணை பாறக்குறது அவருக்கு வாத்தினை
பணமு

91. ம் அன்றுபடியும் வெகுமதியும் நடபிக்குறதுக்கு செயம்.



திருவண்ணாமலைச் செப்பேடு முன்பக்கம்



திருஞானசம்பந்தனை [illegible] [illegible]

# 33. சேடப்பட்டி செப்பேடு

*அம்பலக்காரர் மடம் ஏற்படுத்தி அதன் பண்டாரத்துக்குக் கொடுத்த பட்டயம்*

இச்செப்பேடு மதுரை மாவட்டம் சேடப்பட்டியில் உள்ள அம்பலகாரர் மடத்தில் உள்ளது.

32 x 10.5 செ.மீ அளவும் 626 கிராம் எடையும் உள்ளது. செப்பேட்டின் மேல்பகுதி மூன்று வளைவுகள் உடைய இதழமைப்பும் நடுவிதழில் துளையுமுள்ளன. முன்பக்கம் செப்பேடு ஐந்து கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதனில் புடைப்புச் சிற்பங்கள் வார்க்கப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் தொடங்கி 19 வரிகளும் உருவங்கள் இட மின்மையால் மீண்டும் முன்பக்கத்தில் உருவங்களிடையே 9 வரிகளுமாக வாசகம் 28 வரிகளில் உள்ளது. மேலும் இடமின்மையால் செப்பேடு முற்றுப்பெறவில்லை.

முன்புறம் உள்ள உருவங்களின் விபரம் முதற் கட்டத்தில் சூரியர் சந்திரன் உருவங்களின் இடையே இடம்புரி விநாயகர் உருவம் உள்ளது. இரண்டாவது கட்டத்தில் வலது பகுதியில் மயில் மீதமர்ந்த முருகன் உருவமும், இடது புறத்தில் பத்மாசன மிட்டு அமர்ந்த தேவியின் உருவமும் அதன் கீழ் காளாஞ்சி, பணிக்கம் முதலிய பரிகலன்கள் உள்ளன. மூன்றாவது கட்டத்தில் குதிரையின் மீது வீசும் நிலையில் ஈட்டியுடன் விரைந்து செல்லும் மன்னன் உருவமும். அதன்பின் பணியாள் இடையில் வளைதடியுடன் மன்னனுக்கு குடை பிடித்த நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. நான்காவது கட்டத்தில் வீரன் இடுப்பிலும் வலது கரத்திலும் வளைதடி கொண்டும் இடதுகையில் வீசும் நிலையில் ஈட்டிகொண்டும் காட்டப்பட்டுள்ளான். அவனது பின்புரம் ஒருவீரனும் முன்னதாக வளைதடிகள் இரண்டு பறந்துவரும்

---

கல்வெட்டு இதழ் எண்.49 தாது ஆண்டு தை-மாசித் திங்கள் (1997 ஜனவரித் திங்கள்) பக்.27-30. 'சேடப்பட்டி செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு. மா. சந்திரமூர்த்தி. பதிவு அலுவலர். சென்னை

நிலையிலும் உள்ளன. ஐந்தாவது கட்டத்தில் இருகாளைகள் பூட்டிய ஏர்கொண்டு உழும் உழவனின் உருவம் உள்ளது.

செப்பேட்டில் கலிவருடம் 4788ந் (கி.பி.1687) தமிழ் வருடம் 'யுவ' (கி.பி.1595) வும் உள்ளன. ஒன்றுக்கொன்று பொருந்தி வராத நிலையில் இச்செப்பேடு கி.பி.17ஆம் நூற்றாண்டின் இறுதியில் வார்த்து எழுத்துப் பொறிக்கப்பட்டது எனலாம்.

நெடுங்குள நாட்டு ஆலங்குளமான பெரியகுளத்தைச் சேர்ந்த தாமரைக்குளம், சேடப்பட்டி, மேல்மங்கலம், வடுகர்பட்டி, அழகிரி நாயக்கன்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள காத்தான அம்பலம், தம்பான் அம்பலம், குஞ்சாய அம்பலம் ஆகியோர் வழிவந்தவர்கள் ஒன்று கூடி மடம் ஒன்று ஏற்படுத்தினர். அம்மடத்தலைவராக பாணி பார்த்திப அரையன் மகன் சங்கரமூர்த்தியைய அமர்த்தி அவருக்கு வருவாயாக விரத்தனை தானியம், ஏழு கலம், கலியாணம் ஒன்றுக்கு நாலுபடி அரிசி, அவ்வூர்க் குடிக்கு மூன்று பணம் ஆகியவை வழங்குவதாகப் பட்டயம் எழுதிக் கொடுத்துள்ளனர். செப்பேட்டின் முதல் 12 வரிகளில் அம்பலக்காரரின் சிறப்பு சொல்லப்பட்டுள்ளது.

## செப்பேடு

### பின் பக்கம்

1. கபந்திசிந்திமன் தாலிக்கு வேலி தளந்தவர் தாபரம் அஞ்சனங் காற்கும் அடை
2. கவங் கர்த்தான் செங்காவிக் கொடியுடையோன் காவிக் குடையுடையே
3. ான் காவிச் சிவிகையுடையோன் அரவணியரனார் ஏகத்தில் வேர்வை கரமது
4. வாங்கி காசி மேலுட விலவணிசசடை புன்னாணித்த புத்திரராகிய ச
5. ங்கு சேர்படை வெண்சாமரையுடன் துலங்க பிலர் கருடபமாய் வந்த வ
6. ரிகம் மிகத தோன்றி மிலமுகிலெனுங் கச்சியர் நகரி வாவெல்ராகிய காவவு

7. ரீட்டிக்கு மாலை யெதுத்தே யிட்டவர் மட்டில்லாச சேனையை சோட்

8. டையாய் வென்றவர் வேளூம் பரிபிமிகுந்திடு மூன்னாள் சோழனை

9. அன்று துலங்கக் கட்டி முறைப்பாடு வெட்டி மூறியக் குத்தி பிற்பாடு வெ

10. ட்டிப் பேர் பாடிய தராகரவனை புதூரம் படையற வெட்டும் தரவிட்டிகமுள்ள சதுர

11. ய வீரர் வெள்ளைக் குடைக்கும் வெண் சாமரைக்கும் கள்ளவே வாய்த்த பெருமான் வா

12. ழி வாழி வையகம் வாழி ஊழிகாலம் உகந்திட வாழியே என்ற கவியுக சகார்த்தம் சது

13. எாஅபிஅ ன் மேல் செல்லா நின்ற யுடஹீற் அனி மீ யரு உ நெடுங்குள நாட்டாலங்குளமா

14. ன பெரியகுளத்திற் சேர்ந்த தாமரைகுளம் சேடர்பட்டி மேல்மங்கலம் வடுகர்பட்

15. டி அழகிரிநாயக்கன்பட்டி இவடத்திலுண்டாகிய அம்பலகாறரில் காத்தாளம்பலகாற

15. ன் தாம்பாள(ா)ம்பலகாறன் குஞ்சாயம் பலகாறன் காரனம்பலகாறன் இவர்கள் மு

17. ண்டாகிய உறவின்முறை பலவனா அம்பலகாறனை யோரும் இசை சம்மதமாய் மடவார்ளைபி

18. முண்டு செப்பது பாணி பார்த்திபவனரைய வைர்கள்ப் புத்திரன் சங்கரமூர்த்திப் பண்டாரத்து

19. க்குப பட்டையங் கொடுத்தபடி இற்றைநாளிந்த மடபதிக்கு வருத்தினை எருக

முன்பக்கம்

20. றவசய க ஹேப அன்னிக்குடிக்கு ரூ பணமும் கலிபா

21. ளைத்துக்கு னாலு படிபரிசியுமென்று

22. உறவின் முறையாரனைவே

23. ாருங் கூடி கையெழுத்திட்டு பட்டையமு

24. குடுத்தோம அருகப்ப

25. டுக்கு யாருதி கொலைகு மடவாளையும்

26. ஙளம் பண்ணிக் கொண்டு சுகதிலே

27. இருக்கவும் இந்தத் தன்மத்துக்கு யா

28. நாமொருவனுகுதம் நினைச்ச பெயர் கெங்கை*

* செப்பேடு முற்றுப்பெறவில்லை



சேடப்பட்டி செப்பேடு

# 34. ஆழ்வார் பேட்டை செப்பேடு -1

*பஞ்சவாத்யக்காரரின் தலைவருக்கு மரியாதைச் சிறப்புக்கள்*

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள திருமதி விஜி விஜயராகவன் சேகரிப்பில் உள்ளது.

33x16 செ.மீ அளவும் 790 கிராம் எடையும் உள்ளது. முன்பக்கத்தில் 5.5.செ.மீ அளவு வரை கோட்டுருவமாகச் சிவலிங்கம் அதன் முன்னதாக தீபம் ஒரு கையிலும் மணி ஒருகையிலும் கொண்டு வழிபாடு செய்யும் அர்ச்சகர். அவரது பின்புறமாக ஐந்து வகை இசைக்கருவிகளான தோல்கருவி, துளைக்கருவி, மிடற்றுக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி ஆகியவை கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டின் ஒரு சிறு பகுதி உடைந்துள்ளது.

இச் செப்பேட்டில் சக வருடம் 1655 (கி.பி.1733) கொல்லம் 908 (கி.பி.1732-33) தமிழ் வருடம் பிரமாதீச (கி.பி.1733) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. அரசர் பெயர் ஏதுமில்லை. இச்செப்பேடு கி.பி.1733ல் வழங்கப்பட்டது எனலாம்.

செப்பேட்டில் முள்ளிநாடு, பாபநாசம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. முள்ளிநாடு திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியாகும். பாபநாசம் அங்கு உள்ள நீர்வீழ்ச்சிக்குப் பெயர் பெற்ற இடமாகும். கொல்லம் ஆண்டு குறிப்பிடும் மரபு தென்பாண்டி நாட்டு மரபாகும்.

பாபநாசம் இறைவன் முன்பாக நாலு திசையைச் சேர்ந்த நாகபாசத்தார் ஆகிய பஞ்சவாத்யக்காரர்கள் அனைவரும் கூடி வழிபட வந்தோர், தலத்தார், ஸ்தானத்தார், தலைவர்கள் முன்னிலையில

---

கல்வெட்டு இதழ் 60-61, சுபானு ஆண்டு ஆனித்திங்கள் 2003 ஏப்ரல் பக்கம் 38-4; "நாலுமுகநாக பாசத்தார் செப்பேடு" என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திருமா. சந்திரமூர்த்தி, துணை இயக்குநர், சென்னை.

அத்தாளநல்லூரைச்சேர்ந்த மாதவன் பிள்ளை மகன் வீரபத்ர விநோதியார்க்கு 'நாகபாசநரலங்கராயன்' என்ற பட்டம் கொடுத்துச் சிறப்பித்துள்ளனர். பெரிய ஊர்களில் உள்ள நாக பாசத்தார் வருடந்தோறும் பத்து பணமும் சிறிய ஊர்களில் உள்ளோர் ஐந்து பணமும். தங்களிடையே நிகழும் கலியாணங்களுக்கு ஒரு பணமும். பிற சில சலுகைகளும் கொடுப்பதாக முடிவு செய்து இச்செப்புப் பட்டயம் பாபநாசம் இறைவன் சன்னதியில் எழுதிக் கொடுத்துள்ளனர்.

பஞ்சமா சப்தமான கருவிகள் என்று முன்சொன்ன ஐந்து வாத்தியக் கருவிகளும் இச்செப்பேட்டில் பெயர் குறிப்பிடப்படுகின்றன.

## செப்பேடு வாசகம்

1. சுபமெஸ்தீற்றி சுபத்திறி சாலிவாகன சகாத்தம் ரு
2. ருயரு-ன் மேல் செல்லா நின்ற கொல்லம் நூஅக்கு பிறமாதிட்
3. சத ஷூடுப உத்திராயனத்தில் வசந்திருதுவாவ சித்திரைமா
4. தம் சுட பூறுவ பட்சத்தில் திறிதிகையும் சுக்கிற வாரமு
5. ம் ரோகிணி நட்செத்திரமும் சுபயோக சுபகரணமும்
6. பெற்ற இற்றனாள் செய்த நாகபாசத்தார் சாதன
7. மாவது முள்ளிநாட்டு அத்தாளநல்லூரிலிருக்
8. கும் மாதவன் பிள்ளை மகன் வீரபத்திர விநோதியாருக்
9. கு நாலு முகத்திலே யிருக்கிற நாகபாசத்தாரும்
10. சாதனம் யெளுதிக் குடுத்த பரிசாவது இற்றனாள் பா
11. வநாசத்திலே கத்தாக்கள் எளுந்தருளியிருக்கிற
12. போது நாலு முகத்திலே நாகபாசத்தாரும் கத்தா
13. க்கள் எபிளவாரு சுவாமியைக் காணவந்த பெரும் கத்
14. தாககூரு சுமுகத்திலே காத்திருக்கிற நாகபாசத்தாரும் சகல
15. ருங் கூடி பாவனாச சுவாமி சன்னிதானத்திலே தான
16. த்தார் தலத்தார் முன்பாக வீரபத்திர விநோதியார் நொளி
17. லும் பார்த்து பஞ்சமா சத்தமான தோற்க் கருவி துளைக்கரு
18. வி மிடற்றுக் கருவி நரம்புக் கருவி கஞ்சக் கருவிக்குளப்பட்ட

19. நாக பாசத்தாரும் நாகபாச நரலங்கராயனென்றுப பேரும

20. குடுத்து பட்டம் தரிபட்டமும் கட்டி வெகுமானமும் பண்ணிவி

21. த்து கொளிசம் போடுவிக்க பட்டனப் பிரவேசமும் பண்ணி

22. விக்க பேரூர் நாகபாசத்தார வருஷத்துக்குப் பத்துப் பத்து

பண

23. மும் சிற்றூர் நாகபாசத்தார் வருஷத்துக்கு அஞ்சுபணமும்

24. நாகபாசத்தார் கலி கலியாணத்துக்கு ஒரு பண. . .

25. ன்னுக்கு ஒரு பணமும் பேர் கொண்ட. . .

26. மாணிக்க பிரண்டு பணமும் மற்றபாக. . .

27. கு ஒரு பணமும் அரங்கேத்தத்துக்கு . .

28. ணமும் பேர் குடுத்த போது ஒரு. . . .

29. வந்திருந்த வானளக்கு வரா. . .

30. க்கும் சாப்பாடு பாக்கு வெற்றிலையும் இந்த

31. ப்படிக்கு நாகபாசத்தார் சகலரும் கூடி பா

32. வனாசத்திலே பட்டையம் எழுதி குடுக்க கட்

33. டளையிட்டோம் நாகபாச நரலங் கராயனு

34. க்கு இந்தப் படிக்கு பஞ்சமா சத்தமான தே

35. ாற்க் கருவி துளைக் கருவி மிடற்றுக் கருவி

36. நரம்புக் கருவி கஞசக் கருவிக்குள்ப் பட்ட

37. நாகபாசத்தாரும பாத்திரபேணங்கமு

38. ம் அபிமானிச்சுக் கொண்டு மாதா பிதாக் குருவு

39. க்கு புண்ணியமாக தியாகம் குடுத்து வருவாராகவு

40. ம் இந்தக் காரியத்துக்கு விக்கினம் பண்ணினவர்கள்

41. கெங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்ற

42. தோசத்திலே சிரிசத்தி பிறமசத்தி பண்ணின தோ

43. சத்திலே போவாராகவும் இந்த காரியத்து

44. க்கு அனுகூலம் பண்ணினபேர் அசுவமே

45. த யாகம் பண்ணின பலத்தை யடைவாராகவும் இந்

46. தப் படிக்கு வடமுகம தென்முகம் கீள்முகம் மேல்

47. முகம் நாலுமுகத்திலே யிருக்கிற நாகபாசத்தாரு

48. ம் தானத்தார் தலத்தார் சகலரும் சுத்தாக்கள் மு

49. ன்பாக சொல்ல இந்தப் பட்டையம் எழுதினே

50. ன் கலியுகத்து மெய்ய வாத்தியார் மகன் சொக்க

51. னாதன் எழுத்து உ பாபனாச்சுவாமி உலகம்மை

52. துணை ஈட.

---

செப்பேட்டின், வலது கீழ்ப்பகுதி சற்றே உடைந்துள்ளது. எனவே அவ்வரிகள் புள்ளியிடப்பட்டுள்ளன.

# 35. கோடியக்காடு செப்பேடு

*பூசைக்காணி, தேவதானம், தேவர்பணி உரிமைகள் கொடுத்தது*

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் கோடியக்காட்டில் உள்ள திரு டி.ஆர் ஆர்.வி. சாமி என்ற திரு வேதநாயகம் முதலியாரிடம் இச்செப்பேடு உள்ளது.

20 x 33 செ.மீ அளவுடைய இச்செப்பேட்டில் முன்பக்கம் 46 வரிகளும் பின்பக்கம் 39 வரிகளுமாக 85 வரிகளில் வாசகம் உள்ளது.

செப்பேட்டில் சகவருடம் 1208 (கி.பி.1286) கலி ஆண்டு 4374 (கி.பி.1273) தமிழ் வருடம் 'ஜய' ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. கோயில் திருப்பணி செய்ததாகப் பொதுவாக ஸ்ரீராஜராஜேந்திர சோழ ராஜாக்கள் குறிப்பிடப்படுவது தவிர செப்பேட்டின் காலத்திய மன்னர் பெயர் இல்லை. செப்பேட்டின் எழுத்தமைதி 18ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம். இந்நூற்றாண்டில் 'ஜய' வருடம் 1714 மற்றும் 1774 ல் வருகிறது. இவ்விரு ஆண்டுகளில் ஒன்றாக இச்செப்பேட்டின் காலத்தைச் சொல்லலாம்.

இச்செப்பேடு திருக்காளஹஸ்தியைச் சேர்ந்த சைவசிகாமணியான வயிரவநம்பியா பிள்ளை பொன்னம்பியார்க்கு திருவாசி என்ற கிராமமும் திருக்கோகேஸ்வரர் கொழுந்த கோயில பூசை உரிமையும், தேவதானம், தேவர பணிகளும ஆக்கோயில் ஆதிசவண்டேஸ்வரா பெயரால் பட்டயமாகக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது. ஆதிசேது மடத்து முதலிகள், மாகேஸ்வரர், கோயிலார்,

---

கல்வெட்டு இதழ் எண்.47. தாது ஆண்டு ஆனி - ஆடித்திங்கள் 1996 ஜூலைத் திங்கள் பக்கம் 16. 'கோடியக்காடு செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர் திரு நடன காசிநாதன் இயக்குநர். தொல்பொருள் ஆய்வுத்துறை சேகரித்தவர் திரு. ஆர். நாராயணன் இளநிலை பொறியாளர் தஞ்சாவூர்.

அரசினர் ராசகரம். அஞ்சுதேசத்து பரிகல சனங்கள் ஆகியோர் கோடீஸ்வரர் கோயிலில் கூடி எடுத்த முடிவாக இவ்வுரிமை சொல்லப் படுகிறது. கடற்கரைப் பகுதி ஆதலால் தீவுகள் திட்டுகள் உப்பளங்கள் சேதுசாலை சேதுமடம் முதலியவை சொல்லப்படுகின்றன.

## செப்பேடு

1. ஸ்வஸ்தி ஸ்ரீசாலிவாகன சகாப்தம் 1208 கலியுகாத்தம் 4374 இதின்மேல் செல்ல
2. ா நின்ற ஜய ஸ்ரீ வருஷமாகிய ஐப்பசி மாதம் 16உ பூர்வபக்ஷத்து ஆதிவாரமும் த்ரி
3. தியையும் ரேவதி நக்ஷத்திரமும் பெத்த புண்ணிய தினத்திலே ஸ்ரீராஜராஜேந்த்ர சே
4. ாழராஜாகள் சுபஸ்ரீ சக்ரவத்திகள் திருப்பணி கொண்டருளிய ஸ்வ
5. ஸ்திஸ்ரீ திருகோடீச்சுரக் கொழுக கோவில் ஆதிசண்டேசுர
6. தேவர் திருவாயி மலருந்தருளிட்ட செயிதபடித் திரு ஆதி சேது
7. மடத்து முதலிகளும் மாகேசுரரும் தானத்தாரும் ராசகர
8. மும் அஞ்சு தேசத்து பரிகல செனங்களும் திறைவற நிறைந்து கு
9. றைவரக் கூடி ஆதிசேது கோடீசுரசுவாமி சன்னி
10. தியில் தீர்த்த மண்டபத்திலேக் கூடி இருந்து
11. திருவாசி கிறாமம் சைவரில் அளித்த திருக்கான
12. ஹஸ்தி னாஉடைய சைவாராயார் சைலேத்
13. திர சைவ சிகாமணி ஆகிய லஷித்ரர் அதிகா
14. ரி கௌதம கோத்திரர் ஆகிய வயிரவ நம்பி
15. பரா பிள்ளை பொன்னம்பலருக்கு
16. உதக தாரா பூர்வமாக பண்ணிக்குடு
17. த்த திருவாசிக் கிறாமத்துக்கு திருமுகப் ப
18. ட்டையம் தாங்கலித்து தாங்கள் இதுவரை
19. ரையும் தரணி முழுதுடைய உம்ப வளனா

20. ட்டு குன்னூர் னாட்டு சுவாமியார் திருக்கோ
21. மகரன் கொழுகோவிலுடைய னாயனார்
22. கோவிலில எங்களிநாய பூசைக் காணியு
23. ம் தேவதான தேவகற்பமும் தங்களுக்குக் கட்டளை
24. யிட்டபடியினாலேத் திருக்காமிநம்பி முன்னாள்
25. படிக்கி ராட்டுகேசடந்த மூனுவட்டத்து பூசை காணிய்
26. யி தமக்கு தானபூறுவமாக குடுத்தபடியினாலே கொந்து
27. க்கு நடந்து வரும்படி ஆலையத்துக்கு மேற்கு னாற் கோல்
28. லைக்கு உள்ப்பட்ட நிலமும் தீவுதிட்டுக்களும் கொ
29. முக கோவிலுக்கு காற்புவனத்தில் ஆலையத்துக்கு தெ
30. க்கு சேதுசாலைக்கு மேற்க்கு காத்தானோடை வய்க்கா
31. லுக்கு வடக்கு மேற்க்கு அஞ்சதாட்சி பெண்பிள்ளை
32. திடலுக்கு கெழக்கு வடக்கு அய்யனார் கோவில் கன்ன
33. திக்கு தெக்கு னாங்கெல்லைக்கு உள்ப்பட்ட நிலமும்
34. தோப்பு துரவும் இதின் மேற்க்கு சிறுதலைக்காட்டுத் தீவும்
35. முதலாகிய அளந்தி குள பலதீவும் இதின் கிழக்கு சீராய
36. ன் தீவும் இதின் வடக்கு கொழுகர் கட்டளை நிலமும் தே
37. ாட்டத் துரவும் இந்தக் கிறாமங்களில் உள்பட்ட நஞ்சை
38. ச பிஞ்சை நிலமும் தோட்ட தொரவும் அரமனை ரொ
39. க்க மோகினி னூறு பொன்னும் உக்கல மோகின
40. னி அஞ்சு பொன்னும் ஆகனூத்தைபது பொன்
41. மோகினியும் நிலமோகினியும் தாமே அனுப
42. வித்துக் கொண்டு முன்னாள் னாங்கள் ஆண்டு நடத்
43. தி வந்தபடிக்கி கோழுவிலுத்துறை சேதுராயர் முத
44. லியார் கணக்குபடிக்கு மோகினி திட்டம் நடப
45. ப்பிறதுக கொண்டுக் கொத்துக் குண்டாகிய பரிகல
46. செலவுகளையும் முன்னாட்படிக்கு நடப்பிதது கொ

பின்பக்கம்

47. ண்டு இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணிக் கொண்டு சந்தி

48. நாதித்திய வைரயும் ஆண்டு அநுபவித்துக் கொண்டு சுகத்தி
49. லே இருக்க கடவறாகவும் நம்பியாருககு மனை மானியம் ராசகரமும்
50. நாங்களும் பண்ணிக் குடுத்தபடிக்கி காத்புவனமாகிய செள
51. பூசர் கோவிலில் முன் திருக்காமி நம்பி மனை மானிகையும் அ
52. ா சந்திக் காளமும் ஆலைய[ய]த்துக்கு தெற்கு அஞ்சு வேலி நிலமும் சறுவ
53. மானியமும் அவ்மானியத்துக்கு எல்லை ஆவன சன்னதி சாலைக்கு தெ
54. ற்கு கோனான்னோடைக்கு மேற்கு காத்தானோடை வடக்காலுக்கு வடக்கு சேது
55. சாலைக்கு கிழக்கு னாங்கெல்லைக்கு உள்ப்பட்ட நிலம் நஞ்சையி பிஞ்சையி நில
56. மும் மேல்நோக்கிய மரமும் கீனோக்கிய குளமும் அனுபவித்துக் கொண்
57. டு கோவில் பூசைக்கு கும்ப றெத்தினம் சொறுன புழ்ப்பம் முதலான
58. சாறுவ சுவந்திரமும் சம்வரிசி உண்டாவது எட்டு லொரு பங்கும் சமயல்
59. அன்னை முதலான சகலத்துக்கும் மூனுலொரு பங்கும் பத்திக் கொண்டு ஸவஸ்தி
60. ஸ்ரீ பெத்துமா பூறுமா [குமாரமபாதம்] பூசைக்கு மோகின ஆன நிலமானியம்
61. கழுக்கு சீராமன் திவு னாங்கொல்லைக்கு உள்ப்பட்ட நிலம் வேலி ரு இந்த மூனு
62. வேலி நிலமும் அனுபவித்துக் கொண்டு ஸ்ரீகுழி காவிதம ராம பாதக்துக்கு
63. பூசை பண்ணிக்கொண்டு அதில் உண்டாகிய வாடங்களும் [ராமபாத]
64. தேவராகிய பவிதெனிக கோவில்களும் அதுகள் உண்டாகிய [வாடங்]

65. களும் அனுபவித்துக்கொண்டு புத்திர பவுத்திர பாரம்பரியமாக சந்திராதி

66. த்தவரையும் செல்லச் சறுவமானியமாக அனுபவித்துக் கொண்டு இரு

67. த காணிப்பிடித்தனாகி வித்து ஒதத்துலக்க ஆண்டு அனுபவித்துக் கொ

68. ள்ளக் கடவராகவும் பூசைக்கு வேண்டியபடிக்கு உண்டானது திருமுத

69. ல் புத்திக் கொண்டு பூசை பண்ணி கொண்டு சுகத்திலே இருக்க கடவ

70. ராகவும் இந்த திருமுக பட்டையத்துக்கு எழுத்துக் குத்தம் வாசகப் பி

71. ழை எரிமறாட்டம் வெட்டுச் செதுக்கு சொலப்பட்ட எக்குத்த

72. மும் குத்தமென்று சொல்லக் கடவதல்ல இப்படிக்கி திருமுக

73. பட்டயம் எழுதி குடுத்தோம் பொன்னம்பியாருக்கு இந்த பட்ட

74. யத்துக்கு ஊலதலிகிதம் இந்த படிக்கி வயிரவ தம்பி வேளா

75. டியார் எழுத்து இந்தபடிக்கி பல்லவராயவாடியா இந்

76. தபடிக்கி திருக்காமி நம்பி எழுத்து இந்தபடிக்கு சிதம்பரனாதவே

77. ளா சித்தர் எழுத்து இந்தபடிக்கு கோவில் அதிகாரம் சேதுராமு மு

78. தலியார் எழுத்து இந்தபடிக்கு கங்கணம் ஆறு முகத்தா முதலிய

79. ார் எழுத்து இந்தபடிக்கி கோவில் கொத்து சங்கர பிள்ளை

80. எழுத்து இந்தபடிக்கி ஸ்ரீ கோம் வேதவனம் பூசை

81. (பூசை) குரியமூர்த்தி நம்பியார் எழுத்து இந்த பட்ட

82. டயம் எழுதினதுமைக்கு மேல்படி குழக கே

83. ாவில் சதாசிவர் கயில் முதல் எழுத்து இந்த திருமு

84. க பட்டயம் எழுதி முடிந்தது முத்தும் கோடி

85. விநாயகன் துணை உ



கோடியக்காடு செப்பேடு முன்பக்கம்



கோடிபக்காடு செப்பேடு பின்பக்கம்

# 36. நந்தனூர் செப்பேடு

*வேட்டுவர் - கவுண்டர் பட்டயம்*

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் நந்தனூர் கிராமம் திரு ப. திருமலைசாமி கவுண்டரிடம் இச்செப்பேடு உள்ளது.

27 x 10 செ.மீ அளவுடைய இச் செப்பேடு முன்பக்கம் 24 வரிகளும் பின்பக்கம் 27 வரிகளும் கொண்டுள்ளது. முற்றுப் பெறவில்லை. 'அஞ்சுர் பிரவேசம்' என்று இச்செப்பேடு தொடங்குகின்றது.

செப்பேட்டில் அடுத்தடுத்து மூன்று இடங்களில் ஏவிளம்பி. மன்மத. விசைய ஆகிய தமிழாண்டுகள் குறிக்கப்படுகின்றன. இச்செப்பேட்டின் காலம் கி.பி 18 ஆம் நூற்றாண்டு என எழுத்தமைதி கொண்டு முடிவு செய்தால் இவ்வாண்டுகள் முறையே கி.பி 1777. 1775. 1773 ஆகிய ஆண்டுகளில் வந்தவையாகும்.

அஞ்சுருக் கவுண்டர்கள் எனக் குறிப்பிட்டு ஆட்பெயர்கள் வேட்டுவன், கவுண்டன் என்ற பின்னொட்டுச் சொற்களுடன் கலந்து மாறி மாறி வருகின்றன.

செப்பேட்டின் நோக்கம் என்ன? என்பது தெளிவாக இல்லை. பல்வேறு பெயர்களில் நிலப் பெயர்களும் அவற்றின் அளவு ஏலை/ ஏலகுழி 1.2.3 என்ற எண்களில் ஒவ்வொரு திசையிலும் குறிக்கப்பட்டுள்ளன. ஒரு இடத்தில் 'எல்லை நிருமாணம் பண்ணித்தந்த படி' என்றும் மற்றொரு இடத்தில் 'மொஞ்சனூர் தஞ்சமநெல்லூர் எல்லைத்தொல்லை தீர்ந்த பிரகாரம்' என்றும் மற்றொரு இடத்தில் 'மூன்று

---

கல்வெட்டு இதழ் எண்.33 பிரஜோற்பத்தி ஆண்டு மாசித்திங்கள் 1992 பிப்ரவரித் திங்கள் பக. 13-19. 'நந்தனூர் செப்பேடு' என்ற தலைப்பில் கட்டுரையாக எழுதியவர்கள் திரு கோ. அர்ச்சுனன் காப்பாட்சியர் கரூர். திரு இரா. ஜெயராமன் இளநிலைக் கல்வெட்டாய்வாளர், தஞ்சை.

பேர்ருங்கூடி அவசர அவசரா நிமித்தியமாக வாங்கினது மூவாயிரம் பொன் வாங்கிக் கொண்டு' ..'சம்மதிச்சு விட்டகாணி' என்றும் சொற்றொடர்கள் உள்ளன.

## செப்பேடு

### முதல் பக்கம்

1. அஞ்சுகுரு பிரவேசம் - சேரன் சோளன் பாண்டியன் செட்டி சிவப்பிராமனன் காலத்திலே ஏர்விளம்
2. பி ஹ்ரீம் சித்திரை மீ உம் தேதி அஞ்சுகுரு கவுண்டர்கள் பாண்டி வேட்டுவன் சின்னபய்யக் கவுண்டன் நாசிய
3. கண்டி கவுண்டன் சம்மந்த நாராயண புல்ல வேட்டுவன் அர்துவ வேட்டுவன் சின்னைபய்யக் கவுண்டன் காசிய
4. ப்ப கவுண்டன் மோக்காளி வேடுவன் கூ கவுண்டன் முன்னை வேடுவன் அல்லாளிக் கவுண்டன் பூ
5. துக்கு எல்லை கொல்லைச் சாளை எடப்பாழி கிளக்கு நெட்டு ஏனைக்குழி - உ பெரும்பரப்புக்கு மேர்கா
6. லே ஏனை குளி - க - அதுக்கு தெர்கே ஏனை குளி - க - அதுக்கு மேர்க்கு அனைதனோடே சேர்த்து அதுக்கு கிளக்கு வெங்
7. கம்புனோடே சேர்ந்து அந்த ஏனைக்குளிக்குத் தெற்கு ஆனைக் கல்லு - பாழிக்கு கிளக்கு அதுக்கு வடக்கு ஏனைக்குழி
8. உ - அதுக்கு கிளக்கு கருங்கல்லுலே ஏனைச்குளி - உ - அதுக்குத் தெர்க்கு கரும்பாரையிலே ஏனைக்குளி - க -
9. அதுக்கு தெர்காலே ஏனை குளி - க - கீள் பிரமதானத்து கீள்ம் - மேற்குபுரம் அஞ்சுகனோடே சேர்ந்து அ
10. துக்கு தெர்காலே ஏனை குளி - உ - அதுக்கு தெர்காலே மாவலிங்கம் பரப்புக்கு மோர்க்காலே ஏல குளி - - அதுக்கு
11. தெர்க்காலே ஏல குளி - உ - மேர்க்கு நெட்டு சம்பங்கனார்க்கு தெர்காலே ஏலகுளி - க - அதுக்கு மேர்காலே பண்ணிகல்லு
12. க்கி தெர்காலே பரப்பிலே ஏனை குளி - க - அதுக்கு மேர்கு மயிலாடி பாரையிலே ஏனை குழி - உ - அதுக்கு

13. மேல ஏல குளி - க - அதுக்கு மோர்காலே கரடிக் காட்டிலே ஏல குளி - உ - அதுக்கு மேர்க்காலே கிடாத்தலை பாளி

14. வெங்களத்து பள்ளம் ஏலை குளி - ரு - அதுக்கு மேற்கு யுமை காழி கோயிலுக்கு வடக்கு புரம் ஏல கு

15. ளி - கூ- அதுக்கு மேர்க்கு கன்னூலி சேந்தான் பாழியிலே ஏல குளி - உ - அதுக்கு மேர்கு புரச பாழியிலே

16. ஏல குளி - க - அதுக்கு மேர்க்காலே சென்னை கல்லுலே ஏலகுளி ந அதுக்கு மேர்க்கு நெட்டு வடக்குபிரம்

17. வெளுக்குப பாரையிலே ஏல குளி - க - அதுக்கு ஏளி பாளியிலே உல குளி - உ - அதுக்கு வடக்காட

18. கரட்டுக்கு மேற்கு உலகுளி - உ - அதுக்கு வடக்காலே குளி - உ - அதுக்கு வடக்குபுரம் கருங் கல்லுலே உல குளி - -

19. அதுக்கு கிளகரு நெட்டு ஏல குளி - உ - அதுக்கு கிளக்கு வெட்டப் பாரையிலே கல்லு காதும் போட்டிருந்து அதுக்கு கிளக்கு வெ

20. டி சரம்பாளியிலே ஏல குளி - உ - அதுக்கு கிளக்கு புரச பாளியிலே ஏல குளி - உ - அதுக்கு மூக்கு பாவியிலே ஏல குளி

21. உ சேரன் சோளன் பாண்டியன் செட்டி சிவபிராமனை் காலத்திலே அஞ்சூா கவுண்டரும் எல்லை தீருமாந

22. ம் பண்ணி தந்த படினாலே புல்லை வெள்ள மூன்மவயாரா ரெங்கக் கவுண்டன் வெம்பலூக் கவுண்டன்

23. செப்ப வேடுவன் யுத்துமலிங்க கவுண்டன் முளை வேடுவன் ராசாகவுண்டன் வடலூரு மாந்ன

24. த பளட வேடுவன வண்டி கவுண்டன் வெங்கல வாட்ட ஏல்வி காளத்தி கவுண்டன் குடைபூ

பின் பக்கம்

25. ர் புளரகிவா கவுண்டன் கிளங்க நாடுத் தவை கவுண்டன் புள்ளம் பூலாறி வேடுவன் சேகலராயன் வெங்

26. கிராமத்து சம்மந்த நாராயன புல்லை வேடுவன் காரைகுலம் சாமிநாத கவுண்டன் கூரை காளி கவுண்டன் கோல

27. ன் கோயில் சொன்னை வேடுவன் பதரை வேடுவன் முத்தூர் மணிய வேடுவன் அஞ்சூர் கூட்டு கல்வளை

28. கள்ள பிரவி பிள்ளை பிராமணன் மலையம்மன் கோவில அண்ணாமலைப் பண்டாரம் அம்மன் கோவில்

29. சின்ன செட்டி றோட்டகால பிரமசாரி நாரி துவி சமன் பரப்பிச் சாத்தான் சங்கிடுவான் தன்குலத்துபாயன்ம

30. ாட்டயான் சாமன் சாத்தான் அஞ்சூர் கவுண்டரும் எல்லை கொல்லை தீர்த்த பண்ணி கடதினக்கு யித்
திஜன பேரும் சா

31. ட்சி-சேரன் சோளன் பாண்டியன் காலத்திலே செட்டி சிவ பிராமணன் காலத்திலே மன்மத றேடு ஆவ

32. ணி ய்ீ உயிச தேதி செங்குடனாட்டுக்கு தெற்காம் ஏலகுளி-க-அதுக்கு தெற்கு ஏலகுளி-க-அதுக்கு தெற்கு ஏல குளி

33. -க-அதுக்கு தெற்கு ஏல குளி-உ-அதுக்கு தெற்கு புல்லை கல்லுலே ஏலகுளி ந அதுக்கு தெற்கு குளி-க-வழி

34. ரமண்டயிலே ஏலகுளி-ந-அதுக்கு மேற்கு மனலயிலே ஏலகுளி-உ-அதுக்கு தெற்கு ஏலகுளி-உ-அதுக்கு

35. மேற்கு நெட்றிலே ஏல குளி-உ-அதற்கு மேற்கு ஏல குளி-க- அதுக்கு தெற்கு வடக்கு நெட்றிலே ஏலகுளி- -அதுக்கு வடக்

36. கே ஏல குளி-க-தஞ்சம நெல்லூருக்கு மேற்கு புல்லைக்கல்லிலே ஏலகுளி-உ-அதுக்கு வடக்கு ஏல குளி-உ- அதுக்கு வட

37. க்கு ஏல குளி-க-அதுக்கு வடக்கு ஏலகுளி-உ-அதுக்கு வடக் காலே ஏலகுளி-க-பாப்பான் பரப்பிலே ஏலகுளி

38. - -வெம்ப வேடுவன் புத்தமலிங்க கவுண்டன் கீளார் வேடுவன் ஓட்கம கவுண்டன் வெங்காட்சி மே

39. வடுவன் கூடறாய கவுண்டன் சேரன் சோளன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்திலே

40. யிந்த மூன்று பேரும் கூடி மொஞ்சலூர் தஞ்சம நெல்லூர் எல்லை கொல்லை நீறுந்த பிரகாரம் யிதுக்கு சாட்சி

41. கொடந்தூர் மன்றாடி வேடுவன் ராச கவுண்டன் தென்னிலை கிராம மோக்காணி வேடுவன் சின்னா

42. கவுண்டன் காரவிளி புல்லை வேடுவன் சம்மந்தராய கவுண்டன மூந்தூர் மணியன் முத்த கவுண்டன்

43. மணிய வேடுவன் மணிய கவுண்டன் சாட்சி யித்தன பேர் கூடி யிதுக்கு கட்டு கல்லனை சிவப்பிராமண அ

44. ஏந்தயன் நல்ல ஆசாரி காளியான கோயிலொன் வெங்கிச்சி வேடுவன் கீனார் வேடுவன் வெம்

45. ப வேடுவன் யிந்த மூன்று பேர் வரகு திண்ணப் பெருங் குடியாற் மொளை வாங்கியப்ப கவுண்டன் தன

46. சு வெள்ளாழன் புறவிபுசு கவுண்டன் யிவர்கள் [ம]கயிலே யிந்த மூன்று பேருங் கூடி அவசர நியித்தி

47. யமாக வாங்கினது மூவாயிரம் பொன் வாங்கி கொண்டு யிது விஷபெரு நாட்டார் யார் சம்மதிச்

48. சு விட்ட காணி . . .

49. சேரன் சோளன் பாண்டியன் காலத்திலே செட்டி சிவ பிராமணன் காலத்திலே வி

50. ஜயா ஸ்ரீ வைய்யாசி மீ -யஅ தேதி காரவிளி எல்லை கொல்லையும் காழி கோவில்

51. க்கு மேற்கு ஏல குளி-உ-அதுக்கு தெற்கு ஏல குளி-ட- அதுக்கு தெற்கு ஏல குளி-க-அதுக்கு

(செப்பேடு முடிவு பெறவில்லை)

# 37. மானூர் செப்பேடு

*கோயில் வழிபாட்டுக்கு விசுவகர்ம ஆசாரிகள், பள்ளர், குடும்பர்/பள்ளரு கொடுத்தப்பட்டயம்*

இச்செப்பேடு விருதுநகர் மாவட்டம் திருச்சுழியல் வட்டம் நரிக்குடிக்கு அருகில் உள்ள மானூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குருக்களிடத்தில் உள்ளது.

முன்பக்கம் 51 வரிகளும் பின்பக்கம் 48 வரிகளும் ஆக 99 வரிகளில் செப்பேட்டு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

செப்பேட்டின் 84வது வரியில் சகவருடம் 1681 (கி.பி.1759) கலிவருடம் 4860 (கி.பி.1759) தமிழ் வருடம் பிரமாதி (கி.பி. 1759) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. மன்னர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மானூரில் வேலாயுதசாமியார் ஏற்படுத்திய சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அபிஷேகம், நெய்வேத்தியம், திருவிளக்கு, 16 உபசாரம் முதலிய வழிபாடுகள் தொடர்ந்து நடப்பதற்காகப் பலபகுதிகளில் உள்ள விசுவகர்ம ஆசாரிமார்களும், பலபகுதிகளில் உள்ள பள்ளருகளும் குடும்பர்களும் வருடந்தோறும் ஒவ்வொரு குடிக்கு 1 பணம் வீதம் கொடுப்பது என்று நிறைவேற்றிய தீர்மானம் இச்செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளது. இத்தீர்மானம் சிவெங்கை அகதாசாலைப் பிள்ளையார்கோயிலில் கூடி நிறைவேற்றப்பட்டது.

விசுவகர்மாக்களின் தோற்றம், வளர்ச்சி செயல்பாடுகளை குறிக்கும் புராணம் ஏறத்தாழ 60 வரிகளில் சொல்லப்பட்டுள்ளது. பல திசை, பலசாதி, பலகுழு ஆசாரிமார்கள், பள்ளருகள், குடும்பர்களும் தீர்மானம் நிறைவேற்றியமை குறித்துச் சொல்லப்பட்டுள்ளனர்.

---

இச்செப்பேட்டினை அறிந்து படியெடுத்து 'மானூர் பள்ளர் கம்மாளர்' செப்பேடு என்ற தலைப்பில் கட்டுரை வழங்கியவர் முனைவர் வெ. வேதாசலம் கல்வெட்டாய்வாளர் மதுரை.

செப்பேடு

முன் பக்கம்

1. சுபமஸ்து ஆதித்தனெங்கே அயன்மூவர் தாமெங்கே வேதச் சொல்லெங்கே ஷினைவெங்கே நீதிக்குள் முன்சொனாமெங்கே

2. வாமபுதாளெங்கே கன்னாளா கைகேயிகினால் உ பிரிதிவி யில்லாத காலத்தில் தண்ணீரில்லாத காலத்தில் வாயுவில்லாத காலத்தில்

3. அக்கினியில்லாத காலத்தில் ஆகாசமில்லாத காலத்தில் சந்திரனுஞ் சூரியனுமில்லாத காலத்தில் நட்செத்திரமுந் திதியும் வாரமும்

4. யோகமுங் கரணமுமில்லாத காலத்தில் பூவும் வாசமு மில்லாமல் ஆணும் பெண்ணு மில்லாமல் ஊணீ பெண்ணும ஆணுமில்லாமல்

5. ச்சறுவநசியமாய் நிராமயமான காலத்தில் ஆதிபிசவேசரன் அருபமாய் தோன்றினாதில் ஆரெனனில் அடிவிலும் முடிவிலும் அங்

6. கெகுநும் ஏகமாய் விடியும் உதையம்போல விளங்கியவாறு போலாகி விசுவேகரன் அருவ உருவமாய்த் தோன்றின காலத்தில் ச

7. ரூப விளக்கத்தில் உலகமெல்லாம் தோன்றி அதில் குருமை தோன்றி அதில் அக்கினி தோன்றி இதுரெண்டுங்கூடி இயக்கமான கா

8. லத்தில் நாதந்தோன்றி நாதத்தில் பிகவுந் தோன்றி அதில் ஓங்காரந் தோன்றி ஓங்காரத்தில் விந்துத் தோன்றி விந்துவால் ஆகாசந்

9. தோன்றி ஆகாசத்தில் அக்கினிதோன்றி அக்கினியில் அப்புத தோன்றி அப்புவினிடமாய் வாய்வுத் தோன்றி வாட்புனிடமாய்ப் பி.

10. ரிதிவி தோன்றி இபபடியான அஞ்சும் பிசுடபூசிய இவ்விடம் இந்த இவ்விடம் அஞ்சுக்கு மஞ்செழுத்து உண்டாகது இந்த அ

11. ஞ்செழுந்தும் நகாரம் மகாரம் சிகாரம் வகாரம யகாரம் உண்டாச்சது இந்த அஞ்செழுத்துக்கு முயிரெழுத்து யேதன்னில்

12. அ-இ-உ-எ-ஏ. யென்ற அஞ்சம் விசுவமாச்சுது விசுவந்தானே உருவெடுத்த திறம் யெப்படி யென்னில் நகாரமென்ற மண்ணும்

13. மகார மென்ற தண்ணீரும் சிகாரமென்ற தீயும் வகாரமென்ற வாய்வும் யகார மென்ற ஆகாசமுங்கூடி இந்தச் செகத்துக்கா

14. ச அஞ்சும் பஞ்சறத்த தவ்வியமாச்சுது அதில் விசுவப்பிரம்மா யுருவெடுத்துத்தார் பாசங்களுண்டாக்க வேணுமென்று நா

15. க கோணமாகிய பூமியிலே யெட்டுத்திக்குப் பதினாறு கோணமும் திட்டித்து இது நடுவே மயிலாக்கிரி மந்தாகிரி வடவிந்தகிரி

16. கயிலையங்கிரி நிடதகிரி இயம்கூடகிரி கந்தமாதனகிரி நீலகிரி இந்தக்கிரியெட்டும் திட்டித்து அட்டதிக்குப் பாலகாள் எட்டு

17. ப்பேரையும் திட்டித்து அனந்தன் வாசுகி தறகன் பறமன் குளிகன் சங்கன் சங்குபாலன் காற்கோடகனிப்படி அஷ்டமானாகங்களு

18. ந்திப்படித்து தானாகிய பிரம்மா விஷ்ணு ருத்திரன் மயேசரன் சதாசிவ மென்கிற அஞ்சும் பஞ்சாசாடசரத்திலடைந்த போது அய்வரும் மூ

19. லரானார்கள் மூவரில் ஆரென்னில் பிரம்மா விஷ்ணு ருத்திரன் இந்த மூன்றுபேரும் சூலம் போலுட லொன்றாய் காலொன்றாயக் கை

20. லொன்றாய்ச் சிரசொன்றா யுருவெடுத்தார்கள் அந்த வேளையிலே விஷ்ணுவானவர் ருத்திரனையும் பிரம்மாவையும் யெடுத்து முழுங்

21. கவேணுமென்று முழுங்கச்சே பிரமமா அகப்பட்டு ருத்திரா பிறம்பே போனார் பிர்மா விஷ்ணுவினுடைய உந்திபிலகப பட்டுக் கொண்டு

22. பத்து புகுந் திருவுந்திக் கமலத்திலிருந்து முதிரவிளைந்த முட்டைகருஞ்சு போலிருந்த பிரமதேவர் ஈசுவரனை நோக்கி வெகு

23. கால தவசு பண்ணினார் அப்போது ஈசுரன் பிரசித்தமாய்த் தோன்றி வாரும் பிரம்மாவே நமக்கும் உமக்கும் பூமியந்தர சொற்கத்துக்

24. மே குருவாகி யிருக்கிற ஆதிவிசுவ பிரம்மாவை நோக்கி தவசு செய்தால் அவர் கிருபையினாலே விமோசனம் வருமென்றார் அப்

25. படியே அவரைநோக்கித் தவசு செய்தார் அப்படியே விசுவபிரம்மாப் பிரசித்தமாய்த் தோன்றிச் சூரியனென்கிற கண்ணை

26. விளித்துப் பார்த்தார் பார்த்தவுடனே பிரம்மதேவரிருந்த தாமரை விரிந்து அப்போது ஒரு கருவி நேமிதநுத் தாமரை தன்னுடைய

27. றுமுகப்பண்ணிப் பிரம்மாவைப் பிறப்பித்து அந்த தாமரை நூலாலே யெக்கிய பவிதமும் மந்திர குறுளையும் பண்ணித் தி

28. ரித்த அவருக்கு விசுவப்பிரமமே நமாவென்ற உபதேசம் போதித்தார் அந்தப் பிரம்மாவானவர் விசுவப்பிரம்மத்தைப்

29. பிறதெக்ஷணம் வந்து யெனகுருசாமியே யெனக்கு நடக்க வேண்டிய பணியிடை யெவ்வாவென்று கேட்க அப்போ

30. து செகத்துக்குப் பஞ்சபூதசராசரங்கள் நேமிக்க யென்று சொல்ல அப்போது பிரம்மாவானவர் யெனக்கு இது தெரியுமோ

31. வென்று கேட்க அப்போது சராசரங்கள் நாம் முடிக்கிறோம் நீயான் யென் னென்று உண்டு பண்ணி விடுமென்று சொல்

32. ல அப்போது அதுக்குப் பதில்ச் சூத்திரமுடிக்கத் தந்தாவம் தப்படிக்கு நடப்பிவிக்கிறே னென்று கேட்க அப்படியே ஆவிடை

33. யாரும் லிங்கமும் செய்து கொடுத்து கருபம்யென்னை போலேயும் அவன் கன்னனைப் போலேயும் படையுமென்று சொன்னாரப்

34. படியே படைத்தார் விசுவப் பிரம்மாவும சராசரங்கள் கட்டு நாபாய்கள் ளெல்லாம் நேமித்து அதுகளுக்கு அனந்தம் தேவதையாளும்

35. அனந்தம் தலங்களையும் உண்டு பண்ணிவித்து செகத்தைப பாகதிற நிமித்தியம் மகாமேருகிரியிலே நின்று நிரமபூதலைபறசு அ

36. ப்போது தென்றிசை உசந்திருந்துது அப்போது அகஸ்தியமாமுனியை தெகஷிண திசைக்கு அனுப்பிவிக்க அவர் முனியீசுபர

37. ரிசியன் தேவதையள் முப்பத்து முக்கோடி தேவர்களிருக்க நாம் அவர்களைப் பாற்கப் பெரியவனோ வென்று கேட்க விசுவப்பிரம

38. மா இருந்து அவர்களைப் பார்க்க நீர் மெத்தக்கஷ மென்று சொன்னார் அது நாமறிய வேணுமென்று கேட்க அப்போது தராசு

39. உண்டுபண்ணித் தேவர்கள் நடைகோடி சித்தாதியள் ஒரு தட்டிலேயும் அகஸ்தியர் ஒரு தட்டிலேயும் வைத்து நிறுக்க அகஸ்தியர் கன

40. மாயிருந்தார் அகஸ்தியர் யென்முகம் நான் கண்டாலப்போலேயே யென்று சொல்ல அப்போது கண்ணாடி நேமித்து நாயப்பிசத்தில் நாபி

41. ச ளுண்டாக்கி யெடுத்துக் காண்பிக்கப் பண்ணினாரப்போது அகஸ்திய மாமுனியும் பொதியமாமலைக்குப் போய்ச் சேர்ந்தாரப்போது

42. பிரம்மதேவர் விசுவப்பிரம்மாவை நோக்கிச் சராசரங்கள் சறுவசீவ செந்துக்கள் படைக்கப் படாநின்ற பேருண்டாச்சுது உலக

43. பாவினை தாரமென்னும் மக்களென்றும் மாதா பிதா வென்று முறைவெளி வரம்பு செய்தவர் கெங்கை யமுனை சரசுபதி துங்கபத்

44. திரி நற்மதை கோதாபுரி காவேரி யெனகிற சத்த நதிகளும் சத்த சாகரஙகளும் நேமித்து சுரவி சிந்தாமணியுஞ் சத்தமேகங்களை

45. பூம நேமித்து வான்பரியாகக் கொண்டவன் பராசக்தி வடிவானபடியினாலே அந்தப் பராசக்தியாகிய வலவியை வல்லிமாலை யெ

46. றைணிந்தவன் இருவகையாகிய ஆணையும் பெண்ணையும் காமாயகை யுண்டாக்கின படியினாலே தெய்வ நட்டுவராய

47. னென்று கொண்டவன் சாதிபேதங்களும் வேற்றுமையான ஆடையா பரணங்களும் வேத்துமையான தொழில்களும் கன்

48. டவன் இருவகைச் சாதிக்கும தன்னுடைய கருவியினாலே மானபங்கம் வாராதபடிக்கு ஆடை கண்டவன் ஆதியில் பிரம்மா

49. வுக்குத் தொப்புளுக்க கருவிகண்டவன் வெள்ளிபொன் பஞ்சலோகமுங் கண்டவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறி

50. யாதபடிக்குத் திருமங்கிலியங் கண்டவன் மாகூட கோபுர முப்புரிகை சிவாலையங்கள் கண்டு அதுகளுக்குத் தேவதை

51. யளும் கண்டவன் ஒன்பது வகைகாரற்றினா னாதியுங் கண்டவன சந்திரனுக்கும் சூரியனுக்கும் மன்மதனுக்கும் தேய்வேந்திரனுக்

பின்பக்கம்

52. குத்திட்டித்து அஞ்சுபொன் குடுத்து இவர்களை மருமக்கமாரென்று கண்டவன் ஒரு காலத்திலே சூரியனை அச்சிலோட்டிக் கடை

53. ந்தவன் ராமராயி இலங்காபுரிக்கு அனுமனையனுப்பி அக்கினிபிறவேசம் பண்ணுகிறபோது விசுவப்பிரம்மாத்தியா

54. னித்து அனுமந்தனு மந்திரவிதியிலகப்பட்டுக் கொண்டு அனுமக்கொடி அன்று வாங்கிப் போகண்டவன் அக்கசாலையன் கா

55. விகாதேவி வரப்பிரசாதியள் வாயுளானை வென்றவன் கடவண்டச்ச அனுமந்தன் பிரமாண்டமான பறுவதங்களை இருகையாலெ

56. டுத்துலர விளுசிக்கோயாலே தாங்கி அணைகண்டவன் வாராணைக்காக ஈஸ்நாகிய நந்தனைக் கருணசாதியுருக்க கவட்டந்

57. ந்தல் கண்டவன் தெலுங்கராகிய பட்டணசெட்டிக்கு மானபங்கம் வராதபடிக்கு பொற்பாளைசெய்த பாண்டியனைச்

58. செயங்கொண்டவன் சத்தசமுத்திரததிலத தேவர்களுக்காக அமுர்தங்கண்டவன நிராமயமாகிய ஆத்மிகவபிரம்ம

59. த்தினுடையாரான பாசமையாதிபதி மேகவாகனனுடைய சூத்திரமாயகையும் அவர் பெருமையும் அருமையும் முக்கிய

60. மும் ஆகமபுரான சாத்திரங்கள் காவியங்களிலேயும சொல்லவந்தான ஆதிவிகலப் பிறமமாகிய பாசமைபாத பங்கய மறவா

61. த விசுவகோத்திரத்திலுதித்த சிவகெங்கையிலிருக்கும் அஞ்சுசாதி எளுபத்து நாலாகணத்து உறவின்முறையாரும் மேற்குத்

62. திசை அஞ்சுசாதி எளுபத்து நாலாகணத்து உறவின் முறையாரும் வடக்குதிசை அஞ்சுசாதி எளுபத்து நாலு ஆக் கணத்து உறவி

63 ன் முறையாரும் கீளதிசை அஞ்சுசாதி எளுபத்து நாலா கணத்து உறவின்முறையாரும் தென்திசை அஞ்சுசாதி எளுபத்து நாலாக

64. ணத்து உறவின்முறையாரும் இந்த நாலு திசையிலுள்ள அஞ்சுசாதியாரும் சிவகெங்கை அக்கசாலை விளாபுகவ கோவில்

65. சன்னதியில் உறவின் முறையனவோரும் குண்டோதர முகனில் அருமைபனாகிய மாளர் தெய்வேந்திரக் குடும்பக

66. னில் செருடக்குடையும் வெள்ளைக்குடையும் பஞ்சவறணப் பாவாடையும் சத்தகருள்ளும் நெல்லுபித்து விரைப

67. ம் உண்டாக்கிய அக்கசாலைக் குடும்பகளில் அஞ்சைப்பள்ளு அசைசப்பள்ளு மங்கலநாட்டுப் பள்ளு கோத்திரப்

68. ள்ளு பட்டணக்கரைப்பள்ளு செளுவைப்பள்ளு சிளுவைபள்ளு குடவப்பள்ளு கொங்குநாட்டுப்பள்ளு குட

69. நாட்டுப்பள்ளு பாண்டிப்பள்ளு சோளியப்பள்ளு கடையப்பள்ளு கோலியப்பள்ளு அம்மைபபள்ளு செல்லூர்ப்பள்

70. ளு வரிசையூர்ப்பள்ளு மற்று முண்டாகிய எச்சாதி இவர்களில் தெக்கு வட்டகை பாத்திபசேகரநல்லூர் நயினாக் குடும்பன்

71. சோழாத்தூர் அக்கசாலை செகவீரரெகுனாத குடும்பன் மேல்பசனை நம்பியாக்குடும்பன் கீள்பசனை ஆழகுமாணிக்

72. கக்குடும்பன் வானரவீரமதுரை ரெகுனாதக்குடுமபன் செல்வனத்தூர் உலகக்குடும்பன் ராசகெம்பீரன் காங்கைய

73. க்குடும்பன் மேல்வட்டகை திருப்புவனம சித்திரக்குடும்பன் பெருமானூர் கபிலாசக்குடும்பன் மாறுனாடு தெய்வக்

74. கன்னிக்குடும்பன் கண்டிகை குடும்பன் திருப்பாசத்தி அரசக்குடும்பன் இடைக்காட்டூர் பிறைவாய்க் குடும்பன பெ

75. ரியகோட்டை கறுபபக்குடும்பன் வேம்பத்தூர் மெய்யக் குடும்பன் சோளபுரம் ஆண்டிக்குடும்பன் உஞ்சனை முதலி

76. அடைக்குடும்பன் குருந்தம்பட்டு உசிலக்குடும்பன் திருப்பத்தூர். . . பாகனேரி . . . பூங்குடி

77. . . . செம்புனமாரி . . . ன கிசாக்கு வட்டகை இளையாங்குடி ராமநாதக்குடும்பன் ஆயூராற சூரியக்குடும்ப

78. ன நெட்டூர் நட்டுராமக்குடுமபன் இமனீசுரம் ரெகுனாதக் குடும்பன் காடனேரி ரெகுனாதக் குடும்பன ஆனந்தூர் ரெகுனாத

79. க்குடும்பன் ராநாஞூர்ச் சேதுக்குடும்பன் உருவாட்டி செல்லக் குடும்பன் மங்கலம் ரெகுனாதக் குடும்பன் கணவானூர

